206

புதுமை



MADRAS

JL
ma2111,N57PI
N57.1.3
197687

அக்டோபர் 1, 1957

25 நயா பைசா

உழவுக்கும் தொழிலுக்கும்



வந்தனை செய்வோம்

டி.வி.எஸ். ஸ்தாபனங்கள்

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ்
பிரைவேட் லிட்.
மதுரை - திருச்சி - திருநெல்வேலி
புதுக்கோட்டை - சேலம் - கோயம்புத்தூர்

மதருஸ் ஆட்டோ ஸர்வீஸ் பிரைவேட் லிட்.
மதருஸ் - பெங்களூர்

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிட்.
மதுரை

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிட்.
மதருஸ்-6

தி மதராஸ் மோட்டார் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி லிட்.
மதருஸ்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிட்.
புதுக்கோட்டை - மதருஸ்

இந்தியா மோட்டார் பார்ட்ஸ் & ஆக்ஸஸரீஸ்
பிரைவேட் லிட்.
மதருஸ்-2

சுந்தரம்ஸ் பிரைவேட் லிட்.
மதுரை

சுந்தரம் பைனான்ஸ் பிரைவேட் லிட்.
மதருஸ்-2

TVS

சுந்தரம் காபியின் சேவை உங்களுக்கு.

SUNDARAM'S.

100% பியூர்

COFFEE

100% சுத்தமானது

Best Quality

&

Flavour & Taste

AIR. No. 152692.

சுந்தரம் காபி பொது மக்களின் ஆதரவினுல் சென்ற ஒன்பது ஆண்டுகளாக வளர்ந்து வரும் ஸ்தாபனம்.

இந்திய சர்க்கார் கலப்பட சட்டத்திற்குட்பட்டது.

விஞ்ஞான முறைப்படி மின்சார யந்திரத்தினுல் சுகாதார முறைப்படி உயர்தரமான காப்பிக் கொட்டையினுல் தயாரிக்கப்படுகிறது.

சுந்தரம் காபி & ஜெனரல் சப்ளைஸ்

தி. நகர். : : சென்னை—17



எங்கள் 40 குச்சி கோபுரம் மார்க், சிம்கோ லைட் மார்க், சிம்கோ சைகிள் மார்க், மைனர் சைஸ் சீறு லேடி மார்க்
60 வேட்டை சிங்கம் மார்க்
தீப்பெட்டிகள்.

கடற்கரை குளிர்ப்பிரதேசங்களுக்கும், மற்றும் மலபார் மழைக்கும் உகந்தது.

சிறந்த விதமான சரக்கு உற்பத்தி !

சிறப்பான பொதுஜன ஆதரவு

தினம் குடிசைத் தொழிலாகத் தயாராகும் 3300 குரோஸ்கள் தீப்பெட்டிகளும் எங்களுடைய டெப்போக்களிலேயே செலவாகின்றன.

சிம்கோ :: :: சிவகாசி S. I.

போன் : 63

தந்தி : *SIMCO*

Authorised Distributors for

B & C
&
METTUR MILL GOODS

Stockists of :—

High Class English Fabrics, Hand-loom Cloths and Ready made Goods

PANDIAN STORE,

34, VILLAGE ROAD,
NUNGAMBAKKAM : MADRAS-6.

பொருளடக்கம்

"மாற்றி வையம் புதுமை யுறச்செய்து
மனிதர் தம்மை அமரர்களாக்குவோம்"

மணி 1	அக்டோபர் 1, 1957	ஓசை 3

			பக்கம்
அரசியல் :			
முதுகுளத்தூரிலே !		...	5
பண்டாவின் கெடுபிடி		...	7
என். ஜி. ஓ. பிரச்சனை		...	8
உலகைச் சுற்றி		...	10
பாரதி விழா		...	14
அட்டைப்பட விளக்கம்		...	12
தொடர் கதைகள் :			
காமனை வென்ற கண்	சுகி	...	18
வள்ளியின் உள்ளம்	கு. ப. சேது அம்மாள்	...	49
கதைகள் :			
பஞ்சு பறந்தது	ஐ. சாமிநாதன்	...	31
கொலைக்குப் பின் !	கே. ரகுபதி	...	37
என்ன கதை ?	சிட்டி	...	71
பெண் மனம்	ஆர். சூடாமணி	...	82
கட்டுரைகள் :			
அவர் காட்டும் வழி	பி. ஸ்ரீ.	...	61
முதல் இதழ் விமர்சனம்	எம். சினி	...	93
நாடகம் :			
ஆராய்ச்சி அரோகரா	ராஜன்	...	77
கவிதைகள்			
அவன் வாழ்க	'பாசொலி'	...	13
சிறுவர் பகுதி			
உடைந்த பம்பரம்	ஜெ. எத்திராஜன்	...	65
கலைப்பகுதி			
நகைச் சுவை நடிகர் என். எஸ். கே.		...	11
ராணி லலிதாங்கி	ஜாய்ஸ் பொன்னையா	...	89

'புதுமை'யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

Telegrams : 'RANGAVILAS' Telephone : 17 & 817

SRI RANGA VILAS GINNING, SPINNING & WEAVING MILLS LIMITED.

(Incorporated in 1922)

PEELAMEDU P. O. COIMBATORE

SPINDLES	: :	36,368
LOOMS	: :	88

SPINNERS OF :

Superior kinds of yarn from 2^s to 80^s counts

&

WEAVERS OF :

Grey Gada and Dhoties.

Managing Partner :—

G. N. VENKATAPATHY.

197687

புதுமை

ஆசிரியர் :
கோசல்ராம்.

நிர்வாக ஆசிரியர் :
P. X. ரங்கசாமி, B.A.,

சென்னை — 1—10—57 — அக்டோபர்

முதுகுளத்தூரிலே!

இராமநாதபுரம் ஜில்லாவில் முதுகுளத்தூர், சிவகெங்கை, மானுமதுரை தாலுக்காக்களில் வகுப்புப் பூசல் காட்டுத் தீ போல் பரவி, நூற்றுக்கணக்கான வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றன. குழந்தைகளும் மாதர்களும் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர். இதைக் கண்டு தமிழனின் உள்ளம் பதைபதைக்கின்றது. பாரதப் பிரதமரும், உள் நாட்டு அமைச்சர் ஸ்ரீ பந்தும், இப்பூசலுக்குக் காரணமாக இருக்கும் விஷக்கிருமிகளைக் கண்டு பிடித்து அவைகளை அடியோடு நசுக்க வேண்டுமென எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

முதுகுளத்தூர் அசெம்பிளித் தொகுதிக்கு சமீப காலத்தில் நடைபெற்ற உபதேர்தலில் காணப்பட்ட ஊழல்களையும், கையாளப்பட்ட பலாத்காரங்களையும், தேர்தலில் காங்கிரஸுக்காக வேலைசெய்த ஊழியர்களின் காதுகள் அறுக்கப்பட்டதையும் அவர்களுடைய வீடுகள் நெருப்பு வைக்கப்பட்டு நிர்மூலமாக்கப்பட்டதையும் விவரித்து, பசும்பொன் திரு. முத்துராமலிங்கத் தேவர் செய்த ஆவேசமான பேச்சுக்கள், அப்பாவியான பாமர மக்களிடம் ஜாதிவெறியை ஊட்டி, பலாத்காரத்தைத் தூண்டியதோடு, வருகிற கந்தசஷ்டிக்குள் சுபாஷ் பாபு இங்கு வந்து நமது நாட்டைப் பிடித்து விடுவாரென்றும், அதன் பின்னுல் தான் தான் இந்நாட்டை ஆளப்போவதாகவும், வேல் கம்புகள், அரிவாள்கள் சகிதம் கூடியிருந்த சுமார் ஏழாயிரம் மக்கள் மத்தியில் கூறி, அவர்களிடம், 'உங்களை யாராவது வந்து தொட்டால் என் வசம் இருக்கும் அணுக்குண்டுகளை வீசி அவர்களைத் தொலைத்து விடுவேன். நீங்கள் யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை. நமது மறவர் நாட்டில் வசிக்கும் ஏனையவர்கள்,

காங்கிரஸுக்கு வோட்டுப் போட்டால், சென்ற தேர்தலில், காங்கிரஸுக்கு வோட்டுப் போட்டவர்களுக்கு ஏற்பட்ட கதிதான்" என்று பேசியதை குறிப்பிட்டும், அத்தேர்தலில் அபேட்சை மனு தாக்கல் செய்திருந்த திரு. வி. அருணகிரி பிள்ளை தேர்தல் கமிஷனுக்கு தேர்தல் ஆட்சேப மனு வொன்றை அனுப்பி யுள்ளார். சர்க்கார் கெஜட்டில் வெளியான (Fort St. George Gazette Part V-Extraordinary Sep. 13, 1957) இம்மனுவை வாசகர்கள் படித்துப் பார்த்தால் சில உண்மைகளை நன்கு அறியலாம்.

இத்தகைய திரு. முத்துராமலிங்கத் தேவர், ஒரு பக்கத்தில் ஜாதிவெறியையும், நேதாஜியின் பெயரையும் உச்சரிக்கிறார்; மற்றொரு பக்கத்தில் முருகக் கடவுளைச் சொல்லி ஆஸ்திகப் பிரசங்கம் செய்கிறார். அவர் தன் சுய நலத்திற்காக ஜாதி வெறியை யூட்டி, தவறான வழியிலே மக்களை அழைத்துச் செல்லுகிறார் என்பதற்கு கீழே ஒரு சான்று தருகிறோம்.

கோவில்பட்டி தாலுகா, விளாத்திகுளத்திற்கு அருகே ஜூன் முதல் வாரத்தில் நடைபெற்ற மறவர்கள் சங்க கட்டிடத் திறப்புவிழாக் கூட்ட மொன்றில் பேசும் பொழுது திரு. தேவர், 'நீங்கள், வீர மறவர் குலத்தில் பிறந்தவர்களாக இருந்தால், இந்த அநாதைகள் நடத்தும் சர்க்காரின் பள்ளிக்கூடங்களுக்குப் போகாதீர்கள். அவர்கள் கொடுக்கும் உதவிப் பணத்தை வாங்காதீர்கள்' என்று படித்தவர்களும் பாமரர்களும் நிறைந்திருந்த கூட்டத்தில் பேசினார் என்றால், இவரது போக்கைப் பற்றியும் மனப்பான்மையைப் பற்றியும் எத்தகைய அபிப்பிராயம் கொள்வது என்பதை வாசகர்களின் விருப்பத்திற்கு விட்டு விடுகிறோம்.

ஜாதிக் கலவரத்திற்கு முற்றுப் புள்ளி வைக்க அதிகாரிகள் கூட்டிய சமாதான மகாநாட்டில், மறவர் குல மக்களின் பிரதிநிதியென்று திரு. தேவர் கையொப்பமிட்டிருக்கிறார். ஹரிஜனங்களின் பிரதிநிதியாக, ஹரிஜனத் தலைவர் திரு. இமானுவேல் சேகரன் கையொப்பமிட்டிருக்கிறார். அதிகாரிகள், பொது மக்கள் முன்னிலையில் சமாதான மகாநாட்டில் திரு. தேவர், திரு. இமானுவேல் சேகரனைத் தாறுமாறாகப் பேசியதாகக் கூறப்படுகிறது. திரு. இமானுவேல் சேகரன் கையெழுத்திட்ட மை உலருவதற்குள், அந்தோ! அவர் பரிதாபகரமாகப் படுகொலை செய்யப்பட்டார். அன்று முதல்தான் முதுகுளத்தூர் பகுதி கொலைக்களமாக மாறிவிட்டது!

உண்மை இவ்வாறிருக்க, காங்கிரஸில் பதவி இடைக்காததால் அதிருப்தி யடைந்து, காங்கிரஸைச் சீர்திருத்தம் செய்யப் போகிறோமென்று சொல்லுகிற ஒரு சிலரும், நாட்டில் பச்சோந்தி போல் காட்சியளிக்கும் கம்யூனிஸ்டுகளும், பத்திரிகா தர்மத்தையே மறந்து, எதை வேண்டுமானாலும் எழுதலாமென எழுதும் சில பத்திரிகைகளும் சேர்ந்து இக்கலவரத்திற்குத்

தூபம் போடுவதுதான் மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. தேர்தல் சமயத்தில திரு. முத்துராமலிங்கத் தேவர் சென்னையில் செய்த ஆவேசப் பிரசங்கங்களுக்கும் பத்திரிகைகள் ஆதரவு கொடுக்கத்தான் செய்தன!

சென்ற பொதுத் தேர்தல் முடிவடைந்து ஒரு வாரத்திற்குள் கொள்ளை, களவு, தீ வைத்தல், விவசாயத்தை அழித்தல், ஆடு மாடுகளைக் கடத்திச் செல்லுதல், மனிதர்களை வெட்டி அங்கஹீன மாக்குதல், குடி தண்ணீர்க் கிணற்றில் மண்ணெண்ணெயை ஊற்றுதல் இன்னும் இவைபோன்ற சுமார் தொண்ணூற்றேழு வழக்குகள் வரை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வந்தும், சர்க்கார் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை யென்ற குற்றச் சாட்டை சர்க்கார் மீது சுமத்தி, அப்பகுதி மக்கள் துண்டு பிர சுரங்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

தவிர, இந்த கலவரப் பிரதேசங்களெல்லாம் பெரும்பாலும் ஜமீன் பகுதிகளைக் கொண்டவை. பெரும்பாலான கிராமங் களுக்கு அதிகாரிகளோ, மற்றவர்களோ போவதற்கு எந்தவித மான போக்கு வரத்து வசதிகளும் கிடையா. சர்க்கார் எடுத் திருக்க வேண்டிய துரிதமான நடவடிக்கைகளை சரியான சந்தர்ப் பத்தில் எடுத்திருந்தால், இத்தகைய படுகொலைகளையும், துப்பாக்கிப் பிரயோகங்களையும், ஜாதி வெறியையும் தவிர்த் திருக்கலாம்.

இக்கலவரங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி யாக அரசாங்கம் நிவாரணம் அளிப்பதோடு, எதிர் காலத்தில் இவ்வித அசம்பாவிதமான சம்பவங்கள் அங்கு நடைபெரு வண்ணம் பார்த்துக் கொள்வது அரசாங்கத்தின் கடமையாகும். செழிப்பற்ற இப்பிரதேசத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை வளமடைய பலவிதங்களில் சமூக நலத் திட்டங்களைப் புகுத்த வேண்டும். ஜனநாயகத்தின் அடிப்படைக் கொள்கைகளை விளக்கியும், 'எல்லோரும் சகோதரர்கள். எல்லோரும் சமமாகவாழ உரிமை யுண்டு' என்ற அறநெறி மக்கள் மனதில் வேறூன்றும் படி செய்ய அரசாங்க மட்டுமல்ல, தனிப்பட்டவர்களும் உழைத்தல் வேண்டும்.

பண்டாவின் கெடுபிடி

இலங்கைப் பிரதமர் ஸ்ரீ பண்டார நாயகா, இலங்கையைத் தசயகமா கக் கொண்ட இந்தியர்கள் பற்றிய அவருடைய கருத்தைக் காலஞ்சென்ற சேனநாயகா அமைச்சரவையில், சாதாரண அமைச்சராக இருந்த காலத் தில் கூறியிருக்கிறார். அவர், எதிர்க்கட்சித் தலைவராக இருந்த பொழுது டில்லியில் நடைபெற்ற நேருஜி—கொத்தலேவாலா பேச்சின் போது கலந்து கொண்டு மிருக்கிறார். நேருஜி-கொத்தலேவாலா ஒப்பந்தம் கையெழுத் தாகுமுன் பல தடவைகள் படித்து மிருக்கிறார். அந்த ஒப்பந்தம் அவரு டைய அர்சாங்கத்தில் தான் இருக்கிறது.

ஒப்பந்த காலத்தில், இலங்கையைத் தாயகமாகக் கொண்டு, இலங்கைப் பிரஜைகளாக விரும்புபவர்களை எக்காரணம் கொண்டும், இந்திய பிரஜையாகக் கருதவும் மாட்டோம், பதிவு செய்யவும் மாட்டோமென்று இந்திய பிரதமர் நேருஜி தெள்ளத் தெளிவாகக் கூறியிருக்கிறார். ஒப்பந்தத்தில் இதுபற்றிய ஷரத்து இருக்கிறது என்று நம்புகிறோம். ஆனால் இந்தியப் பிரஜையாகவோ, இலங்கைப் பிரஜையாகவோ, இல்லாமல் நாடற்றவர்களாக இருக்கும் இந்திய வம்சா வழியினர்களுக்கு ஆசை சலுகை இவைகளைக் காட்டி, இவைகளை ஒப்புக்கொள்கிறவர்களை வெளியேற்றுகிறோமென்று இலங்கை அரசாங்கம் கூறியது. உடனே அதை ஒத்துக் கொள்ளாததுடன், நாடற்றவர்களாக இருக்கிறார்களென்பதற்காக அவர்களை இந்தியர்களாக ஏற்றுக் கொள்ளக் கூடாதென்று இலங்கையிலுள்ள இந்திய ஹைகமினருக்கு உத்தரவுமிட்டிருக்கிறார்கள்,

இக்நிலையில் பண்டார நாயகாவின் இப்போதைய நடவடிக்கை, இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்படாத இந்திய வம்சாவழியினர்களை இந்தியப் பிரஜைகளாக கருதப்பட வேண்டுமென்று சொல்வது ஒப்பந்தத்தை மீறியதும், தர்ம-நியாயத்திற்கும் விரோதமானது, அபத்தமானதுமான செயலாகும். இந்தியர்கள், அன்றும், இன்றும், என்றும், இலங்கையை அடிமையாக்க கனவிலும் நினைத்தவர்கள் அல்ல.

வெள்ளையர்கள் ஆட்சிகாலத்தில் இலங்கையும், சென்னை மாகாணமும் சென்னை கவர்னரின் நிர்வாகத்தின் கீழ், ஆரம்பகால முதல் இருந்து வந்தது. அக்காலத்தில், ஒரே நிர்வாகத்தின் கீழுள்ள மற்றொரு பகுதியான இலங்கையிலுள்ள காடுகளைத் திருத்தி நாடாக்குவதிலும், மண், மலைகளையெல்லாம் பொன்கொழிக்கும் நாடாக மாற்றியமைப்பதிலும், இந்தியர்கள் பல தலைமுறைகளுக்கு முன்னால் சென்று இரத்தம் சிந்திப்பாடுபட்டு, இலங்கை அரசாங்கத்தின் வருஷ வருமானத்தில் சுமார் 100 கோடி ரூபாய் வரை வருஷா வருஷம் தேயிலை, ரப்பர்த் தோட்டங்கள் மூலம் வருமானம் தேடிக்கொடுத்து வந்தவர்கள்-வருகிறவர்கள், இன்று இலங்கை அரசாங்கத்தின் சட்டத்தினாலும், நிர்வாகத்தின் கெடுபிடியாலும் நாட்டற்றவர்களாக காட்சியளிக்கிறார்கள்.

இவ்விதம் இலங்கையைப் பொன்கொழிக்கும் நாடாகச் செய்வதற்கு மூலதனம் வைத்து தொழில் நடத்தியவர்களையும் வாணிபம் செய்தவர்களையும் சமீபத்தில் இந்தியாவுக்குத் திருப்பியனுப்பக் கெடிபிடிகள் செய்வதாக அறிகிறோம். இம்மாதிரி செய்வது நன்றி கெட்டத் தனமானதுடன் நேருஜி-கொத்தலைவாலா ஒப்பந்தத்தை அவமதிப்பதாகும். இக்நிலையில் ஒப்பந்தத்தில் கண்டிருப்பதாகச் சொல்வதுபடி இலங்கையில் மூலதனம் போட்டிருப்பவர்களுக்கு அனுமதிச் சீட்டுகளைத் தாராளமாக வழங்குவது தான் நியாயப்புத்தியுள்ள அரசாங்கத்தின் கடமையாகும். இக்நிலையில் பாரதப் பிரதமர் நேருஜி தன்னுடைய கொள்கையில் உறுதியாக இருப்பாரென்று நம்புகிறோம். இலங்கையைத் தாயகமாகக் கொண்டுள்ள இந்தியர்கள்-குறிப்பாகத் தமிழர்கள் இலங்கைக்கு விஸ்வாசமாக நடந்து இலங்கையின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு, தங்களுடைய பிறப்புரிமையை அடைவதற்கு உறுதி கொள்வார்களென்றும் நம்புகிறோம்.

என். ஜீ. ஓ. பிரச்னை

சென்ற இதழில், என். ஜீ. ஓ. களின் குறைகளை நன்கு தெரிந்தவரும், அவர்களுக்கு இடைக்கால நிவாரணம் கிடைக்கக் காரணஸ்தராக இருந்தவருமான ஸ்ரீ. டி. டி. கிருஷ்ணமாச்சாரி, அவர்களுடைய குறைகளை நிச்சயமாய்த் தீர்த்து வைப்பாரென்று நம்பிக்கைத் தெரிவித்தி

ருந்தோம். மத்தியில் வந்த செய்திகள் ஸ்ரீ. டி. டி. கே. தட்டிக் கழிக்கிறார் என்ற முறையில் இருந்தது. ஆனால் பாராளுமன்ற விவாதத்தின்போது நிதி மந்திரி ஸ்ரீ. டி. டி. கே. பதிலளிக்கையில், ராஜ்ய சர்க்கார்கள் தங்களுக்கு எவ்வித சிபார்சுகளும் அனுப்ப வில்லை யென்றும், சிபார்சுகள் வந்தால், நிச்சயமாக என். ஜி. ஓ. களின் குறைகளைத் தீர்க்க ஆவன செய்வதாகக் கூறியது நமக்கு ஆறுதலை அளிக்கிறது.

ராஜ்ய சர்க்காரின் மந்திரிகள் பத்திரிகைகளில் தம்பட்டம் அடிப்பதோடு நின்று விடாமல், தங்களிடம் வேலை செய்யும் ஊழியர்களின் குறைகளை நீக்க, ராஜ்ய சர்க்கார்களின் நிதி நிலமை திருப்திகரமாக இல்லை யென்று கூறுவதை நிறுத்திவிட்டு, பாரதப் பிரதமர் நேருஜி சர்க்கார் ஊழியர்களுக்குள் இருக்கும் சம்பள வேற்றுமைகள் நீங்க வேண்டுமென்று கூறியதை அடிப்படையாகக் கொண்டு, மத்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டும்.

மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம் கிடைத்தால், தம் ஊழியர்களுக்கும் அம்மாதிரி இடைக்கால நிவாரணம் அளிக்க ஆவன செய்வதாக ராஜ்யசர்க்கார் கூறியதைப் பற்றி மிகவும் சந்தோஷமடைகிறோம். இதற்கேற்றாற் போல், நிதி மந்திரி ஸ்ரீ. சுப்பிரமணியமும், மத்திய சர்க்காரைக் கேட்கப் போகிறோமெனச் சொல்வதுடன் நின்று விடாமல், காரியாம்சத்தில் செய்து காட்டும்படிக்கேட்டுக் கொள்கிறோம்.

இங்கிலையில் என். ஜி. ஓ. கள் சமீபத்தில் அம்பாசமுத்திரத்தில் நடத்திய மகா நாட்டில், சிலர் பொறுப்பற்ற முறையில் பேசியதைக் கண்டு மிகவும் வருந்துகிறோம். சங்கத்தின் காரியதரிசி என்ற ஒருவர், 'ஆள்பவர்கள் நாம், நம்மை அதிகாரம் செய்வதற்கு அமைச்சர்களை விட்டுக் கொண்டிருக்கிறோம்' என்று பேசியிருப்பதாக பத்திரிகைச் செய்திகளில் வெளி வந்திருக்கிறது. இது உண்மையானல், மக்கள் ஆட்சி நடப்பதை மறந்து பேசும் இம்மாதிரியான பொறுப்பற்றவர்களை மத்திய சங்கம் கண்டிக்குமென நம்புகிறோம்.

நன்றி அறிவிப்பு.

எனது கார் விபத்துக்குள்ளானது பற்றியும், எனது உடல் நலனைப்பற்றியும் விசாரித்து கடிதங்கள் எழுதிய ஆயிரக் கணக்கான நண்பர்களுக்கும், வாசகர்களுக்கும் எனது நன்றி. நான் நல்ல சுகத்துடன் இருக்கிறேன். தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் பதில் எழுத முடியாமை பற்றி மன்னிக்கவும்.

கோசல்ராம்,
ஆசிரியர்.



வாழ்க மலேயா !

சென்ற ஆகஸ்ட் மாதம் 30-ந் தேதி மலேயா நாடு ஆங்கில ஆட்சியினின்றும் விடுபட்டு சுதந்திரமடைந்தது. பாரத தேசம் விடுதலை பெற்றபின் இந்நாடு பன்னிரண்டு ஆசிய நாடுகள் சுதந்திரம் பெற்றிருக்கின்றன.

மலாய் நாடு ஒன்பது சுல்தான்களின் மாகாணங்களும், நேரடியாக ஆங்கில நிர்வாகத்திலிருக்கும் பினங்கு மலாக்கா பிரதேசங்களும் அடங்கியது. முப்பது லட்சம் மலாய்க்காரர்களும், இருபத்து மூன்று லட்சம் சீனக்காரர்களும் ஏழரை லட்சம் இந்தியர்களும் அங்கு வாழுகின்றனர்.

ஈழநாட்டைச் செழிக்கச் செய்தது போலவே இந்நாட்டையும் அபிவிருத்தி செய்ததில் இந்தியர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. மலேயாவில் பிறந்து அங்கே ஐந்து வருடங்கள் வசித்திருப்பவர்களுக்கும், குடியேறி எட்டு வருஷங்கள் தங்கியிருந்தவர்களுக்கும் பிரஜா உரிமை உண்டு.

நூறு பேர்களைக் கொண்ட மக்கள் சபையும், முப்பத்தெட்டு பேர்களைக் கொண்ட மேல் சபையும் உண்டு. 'பிரதான மந்திரி'யின் தலைமையில் நிர்வாகம் நடத்தப்படும். இப்போது அந்தப் பதவியேற்றுள்ளவர் ஸ்ரீ துங்கு அப்துல் ரஹ்மான் என்பவர். மலேயா பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் அங்கத்தினராக இருக்குமென்று அறிவித்திருக்கின்றனர்.

ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தின் அங்கத்தினராக மலேயா ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஸ்தாபனத்தில் இதுவரை எண்பத்திரண்டு நாடுகள் அங்கத்தினராகச் சேர்ந்திருக்கின்றனர்.

வாழ்க மலேயா !

ஸ்ரீ ஹாமர் ஷீல்டு மீண்டும் தேர்வு

ஐக்கிய நாடுகள் சபை ஏகமனதாக ஸ்ரீ ஹாமர் ஷீல்டை மீண்டும் காரியதரிசி—ஜெனரலாக தேர்ந்தெடுத்துள்ளது. ஸ்வீடன் தேசவாசியான அவர் 1953 முதல் இப்பதவி வகித்து வருகிறார். மீண்டும் 5 வருடங்கள் 1958 ஏப்ரல் வரை பதவி வகிப்பார். எல்லா தேசங்களும் அவரைப் பாராட்டி தேர்ந்தெடுப்பதே அவரது நடுநிலைக்கும், திறமைக்கும் எடுத்துக்காட்டாகும். உலக சமாதானத்துக்கு அவரது சேவை மேலும் பயன்பட வாழ்த்துகிறோம்.

அறிவிப்பு

விமர்சனத்துக்கு புத்தகம் அனுப்பும் போது இரண்டு பிரதிகள் அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்.

—ஆசிரியர்.

"புதுமை" முதல் இதழின் விமர்சனம்

முதல் பரிசு பெற்றவர் கட்டுரை 93-ம் பக்கத்தில் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது.

எழுதியவர்:

எம். தேவசகாயம் (சீனி)
45, சாணியான் குளத்தெரு,
திருச்சி 2.



நகைச்சுவை நடிகர்

என். எஸ். கிருஷ்ணன்

தோற்றம் : 29-11-1908 மறைவு : 30-8-1957

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனின் மரணம் தமிழ் நாட்டின் ரசிக பெருமக்களை துக்க சாகரத்தில் ஆழ்த்தி விட்டது. அவருடைய கடைசி யாத்திரையின் போது அன்னாரின் பூத உடலைப் பார்ப்பதற்காகத் துடியாய்த் துடித்த லட்சக் கணக்கான மக்களே இதற்குச் சான்று.

கலைவாணர் இறந்த செய்தி கேட்டவுடன் நடிகர்களில் சிலர் மயங்கி வீழ்ந்தார்கள். டி. ஏ. மதுரம் அம்மையார் துயரமே உருவாகக் காட்சியளித்தார்கள்.

கட்டிலிலும் தொட்டிலிலும் அவரைக் கண் வளரத் தாலாட்டின அவருடைய தாயார் துயர்தான் அளவிட்டுக்கூற முடியும்? அவரை வாழ்க்கைத் துணைவனாக ஏற்றுக் கொண்டு, இருபது வருஷமாக மனம் நொந்து வாழ்ந்த அவருடைய மனைவி நாகம்மா கடல் மடை திறந்தாற் போல் கண்ணீர் வடித்த சோகக் காட்சியைக் கண்டு கலங்காதவர்களே இல்லை. தமையனை யிழந்த திரவியம் துக்கமே உருவாகக் காணப்பட்டார்.

நிதி வசூல் செய்து என். எஸ். கே. யின் குடும்பத்தினருக்கு உதவி செய்ய வேண்டுமென்று முன் வரும் அவருடைய நண்பர்களும் பெருந்தகை வள்ளல்களும் என். எஸ். கே. யின் தாயாரையும், மனைவி நாகம்மாவையும் அவருடைய நான்கு பிள்ளைகளையும் மறந்து விடாமல் சிறந்த முறையில் உதவ வேண்டுமென வேண்டிக் கொள்கிறோம்.

கலைவாணர் நிறையப் பணம் சம்பாதித்தார். அதில் பெரும் பகுதியை ஏழைகளுக்குக் கொடுத்துத் தம்மை ஏழைகளின் நண்பராக்கிக் கொண்டார். தளரா உழைப்பினால் புகழ் ஏணியின் உச்சிக்கே சென்றார்.

"ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றி
தாழாது உஞற்றுபவர்" என்பதற்கு நகைச் சுவை மன்னனின் வாழ்க்கை ஓர் எடுத்துக் காட்டு.

★



அட்டைப்பட விளக்கம்

நம் நாடு கிராமங்கள் நிறைந்த நாடு. எண்பத்திரண்டு சதவீத மக்கள் கிராமங்களில் வாழுகின்றனர். வாழ்க்கையைச் சுகப்படுத்தும் நவீன சாதனங்கள் அங்கு எதுவும், கிடையாது. நிலத்தோடு போராடி வாழும் அவர்களுடைய வாழ்க்கை பரிதாபத்துக் குரியதாய் இருக்கின்றது.

கிராம மக்களின் வாழ்க்கையை வளப்படுத்த வேண்டுமென்பதே அண்ணல் காந்தியின் கனவு. “தொண்டு செய்ய விரும்புகிறவன் கிராமங்களை நாடிச் சென்று அங்கு தோட்டியாகவும், நூல் நூற்பவனாகவும், காவற்காரனாகவும், உபாத்தியாயராகவும் ஏககாலத்தில் தன்னை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

கிராமங்களுக்கு சேவை செய்வது சுயராஜ்யத்தை நிலை நிறுத்துவதாகும். இதைத் தவிர மற்றவையெல்லாம் சோம்பேறித் தனமான கனவேயன்றி வேறல்ல! சுதந்திரம், தன்னம்பிக்கை, சுய உதவி ஆகியவற்றின் பெருமையை கிராம மக்களுக்குத் தொண்டர்கள் கற்பிக்க வேண்டும்'' என்று கூறினார் காந்திஜி.

இன்று நம் அரசாங்கமே சமூக நலத் திட்டங்கள் பலவற்றை உருவாக்கி கிராம புனரமைப்பு வேலையில் இறங்கி கிராம மக்களின் வாழ்க்கையில் புதியதோர் சகாப்தம் ஆரம்பித்துள்ளனர். கிராமங்கள் ஒன்றோடொன்றை இணைக்க ரஸ்தாக்கள், விவசாய அபிவிருத்தி, கால்நடைகள் கண்காணிப்பு, நீர்ப்பாசனவசதி, கல்விவசதி, வைத்திய உதவி, நவீன வீடுகள் அமைத்தல், கைத்தொழில் அபிவிருத்தி முதலியவற்றில் அக்கறை செலுத்தப்படுகின்றது. நம் மாகாணத்திலும் இத்தகையை சமூக நலத் திட்டங்கள் பல அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தியா முழுவதும் சுமார் இரண்டு லட்சம் கிராமங்களில் இத்திட்டங்கள் புகுத்தப்பட்டிருக்கின்றன.

அரசாங்க மட்டுமல்ல. தனிப்பட்டோர்களும் கிராமத்தை மாற்றியமைத்து கிராம மக்களுக்கு உதவி செய்ய முன் வந்திருக்கின்றனர். குறிப்பாகக் கல்லூரி மாணவ மாணவிகள் இத்துறையில் செய்யும் சேவை மகத்தானது. அவர்களுக்கு கிடைக்கும் ஓய்வு நாட்களில் நாட்டுப் புறத்துக்குப் போய் கிராம மக்களுக்கு எல்லாத் துறைகளிலும் சேவை செய்து வருகிறார்கள். அவர்கள் செய்யும் தொண்டை நாம் போற்றுகிறோம்.

வயது வந்த மாணவர்கள், அதாவது கல்லூரி மாணவர்கள், அனைவரும் படித்துக் கொண்டிருக்கும் போதே கிராம சேவையைத் தொடங்க வேண்டும் என்று காந்தியடிகள் அன்று கண்ட கனவு நனவாகி விட்டது என்பதைத் தான் நமது அட்டைப்படம் விளக்கிக் காட்டுகின்றது.

அக்டோபர் 2உ காந்திஜயந்தி நாள். அந்நாள் உலக மக்கள் யாவராலுமே ஒரு புனித நாளாகக் கொண்டாடப்பெறும். ‘புதுமை’யின் இவ்விதழ் காந்திஜீயின் நினைவு இதழாக வெளி வருகின்றது.

இதில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் பொன்மொழிகள் யாவும் காந்தி அண்ணலின் பொன்மொழிகளே.

அவன் வாழ்க!

'பாசொலி'

சாந்தத் திருவுருவை
சத்திய மெய்க்குன்றைக்
காந்தி யெனும் தெய்வக்
கற்பகக் பூங்காவை

வாய்மைச் சுடர் விளக்கை
வண்மைப் பெருங்கடலை
தாய்மைப் பெருவுளத்தைத்
தாரணித் தெய்வமதை

எண்ணும் பொழுதினிலே
இன்பமும் பூக்குதடா
கண்ணீர் பெருகுதடா
காணரும் தேவனடா

அன்பு மலராலே
ஆரத் தொழுதிடுவோம்
இன்பக் கவிபாடி
ஏத்தித் தொழுதிடுவோம்

தேவனவன் வகுத்த
தெய்வ வழிகளிலே
ஆவன செய்திடுவோம்
அகிம்சையை மேற்கொள்
வோம்

வாழ்க அவன் புகழே
வாழ்க அவன் கழல்கள்
வாழ்க அவன் நெறிகள்
வையமெலாம் பரந்தே.

Phone No. 4096

R. NATESAN,
Proprietor :
Typewriter Service Co.,
1-Narasimharaja Road,
Bangalore-2.
Agents for
R. C. ALLEN
STANDARD, IDEAL, BIJOU & PORTABLE
TYPEWRITERS

AMCO CHEMICAL LABORATORIES (INDIA)
Manufacturers & Commission Agents
84, Tank Road, Cottonpet,
BANGALORE CITY.

AGENCIES WANTED
The undersigned is willing to work as Sole Representatives for Direct Importers, Manufacturers, Mills, Factories and from Reputed Firms :-
For GREATER MYSORE STATE
Nuderpatco, Sriramapuram, Bangalore-3

'வாய்வு சூரணம்'

உஷ்ண வாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு, பித்த வாய்வு, மலக்கட்டு, மலபந்தம், அஜீரணம், புளியேப்பம், கை கால் அசதி, பசியின்மை, செரியாமை, வயிற்றுவலி, பித்தமயக்கம், பித்தசூலை, சோம்பல் முதலான வாய்வு ரோகங்களை அறவே நீக்கி நல்ல பசி எடுப்பதற்கும், தேகாரோக்கியத்துக்கும் மிகச் சிறந்த சூரணம். மூலிகைகளினால் தயாரிக்கப்பெற்றது.
(பத்திய மில்லை)

5 பலம் டின் ரூ. 3-0-0

தேவைக்கு :—
சம்பு இண்டஸ்ட்ரீஸ்
சேலம்–2 (S. R.)

பாரதி விழா

தி. சுவாமி நாதன்

மகாகவி பாரதியார் பிறந்த எட்டயபுரத்தில் செப்டம்பர் மாதம் 11, 12-ம் தேதிகளில் பாரதியார் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

விழாவை சென்னை நிதி மந்திரி ஸ்ரீ. சி. சுப்பிரமணியம் துவக்கி வைத்துப் பேசுகையில் எட்டயபுரத்தில் பாரதியார் விழா வருடந்தோறும் மிகச் சிறப்பான முறையில் கொண்டாட வேண்டுமென்றும், அது தமிழர்களின் தனிப்பெரும் விழாவாக இருக்க வேண்டுமென்றும், விழா வெற்றிகரமாக நடைபெற தன்னால் இயன்ற உதவிகளைச் செய்வதாகவும் வாக்களித்தார்கள்.

விழாத்தலைவர் கருமுத்து தியாகராஜ செட்டியார் தனது தலைமையுரையில் பாரதி பலமொழிகளையும் பயின்று பார்த்துத்தான், "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று சொல்லியிருப்பதாகக் குறிப்பிட்டார்.

தேசியக் கொடி ஏற்றி வைத்த தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ. ராஜாராம் நாயுடு அவர்கள் பேசுகையில் 'பாரத சமுதாயம் வாழ்கவே' என்று பாரதி பாடியதின் மூலம் திராவிட நாடு பிரிவினையை அவர் விரும்பவில்லை என்பதை அவரது பாடல் எடுத்துக் காட்டுகிறது என்று தெளிவு படுத்திக் கூறினார்.

பாரதிவிழா வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ. அழ. கந்தசாமி செட்டியார் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

நெல்லை ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கோசல்ராம் பாரதி படத்தை திறந்து வைத்துப் பேசுகையில் பாரதி பாடல்களை பள்ளிக் கூடங்களில் மாணவர்களுக்குப் போதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

விழாவிற்கு ஆசியுரை வழங்கிய சென்னை மேயர் திரு. கே. என். ஸ்ரீனிவாசன் பேசுகையில் பாரதியாரை மறந்தால் தமிழ் நாடே அழிந்து போகும் என்றும் வருடந்தோறும் பாரதி விழாவை சிறப்பாக நடத்த வேண்டு மென்றும் கூறினர்.

சென்னை சக்தி காரியாலயத்தாரின் பாரதி பாடல்கள் மலிவுரக புஸ்தக விற்பனை வெளியீட்டு விழா எட்டயபுரம் மகாராஜா அவர்கள் தலைமையில் பேராசிரியர் ஸ்ரீநிவாச ராகவன் துவக்கி வைத்தார்.

மாரியப்பா உயர்தர ஆரம்ப தர்ம வித்தியாசாலை மாணவிகளான லட்சுமிகாந்தம், சுசிலா பாரதி பாடல்களுக்கு அற்புதமாக நடனம் ஆடினர்கள். பத்திரிகை நிருபர் இ. சுவாமிநாதன் நன்றி கூறினர்.

12-ம் தேதி காலை 9 மணிக்கு தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரித் தலைவர் பேராசிரியர் ஸ்ரீநிவாச ராகவன் தலைமையில் இலக்கிய விழா துவங்கியது. ஸ்ரீ ராகவன் தலைமையுரையில், கதைகள் புனைவதின் மூலம் ஒருவர் தன் நாட்டுக்குச் சேவைசெய்யமுடியுமா? என்ற கேள்விக்கும் பாரதியின் பாடல்களே பதில்சொல்லும், என்று கூறினர். பாரதி பாடல்களில் சாதாரண மனிதர்கள் தினசரி வாழ்க்கையில் உபயோகிக்கும் வார்த்தைகளையே உபயோகிப்பது போல் தோன்றினலும் அவைகளில் ஒருவகை வேகத்தை ஊட்டினர், என்றும் இது ஒரு கவியினல்தான் முடியும் என்றும். அதுவும் பாரதியைத் தவிர வேறு யாராலும் முடியாது என்றும் கூறிமுடித்தார்.

செயலாளர் கி. சித்த ரஞ்சன் விழாவிற்கு வந்த ஆசிச் செய்திகளை வாசித்தார்.

இவ்வாண்டு பாரதியார் விழா வெற்றிகரமாக நடக்கக் காரணமாயிருந்த டாக்டர் ஆர். சீனிவாசன், பாரதி மண்டப பராமரிப்புக் கமிட்டி பொக்கிஷதார் கு. மாரியப்ப நாடார், உபதலைவர் மு. கந்தசாமி செட்டியார், பஞ்சாயத்துப் போர்டுத் தலைவர் இ. மு. ஆ. ராமச்சந்திரன், நகர் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் சுப்பையாத் தேவர் ஆகியோரின் சேவையையும், விழா நடத்த ரூபாய் 201 நன்கொடை கொடுத்து போக்கு வரவு வசதிக்கு அரண்மனைக்கார்களை கொடுத்தும் இரண்டு நாட்களும் விழாவிற்கு வந்து விழாவை நடத்திக் கொடுத்த எட்டயபுரம் மகாராஜா அவர்களையம் எவ்வளவு பாராட்டினலும் தகும்.

போன் : 1259 தந்தி : "FASHION" தபால் பெட்டிநெ. 16

கலை நிரம்பிக் காண்பதற்கு இனிதாகி
மலர்க்கொடியாள் மனதினை மகிழவைத்து,
தளிர்மேனி செவ்விதழாள்
மலர்க்கண்ணைத் தன்னகத்தே ஈர்த்து
அழகொளியை அள்ளி வீசும்,
எமது கோயமுத்தூர்

சௌடாம்பிகை

சேலைகளை
வாங்கி கைத்தறியை ஆதரியுங்கள்.

தயாரிப்பாளர்கள்

ஸ்ரீ சௌடாம்பிகை தேவாங்க நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனை சொசைட்டி லிட்.,
நெ. K. 1517 ; கோயமுத்தூர்.

தலைமை ஆபீஸ்:	விற்பனைக் கிளைகள்:	ஸ்டாக்கிஸ்டு:
& சாயச்சாலை:- 22/307 ரங்கே கவுடர் வீதி, கோவை.	11/47, சுக்ரவார்ப்பேட்டை, கோவை. 56, பெரியதெரு, திருவல்லிக்கேணி, சென்னை.	நியூ ராதா ஹால், பஜார் தெரு, சேலம்.

தலைவர் : A. K. பழனிசாமி.

Guncraft
Arms & Ammunition

SPECIALISED GUNSMITHS ARMS AND AMMUNITION DEALERS

GUNGRAFT
Zo-E, MAHATHMA GHANDHI ROAD,
BANGALORE.

நன்றி

சென்ற இதழில் வெளியான முத்தமிழ் கலைஞர்கள் போட்டோ பிளாக் எமக்குக் கொடுத்து உதவிய 'ஹிந்து' பத்திரிகை ஆசிரியர் அவர்களுக்கு எங்கள் நன்றி.

பிரசுரமாகாத, கதை, கட்டுரை, கவிதைகளை திருப்பிப் பெற விரும்புகிறவர்கள், போதிய தபால்பில்லைகளுடன் அனுப்ப வேண்டும்.

ஆ-ர்.

ஸ்ரீ வெங்கடேசா மில்ஸ் லிமிடெட்

வெங்கடேசா மில்ஸ் போஸ்ட்

உடுமலைப்பேட்டை.

தந்தி : "**VENKATESA**" போன் : **66**

★

எல்லா வகையிலும் முன்னணியில் நிற்கும்
ஒரு தென்னிந்திய பஞ்சாலை.

★

நூல் :— 20, 40, 60, 80 பருத்தி நூல்
2/40 செயற்கையிழை நூல்.

துணி:— '801' & '1001' மல்
'SV 35' & 'SV 555' லாங்க்ளாத்

★

நிர்வாகப் பொறுப்பினர் :—

G. V. கோவிந்தசாமி நாயுடு & கம்பெனி

ஆலை நிர்வாகி :—

R. முத்துசாமி, B.A., B.Sc.(Tech.)A.T.I.

அத்தியாயம் 1

கண்டறியாதன கேட்டேன்.

யார் வந்தா லென்ன? வரா விட்டால் என்ன? ரெயிலடிக்கு முத்தையன் வரவில்லை. அவனது கபடமற்ற புன் முறுவல்; சுருள் சுருளான கவர்ச்சி முடி; எல்லாவற்றுக்கும் மேலாக "ஐயா, வாங்க" என்ற இதய பாசம்; இவ்வளவும் என்னைத் திக்குமுக்காடச் செய்யும். அவனோடு, அன்பு கனிந்த சொற்கள் உதிருமே;

காமனை வென்ற கண்

உபசாரம் அருவியாக் கொட்டுமே. அவன் வராதிருந்து இதைச் செய்தான்; இருள் நிறைந்த பாதையில் நிலவின் நினைவுத் தடம் பிடிக்குமே, அப்படி என் மனத்துள்ளே முத்தையன் வந்தான்.

தென்காசி ரெயில் நிலையத்தில் இறங்க மனமின்றித் திருச்சிக்குத் திரும்ப எண்ணினேன்; பாண்டித்துரை "உம் இறங்குங்கள்; ரெயில் வண்டி எக்ஸ்பிரஸ்; ஊதிவிடும்" என்று நினைவூட்டினான்.

'எங்கே முத்தையன்?''

"ஊர் முழுக்க அவனைப் பற்றிப் பேசுகிறார்கள்; நீங்களும் அவனையே கேட்கிறீர்கள்."



ஜமீன்தார்பாண்டித்துரையின் குரல் கரகரத்து, துக்கத்தின் துண்டம் தொண்டைக்

குள் உருள்வதாகப் பிரமையடைந்தேன். அவர் தம் குரலில் ஏக்கம்.

“முருகனுக்கும் உங்களுக்கும் மனஸ்தாபமா தம்பி?”

வீரம் ஜொலிக்கும் அகன்ற கண்களைப் பார்த்தேன். கண்ணீர் முட்டி அலைமோதுகிறது! ரெயில் பிளாட்பாரத்தில் பத்திரிகை விற்கும் சிறுவனின் குரல் செவியைப் பிய்க்கிறது!

“பயங்கரப் புலியின் அட்டகாசம்; குற்றாலத்தில் ஒரு நபரைக் காணோம்.”

மூன்று மைல் தொலைவில்நிகழ்ந்த சம்பவம் அச்சேறிச் செய்தியாக வந்து விட்டது. ஒருவேளை முத்தையனாகவே இருக்கலாமோ?

“பாண்டித் துரை, குற்றாலத்

தில் புலியா ? புலி நடமாட்டம் இருக்கிறதா ?"

"படுபாவிப் புலி, நம்முடைய முத்தையனைத்தானு தின்ன வேண்டும் ?"

என் சிந்தனையில் புலி ஓங்கி யறைந்து உடம்பெங்கும் ரத்த நாளங்கள் பிளந்து விட்டதான உணர்ச்சிக்கு மூழ்கிவிட்டேன். முத்தையனைக் காணலாம், பேசி மகிழலாம் என எத்தனை மனக் கோட்டைகள் கட்டி வந்தேன்.

"அந்தப் புலிக்கு முத்தையன் என்ன துரோகம் செய்து விட்டான்? சொல்லு டாண்டித்துரை. முத்தையனைப் புலி கொல்ல முடியாது."

"முடியாது என்ருல் நீங்களும் நானும் நம்பலாம். பெற்ற தாய்க்கு என்ன பதில் சொல்லுவது? செண்பகத்திற்கு யார் பதில் சொல்லுவது ?"

நாங்கள் ரெயில் நிலையத்தை விட்டு வெளியே வந்தோம். காரில் ஏறியமர்ந்தார் பாண்டித்துரை. நான் பின் ஸீட்டில் அமர்ந்தவன் புலியடித்த மாதிரி இருக்க, எதிர் கண்ணுடியில் பாண்டித்துரையின் கவலை தோய்ந்த முகம் நன்கு பிரதி பலித்தது.

கார், தென்காசி—குற்ருலம் இணைக்கும் ரோட்டில் போய்க் கொண்டிருந்தது.

"முத்தையனைப் பற்றிச் சொல்லா விட்டால் நான் திருச்சிக்குத் திரும்பி விடுவேன். சீசனை அனுபவிக்க வந்தேன்; குற்ருலத்து முத்தையன் இல்லாத இவ்விடத்து அருவி வேண்டாம். அவனது கலைந்தும் கலையாத கிராப், முகங் கோணுதச் சிரிப்பு, இதைக் காணவே வந்தேன்."

"அட, நீங்களும் இப்படியா சொல்ல வேண்டும்? அந்தச் செண்பகம் ஒருத்தி தான் என்னைத் திட்டுகிருள் என்ருல் நீங்களும்......?"

கார் புலியருவி பிரியும் பாதையில் நின்றது. முற்காலத்தில் அதாவது குற்ருலம், அதன் மலையடி வாரம் பாறையும் பாழ் நிலமுமாய்த் தெரியாத காலம். செடிகொடிகள் விம்மிப் புடைத்துப் பூத்துக் காய்த்துக் குலுங்கிய நாற்பது ஐம்பது வருடங்களுக்கு முன், கோவிலடி அருவியிலே எப்போதோ ஜனநடமாட்டம் இருக்கும். எங்கும் மரஞ் செடி கொடிதான். இன்ருே எங்கே திரும்பினுலும் மனிதத் தலைகள்! எப்போதோ வருகின்ற மனித நடமாட்டத்திற்குப் பயந்து பெரிய அருவிக் கரைப் பக்கமே வருவதில்லை புலிகள். அவைகள் ஒரு அருவியிலேயே நீர் குடிப்பது பழக்கம். அதனுல் யாரும் அங்கே போக முடியாது; போக முயற்சி செய்வதும் இல்லை. புலியருவி என்ருல் அத்தனை கிலி.

"புலியருவி என்ற காரணம் தெரிந்தது. எங்கே அந்த அருவி ?"

பாட்டையில் நிற்கும் காரிலிருந்தபடியே மேற்கே பார்த்தேன். மத்தியான வெய்யில் பசுமையான மலைப்பாங்கிலே திட்டுத் திட்டான மேகத்தின் நிழல் சமுக்காளங்கள் கரியநிறத்திலே இடம் விட்டு இடம் நகர்ந்து பாவாத்திக் கொண்டிருந்தன. புலியருவியின் வெள்ளி உருக்கி விட்டாற் போன்ற நீரோட்டம் பசியகரைகளுக்குள்ளாக ஓடி வருகிறது. இன்னும் மலைக்கு மேலே பசுமையின் அடர்த்தியான நெருக்கடி; இன்னும் மேலே மேலே மஞ்சுக் கூட்டங்கள் பஞ்சுப் பொதி போல வட்டமிடுகின்றன.

பெரிய அருவியைப் போல பாறையும் பாழ் வெளியும் தெரியாது பசுமை போர்த்தியிருந்தது புலியருவி.

"அந்த வழியாகத்தான் முத்தையன் போயிருக்க வேண்டும்." என்றார் பாண்டித்துரை.

"எத்தனை நாள் ஆயிற்று?"

"நாலாம் நாள் போனான்."

"நாலு நாளாகத் தேடாமல் நீங்கள் என்ன செய்திர்கள் தம்பி?" சற்றுக் கடுமையாகவே கேட்டேன். பாண்டித் துரையின் தம்பி, அண்ணன் எவரேனும் போயிருந்தால் துப்பாக்கி தெரிந்த கரங்கள் சும்மா இருக்குமா? என்று கேட்டேன். அவர் ஜமீந்தாராக இருந்தால் எனக்குப் பயமா?

"நண்பரே! என் அண்ணன் தம்பி எவரும் தூங்குகிற புலியைத் தேடி வால் பிடித்து இழுக்க மாட்டார்கள். மான் குட்டி போனால் என்ன?"

"மான் குட்டியா?"

"செண்பகத்தின் மான் குட்டியைக் காணவில்லை."

"அட, பெரிய கதையல்லவா நடந்திருக்கிறது. சொல்லுங்கள் பாண்டித்துரைத்தம்பி......"

"முத்தையன் தானாகப் போகவில்லை. தாய்க்குச் சொல்லிய சபதத்தை முறித்துப் போனான். ஏன் போக மாட்டான்? செண்பகத்தின் கேலிச் சிரிப்பல்லவா புலியைத் துரத்திக் கொண்டுபோகச் சொன்னது?"

"எந்தச் செண்பகம்? ஒரு முறை நாம் ஐந்தருவி போய் விட்டு வந்தபோது சித்திரை மண்டபத்தில் கலகல வென சிரித்தாளே!"

"ஆம்."

என் செவியிலே செண்பகத்தின் சிரிப்பொலி கண கண வென மெல்லிய நாதத்தில் கேட்டது. மலரும் தாமரை இதழ்களுக்கு வெண் கலத்தின் ஓசை வந்து அவை காற்றிலே கலகலவென நாத மழை பொழிந்தால் எப்படியோ அப்படிப்பட்டச் சிரிப்பு. நிலவிலே அவர்கள் சிரித்ததைக் குறுக்கு வழியாக நடந்த நானும் பாண்டித் துரையும் என்றோ கேட்டோம்.

"செண்பகத்திற்கும் முத்தையனுக்கும் கல்யாணம் ஆகவில்லையா?"

"உயிருக்குயிரான உங்களுக்குக் கூடவா திருமண அழைப்பு வராது?"

"செண்பகத்தைப் பார்த்து ஆறுதல் சொல்ல வேண்டும்." என்றேன். இதற்கு முன்னதாக அவளை நான் பார்த்ததில்லை.

"நாளைக்காலை வரை பொறுத்துக் கொண்டிருங்கள்."

"ஏன்?"

"முத்தையனைத் தேடி நாம் போகவேண்டும். இத்தனை வருடங்களாக அருவியில் தலையைக் கொடுத்துத் தப்பிக் கொண்டு போனீர்கள். காட்டுக்குள் என்னோடு வாருங்கள். நன்றாகப் பொழுது போகும். முத்தையனைத் தேடலாம்."



கார், புலியருவிப் பிரிவைத் தாண்டி குற்றாலக் கோவிலின் அருவியை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. பாண்டித் துரையின் பங்களா மேட்டுப் பாங்கான இடத்தில் அமைந்தது. பகலோ நிலாக் காலத்து இரவோ அவர்கள் வீட்டு மாடிக்குள் போனதும் நிலைக் கண்ணாடியைப் பார்த்தால் போதும்! மலையருவி கண்ணாடிக்குள் விழுந்துகொண்டிருக்கும்!

அருவியைப் பார்த்தேன். பழைய ஞாபகம் "கண்ணாடிக்குள் அருவியைப் பார்த்தால் மணிக்கணக்காக விழும் சார். இது மனசிற்குக் குளிர்ச்சி சார், உடலுக்குக் குளிர்ச்சி வேண்டுமானால் புறப்பட்டு வாருங்கள்!" என்பான் முத்தையன். கையிலே பிரத்யேகமாகக் காய்ச்சிய தைலம். வெளுத்த தும்பப்பூ துவாலை; பட்டையாகநீலக்கோடு போட்ட துவாலை. வெள்ளிச் சோப்புப் பெட்டி மினு மினுக்கும். இன்று அழுக்குடையோடு அமர்ந்திருக்கிறேன். சூடான காப்பியைக் கார்னேம்.

நிலைக் கண்ணாடிக் குள்ளே அருவிமட்டும் விழுந்து கொண்டிருக்கிறது.

"அருவிக்குப் போகலாமா?" என்றார் பாண்டித்துரைத்தம்பி.

"போவோம்" சொன்னேன். எழ மனம் இல்லை.

மாடியிலிருந்து கீழே குரல் வரவே பார்த்தேன். சோகமே உருவான வாடிய தாழம்பூப் போன்ற உருவம் நின்றது. கிராமியப் பாங்கிலே அழகு நிரம்பிய பெண். படிப்பின் தேமல்அதிகம் விழாத கண்கள்.

கண்களில் அதிகமான ஆழம். அக் கண்ணின் ஆழம் மேலே விழும் அருவியைத் தாங்கும் பாறையின் 'கச'த்தை நினைவிற்குள் புகுத்தியது. வெள்ளை விழிகள் மிகவும் வெண்மை; கரிய விழிகளோ அதிகக் கருமை; இமையின் ரோமங்கள் நெய் பூசியது போன்ற பளபளப்பு; இமைக்கு அருகிலே நிழல் படுவது போன்ற மெல்லிய கருப்பு. இத்தனைக்கும் முகத்திலே களையைக் காணவில்லை. சோகம் அப்பிக் கிடந்தது.

"ஐயா" என்ருள்

பாண்டித்துரைத் தடதட வென மாடிப்படி இறங்கி ஓடினுன்.

"ஐயா, நாளைக் காலையிலாவது......"

"இந்தாம்மா. சும்மா சும்மா வந்து தொல்லை செய்யாதே. உனக்குள்ள கவலை எனக்கும் உண்டு."

"நீங்கள் எதிர்பார்த்த ஐயா திருச்சியிலிருந்து வந்து விட்டார்களா?"

"ஆமாம்"

"நாளைக் காலையிலாவது நீங்கள் தேடிப்போக வேண்டும். கவனியுங்கள். என் வீட்டிலும் இரண்டொருவர் மேல் மலையில் தேடுகிருர்கள்."

"கட்டாயம் போவேன். நீ போகலாம்." என்று அவளுடைய பதிலை எதிர்ப்பார்க்காமல் பாண்டித்துரை என் அருகாக வந்தார்.

"இவள் தான் செண்பகமா?" என்று பார்த்தேன். கோவிலை விட்டுத் தெய்வம் வெளியேறுவது போல அத்தனை சோகமாக அடிமேல் அடி எடுத்து வைத்து மென்மையாக நடந்து கொண்டிருந்தாள் செண்பகம்.

"இந்தப் புலியால் தான் நிஜப் புலியிடம் சிக்கிக்கொண்டான்."

"தின்ன வரும் புலியையும் எதிர்க்கச் சொல்லும் திகட்டாத புலியல்லவா காதலி!"

"நல்ல காதல் வந்தது. முத்தையனைப் போன்ற உத்தமன் முடிவு இப்படி ஆகவேண்டுமா? ரத்தத்தை, வெறும் சதையை உறுஞ்சும் புலிகள் தேவலை; எண்ணத்தையும் மனத்தையும் சாக அடிக்கும் பெண் புலிகள் ஒழியவேண்டும்."

"தம்பி பாண்டித்துரை, பெண் புலிகள் இருப்பதால் தான் சுடர்விடும் தியாகங்கள், மனித மனத்து வீரங்கள் ஊற்றுப் போல குமிழி விடுகின்றன." என்றேன்.

"நடந்த விபரங்களைக் கேட்டுக் கொண்டு உள்ளது உள்ள படி மனசில் பதியுங்கள். கற்பனையில் அலைந்து வேதனைப் படவேண்டாம். அருவிக்குப் போகலாமா?"

"வேண்டாம். வெந்நீர் போடச் சொல் தம்பி. அருவியில் குளித்தால் நிம்மதி இருக்காது."

அன்றுதான் குற்ருலத்தில் முதன் முதலாக வெந்நீரில் குளித்தேன். பாண்டித்துரை சொல்ல ஆரம்பித்தார். நானும் சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

அத்தியாயம் 2.

பார்த்தறியாதன பார்த்தேன்.

மறுநாட் காலை. பொழுது எப்போ விடியும் விடியுமென்று ஆவலோடு இருந்தேன். கேட்ட சம்பவங்கள் என் தூக்கத்தைக் கலைத்து விழிப்பையே தந்தன. என் உடம்பிலே இது காறும் இல்லாத உணர்ச்சி உந்திக் கொண்டு வந்தது. மலையேற முக்கி முனகி முகத்தைச் சுளிக்கும் நான் வரையாட்டினைப் போல தவ்வித் தவ்வி ஓடியாடி மேலே மேலே போய்க் கொண்டிருந்தேன்.

குற்ருல மலையின் ஒவ்வொரு அடி நிலமும் நன்கறிந்த பாண்டித்துரை எனக்கு முன்னதாகப் போகிருர். என் தோளிலே துப்பாக்கி, தண்ணீர் சேமிப்பு டின், கொஞ்சம் கொஞ்சம் பிஸ்கட்டும் உணவுப் பொருள்களும் நிறைந்த பை,டார்ச்சு லைட். அட, வேட்டைக்கு வேண்டிய தளவாடங்கள், வயிற்றுக்கு வேண்டிய தளவாடங்கள் இரண்டும் சுமந்து போய்க் கொண்டிருக்கிருேம்.

> பொது மக்களின் அபிப்பிராயமானது அதிகாரிகளை ஒரு கணங்கூட சும்மாயிருக்கும்படி விடலாகாது.
>
> நல்லறிவுடன் எளிமையான வாழ்விற்கு நாம் திரும்பாவிட்டால் மிருகத்தனத்தை விட கீழான நிலைக்கு இறங்குவதிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ள முடியாது.

உலகத்தைக் கிழ மேலாக உழ நிற்பவனைப் போல சூரியன் நிற்கிருன்.

புலிபோகுமிடம் எது? போனதை யார் பார்த்தார்கள்? நாங்களாக யூகித்துக் கொண்டு காடும் மலையும் புதரும் தாண்டிப் போகிருேம்.

நேரம் போகப் போக உணவுப் பொருள்கள் மட்டுமே காலியாயின. தவறிப் போய் குண்டு ஒன்றை நான் கைதவறி வெடித்திருந்தேன். ஆங்காங்கே அலைந்தலைந்து மலையும் மேடுமாக இருந்ததால், உஷ்ணமின்றி குளிர்ச்சியாகவே இருந்தது. கால் மட்டும் கனக்கிறது; கடுக்கிறது.

இரவின் ஆதிக்கம் படர ஆரம்பிக்கும் பொழுது, பாண்டித்துரை செடிகளின் கொடிகளை அறுத்தான். கயிறு போல இருந்தன. மரங்களிலே நீண்ட கிளைகளைக் குறுக்கும் நெடுக்குமாக அமைத்தான். இரண்டாள் உயரத்தில் பரண் ஒன்றை அமைத்து இலை தழை அள்ளிப் பரத்தி மெத்தென ஆக்கி விட்டான். பரண்மீது பயமின்றி உட்காரப் பழக்கம் வேண்டும். என் உடம்பிலே இருந்த வீராவேசம் ஒளிமங்கி இருள் பரவப்

பரவ விஸ்வ ரூபம் எடுத்தது.

ஐயோ! வெயிலடிக்கும்போது பச்சையும் பசுமையாகக் கண்ணை மயக்கும் மரம் மட்டைகள், மலைவளங்கள் அனைத்தையும் இரவில் பார்க்க வேண்டும். பேய்களின் ஊழிக் கூத்திற்குக் கால்பாவிய மாதிரி பயங்கரமாய்த் தோன்றுகின்றன. காற்று கூட இனிமையை மறந்து உடலுக்குள்ளே எலும்பிலே துளைபோட ஊசி குத்துகிறதே. அழகற்ற பொருள்கள் மனித மனத்திற்கு இருளிலே மோகன லாகிரியை யூட்டலாம். மலைக் காட்டில் திடீர் திடீர் என்று பழந்தின்னி வௌவால்கள் 'கிரீச்' கேட்கின்றன; ஒன்றை ஒன்று அடித்துத் தின்னும் பிராணிகள், அடிபட்ட பிராணிகளின் பரிதாபக் கூக் குரல் வேறு. வானத்துத் தாரகைகள் அனைத்தும் குற்றால மலையிலே இறங்கியது போல பசுமையான பட்டாம் பூச்சிகள். இவைஇருளுக்கும் ஒளிக்குமாக கண்ணுமூச்சி யாடின.

இத்தனையும் பார்க்கப் பார்க்கப் பயங்கரம். சிறு ஒலியும் பேரிடியாய், சிறு ஒளியும் பேரொளியாய் என் கபால ஓட்டுக்குள் நர்த்தன மிடுகின்றன. அவ்விடத்தில் தூங்கிப் பழக்கமில்லாத நான் பரணிலிருந்து பறப்பது போல உணர்கிறேன். எனக்கு மயக்கம் தலை சுற்றுகிறது. கீழே விழ இருந்தேன். என் உடம்பைக் கொடி கொண்டு மரத்தோடு கட்டியிருந்தார் முன் யோசனையுள்ள பாண்டித்துரை.

பொழுது மேலும் மேலும் கரிய நிறத்தைப் பிளந்து ஊற்றிக் கொண்டே யிருக்கிறது.

மனிதன் என்றால் வெறும் அறிவு மாத்திரமல்ல, அல்லது ஸ்தூல உடலுமல்ல; உணர்ச்சி மட்டுமோ, அதுவும் அல்ல. அறிவு, உடல், உணர்ச்சி ஆகிய மூன்றும் அழகிய முறையிலே ஒன்று கூடினால் தான் மனிதன் ஆகிறான். இவை மூன்றையும் வளர்ப்பதே உண்மையான கல்வி முறையாகும்.

சற்றுக் கண்ணயர்ந்தேன். நாங்கள் பரண்போட்டதற்கு அருகாக சின்ன மரம். அந்த மரமோ அல்லது அதன் கிளையோ இரண்டாகப் பிளந்தது!...... சிறிது நேரத்தில் கிளைவளையுமா சுருளுமா? எங்களை நோக்கி ஊசலாடுவது போல இருந்தது. அது என்ன? எனக்குப் பயம் தோன்றுதிருக்க "சார், கொஞ்சம் கண்ணை மூடிக் கொள்ளுங்கள்" என்றார் பாண்டித்துரை. எனக்கு இதைப் போன்ற திரச் செயலில் பழக்கம் தானே!

மறுகணம் அண்டம் கிடுகிடுக்கும் வேட்டு எழுந்தது. கண்ணையும் மனசையும் மூடிக் கல்லாய்ச் சமைந்த நான் பார்க்கிறேன். பாண்டித்துரை அடித்த டார்ச் ஒளியில், நம்ப முடியவில்லை, துண்டிக்கப் பெற்ற பாம்பின் உடலம் பூமியிலே வேதனை தாங்காது சுருள்கிறது. உடலைத் தேர்வடம் போன்று முறுக்கி முறுக்கி மரண வேதனையில் புரள்கிறது.

டார்ச் ஒளி மரத்தின் மீது பட்டதால் பாதி உடம்பு மரத்திலே

பின்னி உருள, ரத்தம் அருவியாகக் கொட்டிக் கொண்டிருந்தது.

"பாண்டித்துரைத் தம்பி, இதுபோன்ற காட்டிலே இன்னுமா முத்தையன் உயிரோடு இருப்பான்?"

என்பேச்சு அவர் காதில் விழவொட்டாதபடி வேட்டுக்குப் பயந்துவிழித்த பறவைகள், அம்மம்மா, ஒவ்வொன்றும் எவ்வளவு பெரியவை, இறக்கை அடித்து அலற ஆரம்பித்தன! "ஆபத்து, ஆபத்து" என்ற ஸ்வரங்கள் மேல்ஸ்தாயில் கிரீச்சிட்டன. யமதேவனே அத்தனை பறவைகளாக என் நெஞ்சுள்ளே புகுந்து குறுக்கும் நெடுக்குமாக ஓடுவதாய் எண்ணினேன்.

"பாண்டித்துரை தம்பி, நீ எக்கேடும் கெட்டுப்போ. எனக்குப் பயமாக இருக்கிறது."

"நீங்கள் கீழே விழமாட்டீர்கள்! விடிந்ததும் ஊருக்குத் திரும்பலாம்."

"முத்தையன் இங்கே இருப்பது என்ன நிச்சயம்?"

"மனிதன் இறந்த சோகக் குரலோ பிணவாடையோ வருகிறதா என்று பார்க்கிறேன்."

அடப்பாவி! முத்தையன் இறந்து விட்டான் என்றல்லவா முடிவுகட்ட வேண்டியதாகிறது. புலியோ, நரியோ, கொடிய பாம்புகளோ கடிக்காமல் விடா.

இருளிலே கற்பனை செய்த என் மனத்திற்கு முத்தாய்ப்பு வைப்பது போல பொத்தென சப்தம் கேட்டது. டார்ச்சை அழுத்தினர் பாண்டித்துரை. மரத்திலே துடித்த பாம்பின் பாதி உடல் விழுந்திருக்கிறது. மறுகணம் தேனீக்களின் 'ஓய்' யென்ற இரைச்சல். கீழேபாறையிலோ, புதருக்குள்ளோ கட்டியிருந்த தேனீக் கூட்டில் விழுந்த பாதியுடல் எங்களைப் பழி வாங்க சதிசெய்தது. ரீங்காரம் கேட்டவுடன் மழைக் கோட்டை எடுத்து மூச்சு வெளியே போகாதபடி போர்த்தி விட்டார் பாண்டித்துரை.

"மலைத் தேனீக்கள் கொட்டினால் நூறு நல்லபாம்புக்குச் சமம். வெளியே நகம் கூடத் தெரிய வேண்டாம்."

மலைக்கு இரவில் வந்தது எவ்வளவு பெரிய தவறு என்று எண்ணி மூச்சைக்கூட மெதுவாக விட்டுக் கொண்டிருந்தேன்.

பொழுதெப்போ விடியும்? பொழுதெப்போ விடியும்? இதே சிந்தனை. பூவின் மலர்ச்சியால் காற்றிலே மெல்லிய சுகந்தம் வந்தது. தேனீக்களின் ஓசையும் அடங்கி விட்டனவோ? மலரும் பூக்களை நாடிப் போய் விட்டனவோ?

காலைச் சூரியனின் முதற்கதிர் மலை உச்சியில் பட்டுத் தெறித்தது. தங்கப் பாளம் பெயர்ந்து நகர்வதாக அறிந்தேன். என் மனத்துள்ளே பதுங்கிய பயமும் எங்கோ ஓடி

விட்டது! உடம்பிலே ஆனந்தம் குமிழி விடுகிறது. நெடிய சுகந்தம். இனிமையை உணர்த்த பதுங்கி இருந்த கோடானு கோடி இருள் எங்கோ போய் விட்டது.

இரவு முழுவதும் இறக்கையடித்தப் பழந்தின்னி வௌவால்களைக் காணோம்; மின்னட்டாம் பூச்சிகளைக் காணோம். எங்கும் வெண்மை. போதாக் குறைக்கு கொக்கினங்களின் கூட்டம் பறந்து போகின்றன. பரணிலிருந்து இறங்குவதற்குத் தெம்பு வந்து கீழே பார்த்தேன். கீழே கிடந்த பாம்புத் துண்டங்கள் இரண்டையும் காணோம்; காணோமா? அவற்றின் மீது புற்றெடுத்த மாதிரி எறும்புகள் கோடி ·கோடியாக மொய்த்துக் கிடந்தன. மெதுவாக வடம் பிடித்தது போல நகரவும் செய்கின்றன. அம்மம்மா, இத்தினி எறும்புகள் எவ்வளவு பெரிய மாமிச மலையை அசைக்கின்றன.

''இறங்குங்கள் சார்'' என்றார் பாண்டித்துரை. என் உடம்பிலே உறுதி இருந்தால் தானே. மனம் போல வாழ்வு. என் துணிச்சல் இரவோடு கரைந்து போய்விட்டது. சூரியன் ஒளி வந்தும் உள்ளத்துள் புகவில்லை. அசட்டுத் துணிச்சலோடு மரமேறி பரணில் அமர்ந்த நான் இறங்கத் திராணியற்று விழித்தேன்.

பொழுது மேலே மேலே வந்தும் என்னால் இறங்க முடியவில்லை: நரம்பு, எலும்பற்ற சதைப்பிண்டம் போன்ற எனக்கு எத்தனை நடுக்கம். என் உடலில் துணிவே இல்லை.

''சார், இத்தனை கோழையாக இருக்கிறீர்களே. ஊருக்குள் போய் ஏணியும், உங்களை இறக்குவதற்கு ஆட்களும் அழைத்து வருகிறேன்.''

மாடிப்படி இறங்குவானைப் போல பாண்டித்துரை சர்ரென இறங்கி விட்டார்.

''நான் மயங்கி விழுந்து விடுவேன், போகாதீர்கள்; முத்தையனைப் போல நான் கலியாணம் ஆகாதவன் இல்லை. குழந்தைக் குட்டிக்காரன்.''

''பயப்படாதீர்கள். உங்களை வலுவாக கட்டிப் போடுகிறேன்.'' என்று மேலே வந்தார் பாண்டித்துரை. ஊருக்குள் போக வேண்டும்; போனால் எனக்கோ பயம்;போக விட்டால் இறங்கவும் முடியாது.

எதிர் மலையிலிருந்து ஒரு குரல் கேட்டது.

''முத்தையா, முத்தையா, முத்தையா'' என்றவொலி வந்தது. காட்டிலுள்ள இரைச்சல் சலசலப்பு அத்தனையும் அமுக்கிக் கொண்டு கேட்டது. குரல் வந்த திக்கை நோக்கினால் வெள்ளை வெளேரென உடை தெரிந்தது. முத்தையனுக்காக அரற்றி அலறும் உருவம் யார்?

பாண்டித்துரை கோட்டு, துப்பாக்கி மற்றும் தண்ணீர்ப் பெட்டி அனைத்தும் தபதப

வென பூமியில் தூக்கி எறிந்தார். பரண்மீது சுற்றி வளைத்துப் பார்த்தவர் காதிலே மீண்டும் அக் குரல் விழுந்தது!

"முத்தையா......... முத்தையா........." என்று எதிரிரொலிகேட்டது மலைப் பிராந்தியமெங்கும்.

பாண்டித்துரை கண் மூடி இமைக்கு முன் இறங்கியவர், "இறங்க முடிந்தால் இறங்குங்கள்? நான் அவசியம் அங்கே போய்ப் பார்க்கவேண்டும். இரவிலே எப்படித்தான் உயிர் பிழைத்ததோ?" என்ற சொற்களே கேட்டன. அவர் ஓடிக் கொண்டிருந்தார்.

என் உயிரைக் காத்து நிற்க நான் கரடியாகக் கத்தியும் பாண்டித்துரை ஓடுவது, புதர்கள் வழியாக மறைவது என் கண்ணில் தெரிந்தது. சில நிமிஷங்களில் அதையும் காணோம்!

"முத்தையா, முத்தையா" என்ற ஏக்க ஒலிகளும் மெதுவாக என்னை விட்டு விலகிப் போய்க் கொண்டிருந்தன.

பயங்கரமும், ஆபத்தும் அங்குலத்துக்கு அங்குலம் நேரக் கூடிய இடத்தில் முத்தையனைத் தேடி அழுது புலம்பி அரற்றும் குரல் யாருடையதாக இருக்கும்?

"அந்தக் குரலைக் காண முடியாதா?" இதே நினைவாக பரண் மீது இருந்தேன்.

குரல் மட்டும் சோகத்தின் உருவாய் அரற்றியது!

(தொடரும்)

போன்: 151 தந்தி: VESSELS

குறைந்த விலையில் சிறந்த பாத்திரங்கள்

எவர் சில்வர் பாத்திரம், எவர் சில்வர் தகடு,
பித்தளை, செம்புப் பாத்திரம், பித்தளை,
செம்புத் தகடுகள் உத்திரவாதத்
துடன் கிடைக்கும்.

★

பெ. சி. சி. சுந்தரம்மாள் அன் கோ.,
பாத்திர வியாபாரம்
28, வெங்கலக்கடைத் தெரு,
மதுரை.

நீடித்து உழைக்கும்

பாத்திரங்கள்

எங்களிடத்தில் அலுமினியம், கண்ணாடி சாமான்கள், பீங்கான், எனாமல் தினுசுகள், விளக்குகள், ஊறுகாய் ஜாடி, புட்டி, கார்க்கு, எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் பலவித மான சாமான்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும்.

சு. சந்தோஷ நாடார் & சன்

1/4, ஈவினிங் பஜார், பி.டி. மதராஸ்.

S. SANTHOSA NADAR & SON

1/4. EVENING BAZAR . . . . P.T. MADRAS.

BAROO/-

கிளை ஆபீஸ்: 23, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-3
37, ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.

INSTALL

DPF

PUMPS

DHANDAYUTHAPANI FOUNDRY PRIVATE LTD.,

PAPPANAICKENPALAYAM,

COIMBATORE.

Phone : 219 - P. B. No. 278 - Grams : MOTORPUMP.

பஞ்சு பறந்தது.

ஐ. சாமிநாதன்.

பஞ்சைப் பறக்க விட்டால் கேடு வரும்......
ராமு பஞ்சைப் பறக்கவிட்டான்......விளைவு.........?

"ராமு" என்று அழைத்துக் கொண்டே விட்டு வாசலில் காலெடுத்து வைத்தேன். பதிலைக் காணோம். தினந்தோறும் காரியாலயத்திலிருந்து திரும்பி விட்டிற்குள் நுழையும்போதே குதித்தோடி என் முன்னே வந்து வரவேற்பு உபசாரம் கொடுக்கும் ராமு இன்றைக்கு எதிர் கொண்டழைக்காத காரணம் என்ன?

"கோமளம் ... ராமு எங்கே"

"மாடியிலே விளையாடிக் கொண்டிருந்தானே ... சரி சரி......உடனே மாடிக்குப் போய் விடாதீர்கள் உங்கள் செல்ல மகனைத் தேடுவதற்கு" என்று உரிமையோடு கோபித்தாள் கோமளம்.

நான் கோட்டைக் கழற்றி விட்டு கோமளம் கொடுத்த காப்பியை ருசித்துவிட்டு மாடிக்குச் சென்றேன்.

அங்கே......

ராமு மொட்டை மாடியில் சுவாரஸ்யமாகக் கையில் கற்றை பஞ்சை வைத்துக் கொண்டு சிறிது சிறிதாக ஊதிப் பறக்க விட்டுக் கொண்டிருந்தான். உடனே எனக்கு வந்த கோபத்திற்கு.............அந்தப் பஞ்சு அப்படியே எரிந்திருக்கும்.

"டேய் என்ன வேலைடா இது?" குரலிலே அளவுக்கு மீறிய கடுமையைக் குழைத்தேன். ராமு திடுக்கிட்டுத் திரும்பினான். அவன் முகத்திலே ஆச்சரியமும், பயமும் நிறைந்திருந்தது. நானா அவனைத் திட்டுவது என்ற ஆச்சரியம் அவனுக்கு.

அவனிடத்தில் வேகமாகச் சென்று அவன் கையிலிருந்த பஞ்சைப் பிடுங்கினேன்; தரதரவென்று அவனைக் கிழே இழுத்துக் கொண்டு வந்தேன்.

"இதற்குத் தானா மாடிக்கு அவசரம் அவசரமாகப் போனீர்கள்" இது கோமளத்தின் குற்றச் சாட்டு!

"உனக்கு கொஞ்சமாவது புத்தி இருக்கா? இவன் மாடியிலே என்ன செய்து கொண்டிருந்தான் தெரியுமா...... பஞ்சைப் பறக்க விட்டுக் கொண்டு இருக்கிறான். ஆகாத காரியமெல்லாம் குழந்தை செய்கிறதே என்று உனக்குப்பட்டால் தானே..."

கோமளம் ராமுவை முறைத்துப் பார்த்தாள்.

"என்ன, பஞ்சையா பறக்க விட்டான்! எனக்குத் தெரியவே தெரியாதே......போடுங்கள் நாலு முதுகில்."

தன்னுடைய வக்கீல், வழக்கின் இறுதியில் தன்னையே குற்றம் சாட்டி விட்ட நிலையில் ராமு இருந்தான். அவனுக்கு என்ன தெரியும். ஐந்து வயதுப் பையன் தானே!

"டேய்......இனிமே பஞ்சைப் பறக்க விடு, சொல்றேன்...கையை ஒடித்திடுவேன். பஞ்சைப் பறக்க விட்டா என்ன ஆகும்னு தெரியுமா..." நான் நாக்கைக் கடித்துக் கொண்டேன்.

கொஞ்சிக் குழையும் அப்பா, இப்படிக் கோபமாகப் பேசுகிருரே என்ற ஏக்கம் கொப்பளித்துக் கொண்டிருந்தது ராமுவின் முகத்தில்!

பாவம்! அவனுக்கு என்ன தெரியும்!

தர்க்க நூல் ஆசிரியர்: (மாணவனிடம்) நம்நாட்டிற்கு வடக்கே இமய மலையும், தெற்கே இந்து மகாசமுத்திரமும், மேற்கே அரபிக் கடலும், கிழக்கே வங்காளக்குடாக் கடலும் இருக்கிறதல்லவா! அப்படியானல் என் வயது என்ன?

மாணவன்: ஐம்பது, ஸார்.!

த. ஆசிரியர்: கரெக்ட்! எப்படி கண்டுபிடித்தாய்?

மாணவன்: எங்கள் வீட்டில் ஒரு அரைப் பைத்தியம் இருக்கிறன். அவனுக்கு வயது இருபத்தைந்து ஸார்!

எனக்கு இன்னமும் ஞாபக மிருக்கிறது. எனக்குப் பதினைந்து வயதிருக்கும் போது நடந்த நிகழ்ச்சி. பக்கத்து வீட்டிலே கோபாலன் என்ற பையன் பஞ்சைப் பறக்க விட்டுக் கொண்டிருந்தான். அப்போது அவனுடைய தாய் வாசலுக்கு வந்தாள். தன் பிள்ளையின் செயலைக் கண்டு பதறினாள். "அடப்பாவீ......பஞ்சையா பறக்க விடறே......குடும்பத்துக்கு ஆபத்துடா......" என்று பத்து அறைகள் வைத்து இழுத்துக் கொண்டு சென்ருள். அன்று இரவு தன் மகன் வீட்டிற்குச் செல்வதாக இருந்தாள். ஆனல்...அவள் சென்ற ரயில் காவிரியில் குளிக்க விருப்பம் கொண்டு அதிற் குதித்து விட்டது. பஞ்சைப் பறக்க விட்ட தன் பலன் இப்படி நேர்ந்தது.

அந்தச் சம்பவம் என் உள்ளத்தில் ஆழப் பதிந்திருந்தது.

அன்று இரவு பனியற்ற இரவு. பௌர்ணமி சந்திரன் பிரகாசித்துக் கொண்டிருந்தான். நானும் ராமுவும் சாப்பிட்டு விட்டு மொட்டை மாடியில் பாயை விரித்துப் படுத்துக் கொண்டோம்.

"திறந்த வெளியில் என்ன படுக்கை......" வேறு யார்! கோமளம் தான்!

"இல்லே......கொஞ்ச நேரம் தான்" என்று கூறிக் கொண்டே ராமுவைப் பார்த்தேன். அவன் சிரித்துக் கொண்டிருந்தான். அப்பாவையும் அடக்குகிருளே அம்மா என்று எண்ணமோ?

மெல்ல அவன் முகத்தை வருடினேன். அவனுக்கு அப்போது தான் பயம் தெளிந்திருக்க வேண்டும்.

"அப்பா..." என்று மெதுவாகக் கூப்பிட்டான்.

"ஏண்டா..."

ஆனல் அப்புறம் அவன் பேசவில்லை.

"ஏனடா கூப்பிட்டாய்?"

"ஹி...ஹி..."

அவன் சிரித்தான். நான் அவனுடன் பேசுகிறேனு அல்லது கோபித்துக் கொண்டிருக்கிறேனு என்று பரீட்சித்தான் போலிருக்கிறது.

"நிலாவைப் பாரப்பா......எவ்வளவு அழகா இருக்குது."

'ஆமாம்" என்று சொல்லிவிட்டு அவனுக்குப் புரியும் படியாக சந்திரனுக்கு எதை உவமையாகக் கூறலாம் என்று யோசித்தேன்.

"எனக்கு வாங்கித் தந்திருக்கே பார்...புதுசா வெள்ளித் தட்டு. அது மாதிரியே இல்லே நிலா...?" என்ருன் ராமு.

நான் அவனை கட்டிக் கொண்டேன்.

"மேகத்தைப் பாத்தியாப்பா ... வெள்ளை வெளேர்னு வேகமாப் பறக்கிறது."

"ஆமாம்...பஞ்சுபோல..." நாக்கைக் கடித்து வார்த்தைகளை முழுங்கினேன்.

"ஆமாம்பா, பஞ்சுபோலவே அழகாப் பறக்கிறது. ஆமாம், யாருப்பா மேகங்களைப் பறக்க விடரு?"

"அவையெல்லாம் அமரர்கள், தேவர்கள் பறக்க விடுகிற பஞ்சு" என்றேன்! அடசி! என்னதான் முயன்ருலும் அதைப் பற்றியே பேச்சு வருகிறதே!

"அவர்கள் மாத்திரம் பறக்க விடலாமா? நான் பஞ்சை ஊதி ஊதி அழகாப் பறக்க விட்டபோது என்னைத் திட்டினியே..." என்ருன் ராமு!

"அவர்களெல்லாம் அமரர்கள், பறக்கவிடலாம்" என்று பதிலளித்தேன். அந்தச் சூழ்நிலையில் அவனை அதட்டத் தோன்றவில்லை. ஏதாவது பேசிக் கொண்டிருக்க வேண்டும் போல இருந்தது.

"நான் ஏன் பறக்க விடக் கூடாது?"

"நீ மனுஷன்தானே... அமரன் இல்லையே" என்று ஏதோ உண்மையைக் கண்டு பிடித்து விட்டதைப் போலக் கூறினேன்.

"நானும் அமரன் ஆனல், பஞ்சைப் பறக்க விடலாமா..."

"சீ! அசடு மாதிரிப் பேசாதே! தூங்குடா." கடுமையை வலிய வரவழைத்துக் கொள்ள வேண்டியிருந்தது.

அவ்வளவு தான்! ராமு படுக்கையை விட்டு எழுந்து சிட்டாய் உள்ளே ஓடி விட்டான்.

நான் வானத்தைப் பார்த்தேன். ஏதோ காரியத்தைச் சாதிக்க அவசரமாகப் போவது போல வெண் மேகங்கள் வேகமாகப் பறந்து கொண்டிருந்தன!

∴ ∴ ∴

மறு நாள் காலையில் எழுந்திருக்கும் போது மணி ஏழரை! கண்

வக்கீல்: (குற்றவாளியைப்பார்த்து) நீ பள்ளிக்கூடத்திற்குப் போனதே கிடையாது என்கிருய். ஆனல் நான் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் சரியான பதில் சொல்லிவிடுகிருய்?

குற்றவாளி: உங்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்ல ஒரு அறிவாளி தேவையில்லையே!

விழித்தவுடன் எதிரே கிடந்த பஞ்சு கண்ணில் பட்டது!

"சீக்கிரம் எழுந்து காபியைக் குடித்துவிட்டு மார்க்கெட்டுக்குப் போய் வாருங்கள்" என்ற குரல் சோம்பலைத் துரத்தியடித்தது.

காய்கறி வாங்கிக் கொண்டு அவசர அவசரமாகத் திரும்பி வந்து கொண்டிருந்தேன்.

"ஹி... ஹி... என்ன சார்?" என்று என்னைப் பிடித்துக்கொண்டு விட்டார் எதிர் வீட்டுக்காரர்.

அவரிடத்தில் அகப்பட்டுக் கொண்டால் போச்சு! மனிதர், வீட்டுச் சாக்கடை அடைத்துக் கொண்ட செய்தியைச் சொல்ல ஆரம்பித்து சம்பள உயர்வு தராத விஷயம் வரை இழுத்துக் கொண்டு போய் விடுவார்.

"என்ன சார், காய்கறி வாங்கினீரா?" இது என்ன கேள்வி! பையையும் மீறிக் கொண்டு எட்டிப் பார்த்த புடலங்காய் மரச்சாமானாகவா இருக்க முடியும்!

"ஆமாம்..." என்று சொல்லி விட்டு முகத்தில் சிரிப்பை வரவழைத்துக் கொண்டேன்.

"காய்கறிகளெல்லாம் ஏகக் கிராக்கி..." என்றார். உண்மையில் அன்றைக்கு மிக மலிவு. அதை அவரிடத்தில் சொல்ல முடியுமா?

நான் என் வீட்டை நோட்டம் விட்டேன். கோமளம் நான் வருகிறேனா என்பதைப் பார்க்க வெளியில் வரலாமல்லவா? ஆனால் என் கண்ணிற்பட்டது, மொட்டை மாடியில் நின்றிருந்த ராமுதான்!

ஆ! மறுபடியும் அவன் கையில் பஞ்சு!

"ஆபீஸெல்லாம் எப்படி இருக்கு?"

"இருக்கு...ஏதோ ஓடறது..." எனக்கு எப்படி அவரிடமிருந்து விடுதலை பெறலாம் என்றிருந்தது. மறுபடியும் அவர் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்.

ராமு மறுபடியும் பஞ்சைப் பறக்க விட்டுக் கொண்டிருந்தான். சூரியனின் ஒளியில் பால்வடியும் முகம் பளிச்சிட்டுக் கொண்டிருந்தது. கண்கள் கூசும் பிரகாசம். காலையொளியில் பஞ்செல்லாம் மின்னிப் பறந்தன. அவன் உற்சாகமாக ஊதிப் பறக்க விட்டுக் கொண்டிருந்தான்.

ஐயோ! அவன் பின்னாலேயே சென்று கொண்டிருந்தான். நாலடி தாண்டினால் பாதாளம்; அது தான் மாடிப்படி.

நான் "இருங்கள், ஸார்" என்று கூறிக்கொண்டே வீட்டுக்குள் ஓடினேன்.

முதல் அறையைத் தாண்டி மாடிப்படியின் முனைக்கு வந்துவிட்டேன்.

"டேய், ராமு" என்று கூவினேன்.

ஆனால்...அப்படியே நிலை குலைந்து பின்னே சாய்ந்து விட்டான். 'தட தட' வென்று மாடிப் படிகளில் உருண்டு கீழே விழுந்தான். நான் வந்த வேகத்தில் அவனை அப்படியே வாரியெடுத்தேன். இளநீர்க் காயாக இருந்த அவனது மண்டை பிளந்து ரத்தம் கொப்பளித்துக் கொண்டிருந்தது.

"கோமளம்..." என்று அலறினேன். என் மேல் துண்டால் மண்டையில் அழுத்திக் கட்டினேன். அங்கே ஓடிவந்த கோமளம் அந்தக் காட்சியைக் கண்டுக் கதறிவிட்டாள்.

நான் ராமுவை அவளிடம் ஒப்படைத்து விட்டு டாக்டரிடம் ஓடினேன்.

டாக்டர் வந்து பார்த்தார் "நல்ல அடிதான். மண்டையில் பட்டிருக்கிறது." என்றார்.

ராமுவுக்கு நினைவு இல்லை.

"டாக்டர்...ராமுவுக்கு..." என்னால் பேசவே முடியவில்லை. கவலையும் துக்கமும் அழுகையாக மாற முயற்சித்தன.

அவர் நாடியைப் பிடித்துப் பார்த்தார்; மண்டையைப் பரிசோதித்தார்; எங்கள் கண்ணனின் கண்ணிமையை நீக்கிப் பார்த்தார். நானும் கோமளமும் கண்களில் கண்ணீர் மறைக்க டாக்டரின் முக பாவத்தையே பார்த்துக் கொண்டிருந்தோம்.

ஆனால்...ஐயோ! அவர் முகம் விகாரமடைந்தது.

அவர் கைக்கடியாரத்தைப் பார்த்தார். மணி பத்தைத் தாண்டினால் கவலையில்லை என்று சொல்லி விட்டுப் புறப்பட்டார். "டாக்டர்..." நான் கதறினேன்.

நானும் கோமளமும் ராமுவின் தலைமாட்டிலேயே உட்கார்ந்திருந்தோம். கோமளம் மெத்தையை விரித்து அதில் ராமுவைத் தூக்கிப் படுக்க வைத்தாள்.

மணி ஒன்பது.

கோமளம், ராமுவின் முகத்தையே கவனித்துக் கொண்டிருந்தாள். அவளது துக்கத்தை விவரிக்க வார்த்தையேது! அவள் ராமுவின் தாய். அவ்வளவுதான் சொல்ல முடியும்.

எனக்கு நெஞ்சு வலித்தது; கண்கள் இருண்டன; மணி ஒன்பது ஐம்பது.

ஆ! என் ராமு கையை அசைத்தான். அவன் பிஞ்சுக்கரங்கள் மெத்தையைத் துழாவின. கிழிந்த மெத்தையில் கரம் புகுந்தது; கை நிறையப் பஞ்சை வாரியெடுத்தது.

"ராமு..." இத்தனை நேரம் அடக்கிக் கொண்டிருந்த அழுகை எரிமலையாக வெடித்தது.

திடீரென ராமுவின் முகத்தில் மலர்ச்சி. எங்களைப் பார்த்து புன்முறுவல் பூத்தான்!

P.R.A & SONS
TINNEVELLY DISTRICT
INDIA (MUKKUDAL P.O.) REGD No. 6444
அசல் ராமகிருஷ்ண மார்க்
TRADE MARK
REGD NO 6444
பீடி கம்பெனி முக்கூடல்
RAMAKRISHNA MARK BEEDI

கொலைக்குப் பின்...!

கே. ரகுபதி

புவனகிரியை கோகிலாவின் கணவன் கொல்ல வருகிறன்—
பின்னர் அவள் மகன் சுடுகிறன்—
கோகிலா இருமுறையும் அவனைக் காப்பாற்றி தான் சாகிறுள்.

புவனகிரி தன் அனுபவத்திலேயே முதல் தடவையாக இன்னது செய்வதென்றறியாது தவித்தான். இருதலைக் கொள்ளி எறும்பு என்ற நிலை அவனுக்கே பொருந்தும்!

பொறுப்பான போலீஸ் இன்ஸ்பெக்டரான அவன், விசித்திரமான இந்த கொலை வழக்கில், விபரீதமான சம்பவங்களைக் கண்டு, மூளை குழம்பினுன்.

சாதாரண கான்ஸ்டபிளாக வந்தவன், ஏட்டாகி, சப்இன்ஸ்பெக்டராகி, இன்ஸ்பெக்டராகவும் ஆகிவிட்டான் மிகக் குறுகிய காலத்தில்—மூன்றே ஆண்டுகளில்!

கொலை செய்யப்பட்டவர் நகர பிரமுகர்களில் ஒருவர்; பிரபல வியாபாரியும் கூட. எனவே அது சம்பந்தமாக பரபர வென்று குற்றவாளியைக் கண்டு பிடிக்க ஆயத்தங்கள் செய்ய வேண்டியிருந்தது. தவிர, புவனகிரியைப் பொறுத்த வரையில் இன்னெரு முக்கியமான காரணமும் இருந்தது. அவனுடைய காதலி பிரேமா, அதில் சம்பந்தப்பட்டுவிட நேர்ந்தது தான்!

பிரேமா, நவநாகரிகப் பெண்; கும்பகோணம் காலேஜ் மாணவி. எக்ஸ்டென்ஷனில் அவளுடைய தந்தையுடன் வசித்து வந்தாள்.

பழைய மாணவன் என்ற முறையிலும், நாடகங்கள் எழுதிக் கொடுத்தல், பயிற்சி செய்வித்தல் என்ற முறையிலும் இன்னெரு இன்ஸ்பெக்டரான அன்புநாதன் அடிக்கடி காலேஜுக்குப் போவார். அவருடைய வற்புறுத்தலின் பேரில் அவருடன் காலேஜ் நாடகங்களுக்கு போய்வந்த போது தான், கர்வமில்லாத, கலகலப்பாகப் பேசும் பேரழகியான பிரேமாவின் நட்பு கிடைத்தது புவனகிரிக்கு. அந்த நட்பு காதலாக மாற அதிக நாட்களாக வில்லை.

சிறந்த முற்போக்கு வாதியானதாலும், தன் ஒரே பெண் மனச் சந்துஷ்டியுடன் இருக்க வேண்டும் என்ற விசால மனப்பான்மையாலும் பிரேமாவின் தந்தை சுந்தரம், புவனகிரி அடிக்கடி தன் வீட்டுக்கு வருவதையோ, அவரும் பிரேமாவும் சினிமா, நாடகங்களுக்கு சேர்ந்து போவதையோ ஆட்சேபிக்கவில்லை.

அன்று கல்லூரியின் பழைய மாணவர் தினம். காலையிலிருந்து விளையாட்டுப் பந்தயங்கள் முதலியனவும், மாலையில் நாடகம் முதலிய கேளிக்கைகளும் தொடர்ந்து இருந்தன. எல்லாம் ஒரு வழியாக முடிவடையும் போது இரவு மணி பன்னிரெண்டாகி விட்டது. அங்கேயே சாப்பிட்டுவிட்டு, பிரேமா தன் தோழியும் சகமாணவியுமான பரிமளாவுடன் புறப்பட்டாள். இரவு நேரமாகும் என்று டிரைவரிடம் முன்பே சொல்லி அனுப்பி விட்டபடியால் தானே காரை ஓட்டிச் சென்றுள்.

பாளுதுரையில் பரிமளா இறங்கிக் கொண்டாள். "திருடர் பயமெல்லாம் இருக்குமே, தனியாகப் போவாயா பிரேமா?" என்ருள் பரிமளா.

கல கல வென்று நகைத்தபடி, "பயமா? எனக்கா? ஒரு திருடனும் என்னிடம் வரமாட்டான்" என்றபடி காரைக் கிளப்பினுள் பிரேமா.

கார் ஆஸ்பத்திரி சாலேயில் வேகமாக விரைந்தது. இரு புறமும் வயல் வெளிகள். வீடுகளே கிடையாது. அதுவும் அந்த இரவு, அமாவாசைக்கு முதல் நாளோ என்னவோ? கருங்கும்மென்ற இருட்டு எங்கும் விரவிக் கிடந்தது.

திடீரென்று கார் நின்றது. பிரேமா திகைத்தாள். எப்படி நின்று விட்டதென்றே அவளுக்குப் புரியவில்லே.

பிரேமாவிற்கு பயம் பிடித்துக் கொண்டு விட்டது. "இந்த அமானுஷ்யமான இடத்தில், நிசப்தமான இரவில் தன்னந்தனியாக...அசட்டுத்தனமாக டிரைவரையும் போகச் சொல்லி விட்டோமே!" என்று செய்வதறியாது விழித்த பிரேமா, "ஏம்மா காரை இங்கே நிறுத்தியிருக்கீங்க?" என்ற குரல்கேட்டு நிமிர்ந்தாள். ஒரு குதிரை வண்டிக்காரன்.

அப்புறம் அவன் உதவி கொண்டு காரைத் தள்ளச் செய்து பிரேமா வீடு வந்து சேர்ந்த பாடு, பெரும்பாடாகி விட்டது. அந்த ஆளுக்கு ஒரு ரூபாய் பணமும் கொடுத்து அனுப்பினுள்.

வீட்டினுள் போய் 'டார்ச்' விளக்கை எடுத்துக் கொண்டு வந்தாள் ஒரு பெட்டியை எடுக்கும் பொருட்டு. இது என்ன மூட்டை!

காலேஜிலிருந்து புறப்படும் போது, பெட்டியை மட்டும்தானே வைத்திருந்தாள்.

மெதுவாக அந்த மூட்டையைத் தடவிப் பார்த்து, மேலே கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்தவள், 'கிரீச்' சென்று கத்திவிட்டாள். ஆம்! அதிலே ஒரு பிணம்—ரத்த வெள்ளத்தில்! இதை யார் அவள் காரிலே கொண்டு வந்து போட்டிருப்பார்கள்?

பிரேமா கத்தியவுடன், மாடியிலிருந்து சுந்தரம் ஓடிவந்து விட்டார். சற்று முன் கதவைத் திறந்து விட்ட வேலைக்காரி அல்லியும் அங்கு வந்து விட்டாள். வீதியில் ரோந்து போய்க் கொண்டிருந்த போலீஸ் கான்ஸ்டபிள் ஒருவனும் வந்து விட்டான். எல்லோரும் ஏககாலத்தில் கேட்ட ஒரே கேள்வி; "என்னம்மா? என்ன நடந்தது?"

பிரேமா குழறினுள். என்ன சொல்வதென்றே புரியவில்லே. "என்னது. என் பிணத்திலே கார், இல்லே, இல்லே, என் காரிலே பிணம்? எப்படி வந்தது?"

அங்கு தைரியமாக அந்த சாக்கு மூட்டையை பிரித்துப் பார்த்தவன் அந்த கான்ஸ்டபிள் தான். நிதானமாக எல்லாவற்றையும் பார்த்து விட்டு, "சரி, ஸ்டேஷனுக்குப் புறப்படுங்க, எல்லாம் அங்கே பேசிக்கலாம்."

பிரேமா பதறி விட்டாள். "ஸ்டேஷனுக்கா? நாளு? நான் ஒண்ணும் கொலே செய்யலேயே" சுந்தரம் இதற்குள் ஸ்டேஷனுக்கே போன் செய்து விட்டார்.

மோட்டார் சைக்கிளில் புவனகிரி வந்தான். பிரேமா அவனிடம் ஓடி 'என்னே கைது செய்யவா வந்து விட்டீர்கள், புவன்?" என்ருள் கண்களில் நீரைச் சொரிந்து கொண்டே.

காலேஜிலிருந்து தோழியுடன் திரும்பியதிலிருந்து, வழியில் கார் மக்கார் செய்து குதிரை வண்டிக்

காரன் தள்ளிக் கொண்டு வந்து சேர்த்தது வரையில் நடந்த சம்பவங்களை விவரித்தாள் பிரேமா. அவள் குரலில் இருந்த படபடப்பும் பயமும் யாவும் உண்மை என்றே பறை சாற்றின.

அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த புவனகிரி, "பிரேமா உன்னை நான் இப்போது ஒன்றும் செய்யவில்லை. நீ போய் பயமில்லாமல் படுத்துக் கொள். பின்னால் குற்றவாளி கண்டு பிடிக்கப்பட்டு வழக்கு நடக்கையில் நீ சாட்சி சொல்ல வேண்டி வரும்" என்றான். நிம்மதியாக பெருமூச்சு விட்டாள்

அவருடைய பிணம் சாக்கிலே கட்டப்பட்டு பிரேமாவின் காருக்கு வந்த விதம் எப்படி? பாணுதுரையில் சிநேகிதியின் வீட்டருகில் பிரேமா காரை நிறுத்தினபோதா? அல்லது காலேஜிலிருந்து புறப்படும் போதே இருந்ததா?' புறப்படுகையில் தன் பெட்டி ஒன்று மட்டுமே வைத்ததை திடமாகச் சொன்னாள் பிரேமா. சிநேகிதியின் வீட்டருகிலும் ஒரு நிமிடத்துக்கு மேல் நிறுத்த வில்லை. அப்படியானால்—ஆஸ்பத்திரி சாலையில் கார் மக்கார் செய்தபோது, உதவிக்கு வந்தானே குதிரை வண்டிக்காரன், அவன் ...



பிரேமா. "இனிமேல் டிரைவர் இல்லாமல்தனியாக காரில் வராதே, அம்மா" என்று சொல்லி விட்டு சுந்தரம் மாடிக்குப் போனார்.

புவனகிரி மட்டும் தனக்கறிமுகம் ஆனவராக இல்லாமல் போயிருந்தால்......இந்நேரம் சிறையில் வாட வேண்டிய கதி ஏற்பட்டிருக்கும் அல்லவா?—என்று பலவிதமான சிந்தனையில் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தாள் பிரேமா.

அதே நேரத்தில் புவனகிரியும் ஸ்டேஷனில் அவதிப்பட்டுக் கொண்டுதான் இருந்தான். கொலையுண்டவர் நகர பிரமுகரும் பிரபல வியாபாரியுமான சுவாமிநாதன்!

பாவம், சமயத்தில் உதவி செய்தவன் அவன். அவனைச் சந்தேகிக்கலாமா என்று அதை நம்ப மறுத்து விட்டாள் பிரேமா. தவிர, அவன் உதவிக்கு வந்தபோது பொருள் எதுவும் அவன் கொண்டு வரவில்லை என்று திடமாகச் சொன்னாள்.

மறுநாள் காலையில் எல்லா குதிரை வண்டிக்காரர்களையும் கொண்டு வந்து ஸ்டேஷனில் நிறுத்தி வைத்து, பிரேமாவை அடையாளம் காட்டச் சொன்னான் புவனகிரி.

இரவு நேரம்; அதோடு அரை மணி நேரம் கூட ஆகியிராது என்ப

தினல் அடையாளம் பிரேமா கண்டு பிடிக்கத் திணறினள்

கடைசியில் ஒருவனைக் காட்டி, "இவன் தான்" என்ருள். "ஐயையோ, நான் உங்களைப் பார்த்தது கூட இல்லீங்களே" என்று அவன் கதறவே, பிரேமாவுக்கே சந்தேகம் வந்து விட்டது.

ஒருவேளை, இவனுக இருக்காதோ?

பிரேமா தடுமாற்றத்தைக் கவனித்த புவனகிரி, இந்த மாதிரி அடையாள அணிவகுப்பினல் யாதொரு பலனும் கிடைக்காது என்பதை உணர்ந்து அனைவரையும் போகச் சொல்லி விட்டான்.

"கவலைப் படாதே பிரேமா, நீ நிம்மதியாகப் போ. எப்படியும் நான் கண்டு பிடிக்காமல் விட மாட்டேன்" என்று சொல்லி அவளை வீட்டுக்கு அனுப்பப் பட்ட பாடு பெரிய பாடாகப் போய் விட்டது புவனகிரிக்கு.

இந்த வழக்கைப் பற்றி யோசித்துக் கொண்டே புவனகிரி தன் வீட்டை நோக்கி நடந்தான். அருகில் நெருங்கினபோது யாரோ தன் வீட்டிலிருந்து வேகமாக வெளியேறியது தெரிந்தது.

பரபரப்புடன் வீட்டுப்படியேறி உள்ளே சென்ருன் புவனகிரி. அவன் தாய் கோகிலா சுவாமி படத்தருகில் நின்று ஏதோ பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள்.

"அம்மா, இப்போது இங்கே வந்து போனது யார்?" என்ருன் பதட்டமாக. கோகிலா அமைதியாகத் திரும்பிச் சொன்னள். "ஒருத்தரும் வரவில்லையே"

இதென்ன விந்தை? தன் கண்களே தன்னை ஏமாற்றுகிறதா? ஒன்றும் புரியாமல் தன் அறைக்குச் சென்ருன். அன்றிரவு, நெடு நேரம் உறக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான்; பின்னர் கண்ணயர்ந்தான். சில விநாடிகள் கழிந்தன.

"வேண்டாம், வேண்டாம், என் மகனைக் கொல்லாதீர்கள்" என்ற கூக்குரலும், "ம்.........என்னைத் தடுக்காதே, அவன் நம் விரோதி" என்ற பயங்கரமான குரலும் கேட்டு விழித்துக் கொண்டான் புவனகிரி.

விளக்கைப் போட்டவன், மறு நிமிடம் அணைத்து விட்டு டார்ச்சை கையில் எடுத்துக் கொண்டு ஜன்னல் கதவைத் திறந்து அதன் வழியே குரல் வந்த இடம் நோக்கி விளக்கை அழுத்தின போது கையில் கத்தியுடன் இருந்தான் ஒருவன்; அவனைத் தடுத்துக் கொண்டிருந்தாள் அவன் தாய்.

'டார்ச்' வெளிச்சம் முகத்தில் பட்டதும்அவன் ஓட்டம் பிடித்தான். புவனகிரி தன் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு பின் தொடர்ந்தான். அவன் யாரென்பது புவனகிரிக்குப் புரிந்து விட்டது. ஆம்! காலையில் பிரேமா அடையாளம் காட்டினளே குதிரை வண்டிக்காரன், அவனே தான்!

அவன் இங்கே கத்தியுடன் வர வேண்டிய காரணம்? தன் தாய்க்கும் அவனுக்கும் என்ன சம்பந்தம்? அவள் அவன் கையைப் பிடித்து தடுத்து நிறுத்த வேண்டிய காரணம்...? 'என் மகனைக் கொல்லாதீர்கள்; என்று கத்தினவளுக்கு, 'அவன் நம் விரோதி' என்ருனே அவன்......!

ஏதோ பெரிய மர்மம் இதில் அடங்கியிருக்கிறது என்ற முடிவுடனே ஓடி வந்தான். இதற்குள் அவன் தாய் அவனுக் கருகில் வந்து அவன் கையைப் பிடித்து நிறுத்தினள்.

"எங்கே ஓடுகிருய்?"

"என்னை விடுங்களம்மா. அவனைப் பிடித்தாக வேண்டும்"

"அவரை ஒன்றும் செய்யாதே, உன் மேல் ஆணை"

"இதென்னம்மா விந்தை? கேவலம் குதிரைவண்டிக்காரன், கொலை ஒன்றில் சம்பந்தப் பட்டிருக்கிறன், அவனுக்குப் போய்..."

"அப்படிச் சொல்லாதே. அவர் என் கணவர்"

புவனகிரி இதைக் கேட்டதும் திகைப்புடன் நின்று விட்டான்.

"என் தந்தை என்ரு சொல்கிறீர்கள்!"

"அவர் உன் தந்தையில்லை. என் கணவர்"

"என்ன இது? தன் தாய்க்கு கணவர், தனக்குத் தந்தையில்லையா? அப்படியானால் சிறு வயதிலேயே தந்தை இறந்து விட்டதாக முன்னொரு முறை கூறியிருக்கிருளே தாய், அது பொய்யா? நேர்மையான நடத்தையும், திடமான பேச்சும் கொண்ட கோகிலா, சதா பூஜை என்றும், கோவில் என்றும் காலம் கழித்த படியே என்னை வளர்த்த தாய், இன்று புதிதாக வந்த ஒரு குதிரை வண்டிக்காரனை கூசாமல் கணவர் என்கிருளே, அது பொய்யா? இவ்வளவு காலமாக என் தாயுடன் அவன் பேசி கண்டறியாதவன், இன்று திடீரென்று எப்படி வந்தான்? காலையில் நான் வந்த போது வீட்டிலிருந்து வெளியேறியவனும் இவன் தானு? அந்த கொலைக்கும் இவனுக்கும் ஏதாவது..." என்று எண்ணியபோது புவனகிரிக்குத் தலை சுழன்றது. உள்ளே போகத் திரும்பின கோகிலாவின் முன் போய் வழி மறித்து நின்றுகொண்டு,

"அம்மா, உண்மையைச் சொல்லுங்கள். அந்த குதிரை வண்டிக்காரன் உங்கள் கணவரானல், என் தந்தை யார்? இவ்வளவு காலம் இவன் எங்கே போயிருந்தான்? எனக்கு எல்லாவற்றையும் விளக்குங்கள்."

கோகிலா அவனை ஒரு முறை ஏறிட்டு நோக்கினள். "நீ போய் படுத்துக் கொள்; காலையில் பேசிக் கொள்ளலாம்." என்று தட்டிக் கழித்தாள்

அவன் விடவில்லை. "அம்மா, என் இதயம் வெடித்து விடும் போலிருக்கிறது. உண்மையை நீங்கள் தயவு செய்து சொல்லித்தானுக வேண்டும். தவருன நடத்தைக் காரியோ என்ற சந்தேகத்தோடு உங்களைப் பற்றியே எண்ணிக் கொண்டு பொழுதைக் கழிப்பதை விட நான் தற்கொலையே செய்து கொள்வது மேல் என்று என் உள்ளம் எண்ணுகிறது." என்று கூறி கையிலிருந்த துப்பாக்கியை நெற்றியில் வைத்துக் கொள்ளப் போனன்.

கோகிலா பதறிப்போய், "வேண்டாம் நான் சொல்லி விடுகிறேன். நீ தற்கொலை செய்து கொள்ளும் காட்சியை காண வேண்டுமா இந்தப் பாவி? என் மகன் கொலைகாரனுக காட்சியளிப்பது போதாதா? நீ வேறு......" என்று முடிப்பதற்குள், "ஆ, உங்கள் மகனு கொலைகாரன்? அப்படி ஒரு மகன் இருக்கிருனு! நான் யார்? உங்கள் மகனில்லையா?" என்ருன் இடைமறித்து.

உள்ளே வந்து சோபாவில் அமர்ந்த கோகிலா "இல்லை; நீ என் மகன் இல்லை. நான் உன்னை வளர்த்தவள் அவ்வளவுதான்" என்ருள்.

"அப்படியானல் நான் யார்?" என்ருன்.

"சொல்கிறேன், கேள்." என்று அவள் சொன்ன சோகக் கதை:—

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு.........

சொக்கலிங்கம் கும்பகோணத்தில் பெரிய தனவந்தரான ரத்ன சபாபதியின் வீட்டில் வேலைக்காரன். அவன் மனைவி கோகிலா. ரத்னசபாபதிக்கு கண்ணுக்கழகான மனைவியும், காண்போரை பிரமிக்க வைக்கும் பங்களாவும்

நிறைய நிலபுலன்களும், பாங்கியிலே ரொக்கப் பணமும் இருந்தது.

ஆனல் மனதிலே நிறைவில்லே. காரணம், புத்ர பாக்கியம் இராதது தான். விவாகமாகி பன்னிரெண்டு வருடங்களாகியும் இவ்வளவு சொத்தையும் தனக்குப் பின் அனுபவிக்க ஒரு குழந்தை பிறக்காத குறை அந்த தம்பதியை பெரிதும் வாட்டி வந்தது. அவர்கள் செய்யாத பரிகாரங்கள் இல்லே; பூஜை, விரதங்கள் இல்லே; சுற்ருத அரச மரம் பாக்கியில்லே. ஆனல் ரத்ன சபாபதிக்கு மகப்பேறு உண்டாகும் வேளே தான் வரவில்லே.

இந்த சமயத்தில் தான் கோகிலாவுக்கு ஒரு ஆண் மகவு பிறந்தது. அந்தக் குழந்தை மிகவும் அழகாக இருக்கவே, எஜமானியம்மாளுக்கு அதன் மேல் பெரிதும் ஆசை விழுந்து விட்டது. குழந்தை முதலாளி வீட்டிலேயே வளர்ந்தது. சொக்கலிங்கத்துக்கும் கோகிலாவுக்கும் பெருமையாகவே இருந்தது.

திடீரென்று ஒரு நாள் சொக்கலிங்கத்தை அழைத்தார் ரத்னசபாபதி. "சொக்கா, இனிமேல் எனக்கு குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கையில்லே. கோவிந்தன் என்னிடமே வளர்ந்து வருகிருன். நீயோ இங்கேயே தான் இருக்கப் போகிருய். ஆகவே......'' மேலே சொல்லத் தயங்கினுர்.

"சொல்லுங்க, எஜமான்''

"இல்லே, நீ என்ன சொல்வாயோ'' என்று யோசிக்கிறேன். "கோவிந்தனே நான் 'தத்து' எடுத்துக் கொண்டுவிட முடிவு செய்து விட்டேன். நீ என்ன சொல்கிருய் ?''

சொக்கலிங்கத்துக்கு அது நியாயமாகவே பட்டது. கோகிலாவும் அதை ஆமோதித்தாள்.

'தத்து' எடுத்துக்கொள்ளும் வைபவம் ஒரு நாள் விமரிசையாக நடைபெற்றது.

ரத்னசபாபதியின் சொத்து முழுவதற்கும் தன் மகன் கோவிந்தனுக்கே இருக்கும் என்ற மனநிறைவால் சொக்கலிங்கமும் கோகிலாவும் உள்ளம் பூரித்திருந்தார்கள். சில ஆண்டுகள் கழிந்தன.

ரத்னசபாபதியின் மனேவி கருவுற்றிருந்தாள்! அவர் உளம் பூரித்தார். 'தத்து' எடுத்துக் கொண்டவேளே, மிக நல்லவேளே என்று அவர் மனம் குதூகலத்தால் கும்மாளியிட்டது. தனக்கு மகன் பிறக்கப் போகிருன் என்ற களிப்பில் மூழ்கி தத்து மகன் கோவிந்தனே கவனிப்பதையே மறந்து விட்டார்கள். அதனுல் அவன் நாளுக்கு நாள் இளேத்துப் போனுன்.

வேலேக்காரன் சொக்கலிங்கமும், வேலேக்காரி கோகிலாவும் அவனிடம் காட்டும் பாசமும் பரிவும் அவனுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. இவர்கள் தன்னிடம் காட்டும் அன்பு கூட தன் பெற்ருேர் காட்டவில்லேயே என எண்ணியது அவன் குழந்தை உள்ளம். தன் உண்மைத் தாய்தந்தையர் இவர்கள் தான் என்பதை அவன் எப்படி அறிவான் ?

மகனின் வேதனேயைக் கண்டு மனம் புழுங்கின சொக்கலிங்கம் ஓர் முடிவுக்கு வந்தான். ஏதோ ஒரு மருந்தை எப்படியோ முயற்சித்து வாங்கி கோகிலாவின் மூலம் பாலில் கலந்து ரத்னசபாபதியின் மனேவிக்கு கொடுத்துவிடச் சொன்னுன், கர்ப்பம் கலேந்து விட.

கணவனின் கோபத்திற்கு அஞ்சி, அதற்கு ஒப்புக் கொண்டாளே தவிர, துணிந்து ஒரு பெண்ணின் மனோராஜ்யத்தை வேதனேயாக்க கோகிலாவால் முடியவில்லே. மருந்தைக் கொட்டிவிட்டு, கணவனிடம் வந்து பாலில் கலந்து கொடுத்துவிட்டதாகச் சொன்னுள். தன் மகனுக்கு போட்டியாக முளேக்கப் போகிற சிசு அழிந்து விட்டது

என்ற திடமான நம்பிக்கையுடன், நடக்கப் போகும்—மருந்து வேலை செய்யும் விதத்தை—விந்தையை எதிர்பார்த்த சொக்கலிங்கம், ரத்ன சபாபதியின் மனைவி உரிய காலத்தில் ஒரு ஆண் குழந்தைக்குத் தாயான சேதி கேட்டு, பேரிடி விழுந்தவன் போல் ஆனான்.

கோகிலா தன்னை அலட்சியப் படுத்தி விட்டாள் என்ற ஆத்திரம் அவனை அறிவிழக்கச் செய்தது.

"துரோகி" என்று கத்தியபடி அவள் குரல்வளையைப் பிடித்தான்.

வலிதாங்காமல், விழிகள் பிதுங்க அவன் பிடியில் திமிறின கோகிலா கத்தினாள்.

"அடிபாவி, என்னை ஏமாற்றி விட்டாயே?"

"எனக்கு மனம் வரவில்லை, மருந்தைக் கொடுக்க" சொக்கலிங்கத்தின் கண்கள் சிவந்தன. "என் மகனுக்கு கிடைக்க வேண்டிய சொத்து இன்னொருவனுக்குப் போவதா? அப்படிவிட முடியுமா? அந்தக் குழந்தையைக் கொன்று விட்டு மறுவேலை பார்க்கிறேன்" என்று கத்தியபடி வெளியேறினான்.

கோகிலாவுக்கு பயம் பிடித்துக் கொண்டது. ஆத்திரத்தில் குழந்தையைக் கொன்று கொலைகாரனாகி விடுவானோ என்று எண்ணினாள்.

மாலையில், ரத்னசபாபதியின் வீட்டுக்கு வேலைக்குப் போன போது, தன் கணவன் அங்கே வரவில்லை என்பதைக் கண்டாள் கோகிலா. ஒரு வேளை இரவில் வந்து குழந்தைக்கு ஏதேனும் அபாயம் விளைவிக்க முயற்சிக்கலாம்...எப்படியேனும் அந்தக் குழந்தையைக் காப்பாற்றியாக வேண்டும்...எஜமானிக்கு உதவியாக தினமும் இரவில் அவள் அறையிலேயே படுத்துக் கொள்வது கோகிலாவின் வழக்கம். எனவே, அன்றிரவு எஜமானியம்மாள் நன்ருக கண்ணயர்ந்த பிறகு, கோகிலா எழுந்தாள். மெதுவாக குழந்தையைத் தூக்கித் தோளில் சாத்திக் கொண்டாள். ஓசைப்படாமல் வெளியே வந்து கால் போன போக்கில் நடந்தாள்..."

இந்தக் கதையின் சுருக்கம் கூறி விட்டு, "அந்தக் குழந்தைதான் நீ. உன்னை வளர்க்க நான்பட்ட கஷ்டங்கள் சொல்லத்தரமன்று. எவ்வளவோ ஊர்களில், எத்தனையோ வீடுகளில் எப்படி, எப்படியோ கஷ்டப்பட்டு வேலை செய்து உன்னை படிக்கவைத்து ஆளாக்கினேன். உன் திறமைக் கேற்றபடி உத்தியோகம் உயர்ந்தது. இருபத்தைந்து வயதாகி விட்டது உனக்கு..."

கோகிலா நிறுத்தினாள்.

புவனகிரியின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. "அம்மா, யாருடைய குழந்தையாகவோ இருந்தாலும், என்னை இவ்வளவு பாடு பட்டு வளர்த்த நீதான் என் தாய்" சற்று நேரம் அங்கு அமைதி நிலவியது. திடீரென்று புவனகிரி, "அதிருக்கட்டும். இத்தனை வருடங்களுக்குப் பின் உன் கணவர் எப்படி வந்தார்?" என்ருன்.

"எனக்கே அதற்குத்தான் இந்த ஊருக்கு வரப் பிடிக்கவில்லை. அதனல் தான் உனக்கு மாற்றல் கிடைத்த போது கூட வேண்டாம் என்று சொன்னேன். பழைய சம்பவங்களை மறக்க வேண்டும், அவைகளைப்பற்றி அணு அளவு உண்மை கூட உனக்கு தெரியக்கூடாது" என்று பாடுபட்டேன். இங்கு வந்த பின்னும் இவ்வளவு நாளாக எந்த விபத்தும் நேரிடவில்லை.

ரத்னசபாபதி இன்னும் சௌக்யமாகவே இருக்கிருர். ஆனல் குழந்தை காணுமல் போன மறு வருடமே அதே ஏக்கத்தில் அவர் மனைவி மரண மடைந்து விட்டாள். என் மகன் கோவிந்தன் உன்னைப் போலவே பெரிய ஆளாக அவர் மகனுக வளர்ந்து இருக்கிருன் என்ற விபரங்களை மட்டும் தெரிந்து

கொண்டேன். என் கணவர் அங்கே வேலையில் இல்லை என்பதும் தெரிந்தது. இரண்டு நாட்களுக்கு முன்பு கடைத் தெருவில் நிறைய சாமான்களை வாங்கிவிட்ட படியால் வண்டி வைத்துக் கொண்டு வீட்டுக்கு வரவேண்டியதாயிற்று. வண்டி நம் வீட்டு வாசலில் நின்றவுடன் வண்டிக்காரன் சாமான்களை கொண்டு வந்து உள்ளே வைத்தான். நான் அறையிலிருந்து அவனுக்குக் கொடுக்க சில்லறை கொண்டு வந்தேன். முன் ஹாலில் என் சிறுவயது போட்டோ ஒன்று மாட்டப்பட்டிருக்கிறதல்லவா? அதை உற்று நோக்கின அவன், என் பக்கம் திரும்பினான். "இந்தாப்பா, சில்லறை" என்று அவனிடம் நான் கொடுத்த போது, "கோகிலா, நீயா?" என்று கத்தினான் அவன்.

நானும் திகைத்து விட்டேன். அவரே தான்! அடையாளமே தெரியாமல்...வயதாகி விட்டதல்லவா? நடந்தவைகளைத் தெரிவித்துக் கொண்டோம்.

அன்றிரவு— குழந்தையுடன் நான் ஓடிவந்துவிட்ட இரவு-கையில் கத்தியுடன் அவர் அந்த அறைக்குள் பிரவேசித்து தொட்டிலில் குழந்தையைத் தேடியிருக்கிறார். பக்கத்தில் ஸ்டூலில் வைத்திருந்த பால் டம்ளர் தவறி கீழே விழுந்து சப்தப்படுத்தி, ரத்னசபாபதியின் மனைவி விழித்துக் கொண்டு 'திருடன், திருடன்' என்று கூச்சலிட்டுவிட, ரத்தினசபாபதி ஓடிவந்து விளக்கைப் போட்டுப் பார்த்தால்...

கையில் கத்தியுடன் இவர்! தொட்டிலில் குழந்தையில்லை! எப்படி, என்ன நினைக்க முடியும்? போலீஸுக்கு போன் செய்து விட்டார். என் கணவர் விழிப்பதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்? தவிர என்னையும் காணமல் போகவே, 'கணவனும் மனைவியுமாகச் சேர்ந்து 'தத்து' கொடுத்து விட்ட தங்கள் மகனுக்குச் சேராமல் புதிதாகப் பிறந்த குழந்தைக்குச் சொத்து சேர்ந்து விடுமோ என்ற பயத்தால், அந்தக் குழந்தையைக் கொன்று விட்டார்கள்' என்று வழக்கு ஜோடித்து விட்டார்கள். என் கணவருக்கு ஐந்து வருட சிறைவாசத்தண்டனை கிடைத்தது.

சிறைவாசம் முடிந்து வெளிவந்த பின். அவருடைய ஆத்திரம் பின்னும் அதிகமாகியது. என்னால் அல்லவா அவருக்குச் சிறைவாசம் கிட்டியது? ஊர் ஊராக அலைந்து கடைசியில் இங்கேயே வந்திருக்கிறார், பிழைப்புக்காக குதிரை வண்டிக்காரனாக."

புதிய புதிய சம்பவங்களால் மனம் குழம்பிப்போன புவனகிரி, "சரி அம்மா, காலையில் பேசிக் கொள்ளலாம்; படுக்கைக்குச் செல்லுங்கள்" என்று சொல்லி தாயைப் படுக்கவைத்துவிட்டுத் தானும் படுக்கச் சென்றான்.

காலையில் போலீஸ் ஸ்டேஷனுக்குப்போன போது பல சிக்கல்கள் விடுபட்டுப்போயின. இன்ஸ்பெக்டர் அன்புநாதன், சுவாமிநாதனைப் பற்றிய இதர தகவல்களை விசாரித்து, அவருடைய ஆசைநாயகி பங்கஜத்தை அரெஸ்ட் செய்திருந்தார். பங்கஜம் நடந்ததைச் சொல்லி விட்டாள்.

சுவாமிநாதன் அடிக்கடி அவள் வீட்டிற்கு விஜயம் செய்பவர். கடந்த ஒருவாரமாக புதிதாக அறிமுகமாகி வரத்தொடங்கியவன் கோவிந்தன்.

இருவரும்வெவ்வேறுநேரங்களில் வராமல்ஒரே நேரத்தில் வரவே, பங்கஜம்பாடு ஆபத்தாகி விட்டது. இருவரும் பெரும்புள்ளிகள். யாரை விரோதித்துக் கொள்ள முடியும்? 'அனுபவ பாத்தியம்' கொண்டாடிய சுவாமிநாதனுக்கும் இளமை முறுக்கில் மோகவெறி கொண்ட கோவிந்தனுக்கும் பங்கஜத்தின்

வீட்டிலேயே அடிதடி சண்டை நடந்து விட்டது.

அன்றிரவு, கோவிந்தன் நிறைய குடித்துவிட்டு வந்து பங்கஜத்தின் வீட்டுக் கதவைத் தட்டினான். வேலைக்காரி வந்து கதவைத் திறந்து விட்டு உள்ளே வந்து உட்காரச் சொன்னாள். "எங்கே பங்கஜம்?" என்று ஆத்திரமாக வினவியவன், "மாடியில் சுவாமி நாதனுடன் இருக்கிறாள்" என்ற பதிலைக் கேட்டதும் அறிவிழந்து மாடிக்கு ஓடினான்; ஆத்திரத்தோடு அறைக்குள் நுழைந்தவன் சுவாமிநாதன் மேல் பாய்ந்தான்.

நல்ல பலசாலியான போதிலும், எதிர்பாராமல் நடந்தபடியால் சுவாமிநாதனால் ஒன்றும் செய்யக்கூடவில்லை. பக்கத்திலிருந்த பழங்கள் நறுக்குவதற்காக வைத்திருந்த கத்தியினால்...

பங்கஜம் 'ஓ' வென்று கத்திவிட்டாள். அதன் பிறகே வெறி தணிந்தது; மயக்கம் தெளிந்தது. பயம் பிடித்துக் கொண்டது. செய்வதறியாது விழித்த போது, பங்கஜமே யோசனை கூறினாள், ஒரு சாக்கில் போட்டுக் கட்டி காவேரியில் எறிந்து விடலாம் என்று.

உடனே இருவருமாகச் சேர்ந்து சுவாமிநாதனை ஒரு சாக்கில் போட்டுக் கட்டினார்கள். யாரைக் கொண்டு இதை காவேரியில் எறியச் செய்வது? யாரும் உடன் பட மாட்டார்களே, பணம் கொடுத்தால் கூட...

"யார் வண்டியிலாவது போட்டுக் கொண்டு பாதிவழி போங்கள். திடீரென்று குதித்து ஓடி இங்கே வந்து விடுங்கள். வண்டிக்காரன் என்ன மூட்டை என்று ஆவலுடன் பிரித்துப் பார்ப்பான். அப்புறம் அவனே பயந்து காவேரியில் போட்டு விடுவான். நமக்குத் தொல்லையில்லாமல் போய்விடும்.



அப்புறம் எப்போதாவது அடையாளம் கண்டு கொண்டு அந்த வண்டிக்காரன் உங்களிடம் வந்தால் ஏதேனும்பணம் கொடுத்துஅனுப்பி விடுங்கள்" என்று சொன்னாள் பங்ஜம். கோவிந்தன் தயங்கினபொழுது "விடிந்து விட்டால் ஆபத்து. சீக்கிரம் போங்கள்" என்று வற்புறுத்தினாள்.

அதன்படியே செய்தான் கோவிந்தன். பங்கஜம் கூறிய விருத்தாந்தம், புவனகிரியின் மூளையில் இதுகாறும் குழப்பிய சிக்கல்களை விடுவித்து விட்டது. அகப்பட்ட வண்டிக்காரன் சொக்கலிங்கம். மகன் செய்த கொலைக்கு தந்தையே உதவி செய்திருக்கிறான்— இருவரும் ஒருவருக் கொருவர் யாரென்று அறிந்து கொள்ளாமலே!

அப்படி தன் வண்டியிலே ஏற்றப்பட்ட மூட்டையை பிரித்துப் பார்த்த சொக்கலிங்கம், கார் 'மக்கர்' செய்து தவித்துக் கொண்டிருந்த பிரேமாவின் காரின் பின்பக்கத்தில் மூட்டையை வைத்துவிட்டு. அவளுக்கு உதவி செய்வது போலவும் நடித்திருக்கிறான்!

"சரி; அன்புநாதன், புறப்படுங்கள். வேட்டை நெருங்கி விட்டது. கைது செய்ய வேண்டும்" என்று நாற்காலியை விட்டு எழுந்தான் புவனகிரி.

'ஜீப்' ரத்தனசபாதியின் பங்களாவை நோக்கி விரைந்தது. தட தட வென்று உள்ளே நுழைந்தனர்

போலீஸ் அதிகாரிகள். மாடியறையில் கதவு தாளிடப்பட்டிருந்தது, உள்ளே இருவர் காரசாரமாக பேசிக் கொள்வது கேட்டது.

"எனக்கு மகனடா நீ, கொலைகாரா."

"இல்லை, நீ ஒரு குதிரை வண்டிக்காரன். பணம் பறிப்பதற்காகப் பாசாங்கு செய்கிறாய். ஆயிரம் ரூபாய் தருகிறேன், ஓடிவிடு."

"முடியாதடா, அந்த இன்ஸ்பெக்டர் புவனகிரி தான் நம் விரோதி. அவனை ஒழித்துக் கட்டி விட்டு கோகிலாவை அழைத்துக் கொண்டு வருகிறேன். நீயும் வந்து விடு. எங்காவது தூரத்தில் பம்பாய், டில்லி என்று போய் விடலாம்."

கதவைத் தட்டினான் புவனகிரி.

"முடிவாகச் சொல் போலீஸ் வந்து விட்டது போலிருக்கிறது."

"வரட்டும். நான் கதவைத் திறக்கிறேன்."

"ஐயோ, வேண்டாம். நீ கொலைகாரன் என்று கைதாவதை நான் பார்க்கவிரும்பவில்லை."

"பார்க்க விரும்பவில்லையா, நீயும் ஒழிந்து போ. ஒரு கொலை இரண்டு கொலையாகட்டும்"

'டுமீல்'—துப்பாக்கி வெடித்தது.

"ஐயோ" என்ற அலறல்.

கதவை உடைத்துக் கொண்டு உள்ளே பிரவேசித்தான் புவனகிரி போலீஸாருடன்.

ரத்தம் பீரிட்டடித்தது, சொக்கலிங்கத்தின் உடம்பிலிருந்து.

கோவிந்தன் கையில் துப்பாக்கியுடன் பயங்கரமாகச் சிரித்தபடி,

"நான் கொலைகாரன், சுட்டு விடுவேன். என்னை யாரும் நெருங்க முடியாது; நீ தான் போலீஸ் இன்ஸ்பெக்டர் புவனகிரியா? உன்னைத் தீர்த்து விடுகிறேன் பார்."

'டுமீல்'—

மீண்டும் வெடித்தது துப்பாக்கி!

ஆனால் யாரும் எதிர்பாராதது நடந்தது.

"ஐயோ" என்றலறி விழுந்தாள் கோகிலா. ஆம்! எப்படியோ சமயத்தில் வந்து தன் மகன் கதி என்ன என்பதைக் காணவந்தாள்; தான் வளர்த்த மகனை காப்பாற்றித் தியாகம் செய்து விட்டாள்.

"ஐயோ, அம்மா, நீ ஏன் இங்கு வந்து உயிர் விட்டாய், உன் மகன் கையாலேயே" என்று கதறிவிட்டான் புவனகிரி.

ரத்தினசபாபதி, வெளியில் எங்கோ போயிருந்தவர், வாசலில் போலீஸ் 'ஜீப்' நிற்பதைப் பார்த்து, பதறிப் போய் உள்ளே வந்து பார்த்தார். விபரம் அறிந்ததும், "அடப்பாவி, உன் தாய்தந்தையரை நீயே கொன்று விட்டாயே" என்று கத்தினார்.

கோவிந்தன் மனிதத் தன்மை பெற்றான். அவன் கையிலிருந்த துப்பாக்கி நழுவி விழுந்தது. அவன் கண்களிலிருந்து கரகர வென்று கண்ணீர் வடிந்தது. "ஐயோ, அப்பா, அம்மா, உங்கள் இருவரையும் ஏக காலத்தில் கொன்ற பாவியாகி விட்டேனே" என்று கதறினான்.

**
*

Telegrams :
PIONEER ' Coimbatore.

Telephones :
160, 361.

THE COIMBATORE PIONEER MILLS LTD.,

P. B. NO. 4.

PEELAMEDU :: COIMBATORE.

FOUNDER PARTNERS:

Messrs. P. S. G. & SONS.

No. of Spindles 27,262

Manufacturing 60's, 80's and 100's Combed Yarn

Staff Employed :
41.

Labourers Employed
934.

—:o:—

'B' Mills, Perianaickenpalayam

No. of Ring Spindles ... 22,000

Manufacturing 20's to 40's Yarn.

Staff Employed :
6.

Labourers Employed
320.

Practical Training Being Given to :

DIPLOMA STUDENTS IN :

L.T.M., L.M.E., L.E.E.,

நவநாகரீகமான தங்க, வைர நகைகளுக்கு
சிறந்த இடம்



P.A. ராஜு செட்டியார் & பிரதர்
கடைத்தெரு......கோயமுத்தூர்

வள்ளியின் உள்ளம்

அத்தியாயம் 1.

துரை வந்தான்.

"மாதர் பிறைக் கண்ணி யானை மலையான் மகளொடும் பாடி" என்று இன்னிசையோடு மிதந்து வந்த பாடல் நல்ல தூக்கத்திலிருந்த சிவராம ஐயரை விழிப்படையச் செய்தது!

கண்களைக் கசக்கிக் கொண்டு எழுந்த தருணம் நிலம் தெளிந்து கொண்டிருந்தது! காலையிளங் காற்றில் வாசலிலிருந்த வாழை மரங்கள் லேசாக அசைந்தாடின. பட்சிகளின் சலசலப்பும் ஆரவாரமும் பரிதியின் வரவை எதிர்கொண்டழைக்கும் பேராவலை உணர்த்தின!



அடடா, மணி ஆறு இருக்கும் போலிருக்கிறதே என்று எண்ணியவராக, அவசர அவசரமாக எழுந்து படுக்கையைச் சுருட்டி வைத்து விட்டு, கிழேயிறங்கி வந்து "அன்னம்மா, கருப்பையா வந்து விட்டானா?" என்று மனைவியைக்கூப்பிட்டுக் கேட்டார்.

"வந்து மாடுகளுக்குத் தண்ணீர் காட்டிக் கொண்டிருக்கிறான். நீங்கள் பல் தேய்த்து காபி சாப்பிடுவதற்குள் வண்டியைப் பூட்டி விடுவான்." என்றாள் அன்னம்மாள்.

"ராத்திரி வெகு நேரம் வரையில் தூக்கமே வரவில்லை. விடியற்கால வேளையில் நல்ல தூக்கம்..."

"இப்பொழுதென்ன மோசமா போய் விட்டது? ஆறரைக்கு வண்டியைப் பூட்டினால் மணி எட்டுக் கெல்லாம் ஸ்டேஷனைப் பிடிச்சிடும் நம்ம காளைகள். கவலைப்படாதீங்கோ" என்றாள் அன்னம்மாள்.

கொல்லைப்புறம் சென்று தமது அலுவல்களை முடித்துக் கொண்டு கூடத்திற்கு வந்ததும்

"வண்டி பூட்டியாச்சு. எஜமான்." என்று சொல்லிக் கொண்டே அங்கு வந்தான் கருப்பையா.

"வயிற்றுக்கு ஏதாவது சாப்பிட்டையா, கருப்பையா?" என்று கேட்டார்.

"கருக்கலோடேயே வந்துட்டேனே எஜமான், வந்து சாப்பிட்டுக் கொண்டால் போச்சு புறப்படுங்க. மணி ஆவுது." என்ருன் அவன்.

"சரி, ஒரு டம்ளர் காபி யிருந்தால் கொடு அவனுக்கு. வந்தப் புறம் பழையது சாப்பிட்டுக் கொள்ளட்டும்." என்று ஐயரின் சகோதரி கமலம் சொன்னுள்.

விருந்தினர்: ஏன் சார்......உங்க கடைசி பையன் கல்யாணத்தை வெகு தடபுடலா நடத்துகிறீரே!

வீட்டு எஜமான்: என்னய்யா, நீர்! இப்பொழுது மூன்ருந்தரமாக எனக்குத்தான் கல்யாணம்!

"வேணுமுங்க. வந்து சாப்பிட்டுக்கறேனே." என்று மறுத்தான் கருப்பையா.

"சரித்தாண்டா, உபசாரம் பண்ணிக் கொள்கிருயோ சித்தே! காபியைச் சாப்பிட்டு விட்டு கிளம்பு. நாழியாகி விட்டது" என்று பிளாஸ்க்கை எடுத்துக் கொண்டு வாசலுக்கு வந்தார் ஐயர்.

வாசலில் தயாராக நின்ற வண்டியில் ஏறி அமர்ந்ததும் கருப்பையா ஏறி உட்கார்ந்து கயிற்றை யெடுத்ததுமே, சலங்கைகள் ஜல் ஜல் என்று ஒலிக்க விரைந்தோடின காளைகள்!

தெருவின் மறுபுறம் திரும்பிய பிறகு வாசலில் நின்று கொண்டிருந்த அன்னம்மாளும் கமலமும் உள்ளே திரும்பினுர்கள்.

"பானையிலிருக்கிற தயிரை ஈயஜோடு தவலையில் கொட்டி இங்கே கொண்டா, கடைகிறேன். காபி பாத்திரத்தை ஒழித்து வெளி முற்றத்திலே போட்டு விட்டு குளிச்சிட்டு வந்து அடுப்பை மூட்டு. காபிக் கொட்டை கொஞ்சம் வறுத்துக் கொண்டு பிறகு உலை நீர் வை. கறிகாய் என்ன இருக்கிறது?" என்று கேட்டாள் கமலம்.

"கொத்த வரைக்காய், வாழைக்காய் இருக்கு. பறங்கிப் பிஞ்சு ஒண்ணு கிடந்தது......" என்ருள் அன்னம்மாள்.

"சரி, தேங்கா மூடி இருக்கிறதோ?"

"மூடி கிடையாது. உரிச்சு

உடைச்சால் போச்சு......
ஏதுக்கு?''

"வாழைக்காய் பொடிமாஸ் என்றால் துரைக்குப் பிடிக்குமேன்னு பார்க்கிறேன். பறங்கிப் பிஞ்சை ஸாம்பாரிலே போட்டு விடு. கொத்தவரைக்காய் கிடக்கட்டும், ரசம் வை.'' என்றாள் கமலம்.

கடைவதற்குத் தயிரும், கறிகாய் கூடை அறிவாள் மணையையும் கொணர்ந்து கமலத்திடம் வைத்து விட்டு காவேரிக்குச் சென்றாள் அன்னம்மாள்.

வீட்டு வேலைகள் எல்லாம் செய்து, குவிந்து கிடந்த சாணியையும் துகைத்துத் தட்டி விட்டு, வீட்டுக்குத் திரும்பும் ஆயத்தத்துடன் கூடத்தில் வந்து நின்றாள் வள்ளி.

"என்னடியம்மா, வேலையெல்லாம் ஆச்சா?''

''அல்லாம் ஆச்சுங்க''

"சாணி என்னிக்கித்தட்டுகிறதாம்? கிளம்பிட்டையே?''

"தட்டிட்டேனம்மா.''

''நல்லவேளை. போய் மாமுண்டியா பிள்ளை கடையிலே, கால் சேர் முந்திரிப் பருப்பு வாங்கிக் கொண்டு வா. கணக்கிலே எழுதிக்கச் சொல்லு. பூச்சி பிடிச்சது, சொத்தை, சொள்ளையில்லாமல் நல்லதாகப் பார்த்து பொறுக்கிப் போடச் சொல்லி வாங்கிக் கொண்டு வா'' என்று உத்தர விட்டாள் கமலம்.

காய்ச்சலோடு கூட திணறிக் கொண்டிருக்கும் தன் தந்தையைக் காணத் துடித்துக் கொண்டிருந்த வள்ளி [illegible] மானியின் உத்தரவை [illegible] கணிக்க முடியாமல் [illegible]

மனைவி: ஏண்டி, உனக்கு சமையலைத் தவிர வேறொன்றும் தெரியாதா என்று பக்கத்து வீட்டு பங்கஜவல்லி கேட்கிறாள்.

கணவன்: உம்......நம் வீட்டிற்கு ஒரு நாளைக்கு அவளை அழைத்து சாப்பாடு போட்டுவிடு. அப்புறம் அவள் அப்படிக் கேட்கிறாளா பார்!

நடையுமாகக் கடைக்குப் போய் குறிப்பிட்ட சாமானை வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து விட்டு விடை பெற்றுக் கொண்டு தனது வீட்டுக்கு ஓடி வந்தாள்.

சூரியன், சந்திரர்கள் தாராளமாக உள்ளே புகுந்து விளையாடும் கூரைக் குடிசை வீட்டில், பிய்ந்துபோன கயிற்றுக் கட்டிலில் பீற்றலாகி விட்ட பாயில் விழுந்து கிடந்த கந்தப்பன் மகள் எப்பொழுது வருவாள் என்று காத்திருந்தான்.

வள்ளி உள்ளே வந்ததும், ''தண்ணித் தாகம் தவிக்குது வள்ளியம்மா. பச்சத்தண்ணி [illegible] பரவால்லே, குவளை [illegible] கொண்டா'' என்று நா[illegible] கட்டை ஈரமாக்கிக்

197687

கொண்டு சொன்னான் கந்தப்பன்.

"பச்சத்தண்ணிதான் ஆகாதுன்னுருக்காங்களே வைத்தியரு. இதோ நொடிக்குள்ளே கொண்டாறேன்." என்று கூறி விட்டு உள்ளேபோய் இரண்டு சருகுகளைக் கொளுத்திப்போட்டு வென்னீர் சுடவைத்துக் கொண்டு வந்து கொடுத்தாள் வள்ளி.

கந்தப்பன் அதை வாங்கிக் குடித்து விட்டு, "வள்ளியம்மா, நாகு வீட்டிலேயிருந்து, இடியாப்பம் வந்திருக்குது......"

"இடியாப்பமா? யார் கொணந்தது?"

"நாகுதங்கச்சி தான். 'சீனி கூட அதிலேயே வச்சிருக்கேன்' என்னுது. நீ சாப்பிடு. அப்பாலே கூழு காய்ச்சலாம்." என்ருன் கந்தப்பன்.

"ஐயர் வீட்டிலே, அவங்க மகன் வர்ராமில்ல இன்னிக்கி?"

"யாரு துரையா வருது?" என்று ஆவலோடு கேட்டான் கந்தப்பன். அந்த சங்கதியைக் கேட்டதும் கந்தப்பன் முகத்திலே பளிச்சிட்ட ஒளியைக் கண்ட வள்ளி வியப்புடன்,

"ஏம்ப்பா, ஐயரு ஊட்டில் அவங்க பிள்ளை வந்தா, உனக்கென்னுப்பா அதிலே இவ்வளவு சந்தோசம்?" என்று கேட்டாள்.

"அதென்ன அப்படி கேட்டுட்டே வள்ளியம்மா? பத்து வயசு மட்டும் அதைத் தோளுமேலே தூக்கிச் சுமந்தில்லியா வளர்த்தேன்? அந்தப் பாசம் விடுமா?" என்று கேட்டபொழுது கந்தப்பன் கண்கள் கலங்கி நீர் சுரந்து நின்றன.

வள்ளி பதிலொன்றும் கூருமல் கந்தப்பன் முகத்தையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். கந்தப்பன் நினைவு சென்ற காலத்தைக் குடைந்துகொண்டு சென்று திரிந்துவிட்டுத் திரும்பி வந்ததும் நினைவு பெற்றவனுக, "வள்ளியம்மா, நாகு வீட்டுக்குத் தென்னண்டையிலே இருக்கிற பனந்தோப்பில்பம்பையன் பனங்காய்களை இறக்கிக் கொண்டிருக்கிருனும்.

ஒரு குலே காய் வாங்கிக் கிட்டுப் போய் ஐயர் வீட்டிலே கொடுத்துட்டு வா. துரைக்கு நுங்கு திங்கறதிலே ரொம்ப இஷ்டம்.''

''துட்டில்லாமே கொடுப்பாஞ பம்பையன்?'' என்று தயங்கினுள் வள்ளி.

''அப்பா கேட்டாருன்னு கேளு. தாராளமாக் குடுப்பான். கொண்டு போய் அம்மா கிட்டக் கொடுத்துட்டு வந்து அப்பாலே கூழ் காச்சலாம்.'' என்ருன் கந்தப்பன்.

மணி பத்தடிக்கும் சமயத்தில் வாசலில் வண்டி வந்து நின்றது. வண்டியிலிருந்து தந்தையும் மகனும் இறங்கி உள்ளே வந்து நுழைந்ததும் ஊஞ்சலில் அமர்ந்திருந்த கமலம் ஆவலுடன் முன் வந்து ''வாடா கண்ணே.'' என்று வரவேற்ருள்.

சமையலறையிலிருந்து மலர்ந்த முகத்துடன் மகனே வந்து எதிர்கொண்டாள் அன்னம்மாள்.

''வண்டிக்காக, காத்திருந்தாயா ஸ்டேஷனிலே?'' என்று வினவினுள் அன்னம்மாள்.

''இல்லே, இல்லே. பத்து நிமிஷம் முன்னுலேயே போய்ச் சேர்ந்து விட்டோம். நாங்கள் தான் ரெயிலுக்காகக் காத்திருந்தோம்!'' என்ருர் ஐயர்.

''போய் பல் தேய்ச்சுட்டு வா அப்பா. காபி சாப்பிட்டுவிட்டு நிதானமாகப் பேசலாம்'' என்ருள் கமலம்.

வண்டியிலிருந்த சாமான்களே இறக்கி கூடத்தில் கொண்டு வந்து வைத்துவிட்டு மாடுகளே அவிழ்த்துக் கொண்டு கொட்டிலுக்குச் சென்ருன் கருப்பையா.

துரை உடைகளே மாற்றிக் கொண்டு, கொல்லேப் புறம் சென்றதும், இரு கைகளிலும் இரண்டு பனங் குலேகளே எடுத்துக் கொண்டு வந்தாள் வள்ளி.

அதைப்பார்த்த அன்னம்மாள், ''ஏதடி பனங்குலே?'' என்று வினவினுள்.

'' பனந்தோப்பிலே வெட்ருங்க. சின்ன எஜமான் வரப் போருருஇன்னிக்குனு அப்பாகிட்டச் சொன்னேன்.

அவருக்கு நுங்கு சாப்பிடறதிலே ரொம்ப ஆசைன்னு சொல்லி இதைக் கொடுத்துட்டு வரச் சொன்னரு, கொண்டு வந்தேன்.'' என்ருள் வள்ளி.

''த்ஸொ, த்ஸொ, என்ன அக்ஞானம் பாரு கிழவனுக்கு !'' என்று அங்கலாய்த்தார் ஐயர்.

''சின்ன வயசிலே எடுத்து வளர்த்துட்டா, அந்தப் பாசம் விடவே விடாது! போ, கொல்லை நடையில் கொண்டு வை. கருப்பையாவை வெட்டி யெடுக்கச் சொல்லுவோம். சாயந்திரம் சீக்கிரம் வா. உளுந்து உடைக்கணும்'' என்ருள் கமலம்.

அதை நடையில் கொண்டு போய் வைக்கப் போன போது பல் தேய்த்து விட்டு உள்ளே வந்துகொண்டிருந்த துரையைப் பார்த்ததும் தனது எஜமான விசுவாசத்தைக் காண்பிக்கும் தோரணையில் மலர்ந்த முகத்துடன் ஒரு கும்பிடு போட்டாள் வள்ளி!

துரையின் கண்கள் அப்படியே நின்றன இமையாமல்! வள்ளிக்கு நெஞ்சிலே சஞ்சலம் தலை தூக்கியது.

''என்ன வள்ளி, சுகமாயிருக்கியான்னு, ஒருவார்த்தை கேக்காமே என்ன அப்படி முறைக்குது என்னைக் கண்டுட்டு? சை'' என்று அருவருத்துக் கொண்டு வீட்டுக்குக் கிளம்பி விட்டாள் வள்ளி.

பருவ எழில் பளபளக்க— பெண்ணின் பூரண வளர்ச்சியுடன் 'வாலைக் குமரி'யாகத் தன்முன் நின்ற வள்ளியின் உடலழகை, வளர்ச்சியைக் கண்டு அதிசயித்துக்கொண்டே உள்ளே வந்தான் துரை.

அத்தியாயம் 2

நாகலிங்கம்

அன்னம்மாள் வீட்டிலிருந்து புறப்பட்ட வள்ளி, வில்லிலிருந்துபுறப்பட்ட அம்புபோன்ற வேகத்துடன் வீட்டை அடைந்து பறக்கப் பறக்க அடுப்பை மூட்டி கூழ் தயாரித்தாள். அதைப் பக்குவமாகச்சாப்பிடும் சூடாக ஆற்றியெடுத்துக் கொண்டு வந்து பசியினல் களைத்து அயர்ந்து தூங்கிவிட்ட கந்தப்பனை எழுப்பி ஆகாரத்தை உண்பித்தாள்.

கந்தப்பனுக்கு ஆகாரம் வயிற்றில் விழுந்ததும் உடலிலே தெம்பு வந்தது. ''என்னம்மா, கொண்டு குடுத்தியா பனங்காயை?''

''கொடுத்திட்டேன் அப்பா.'' என்ருள் வள்ளி.

''தொரை வந்துட்டதா?''

''ஊம்...''

''நீ பார்த்தே?''

''பாக்காம என்ன?.........'' என்ருள் வள்ளி, மனதில் எதையோ நினைத்துக் கொண்டு வேதனையுடன்.

கிழவனுக்கு மனிதர்களுடைய உள்ளத்து உணர்ச்சிகளை முகத்திலேயே படித்துவிடும் சக்தி கிடையாதாகையால். ''நான் பாத்து ஐஞ்சாறு வருசமாச்சு. பாக்கணுமின்னு நெஞ்சு அடிச்சிக்கிறது. என்ன

பண்ணுவது என்று வருந்தினான் கந்தப்பன்.

வாசல் பக்கம் காலடி ஓசை கேட்டதும், "யாரது?" என்று கேட்டான் கந்தப்பன்.

"யாராவது ஏன் வாராங்க? நான் தான்!" என்றான் உள்ளே வந்து கொண்டிருந்த நாகலிங்கம்.

"வா. உக்காரு." என்றான் கந்தப்பன்.

"என்ன, இப்பதான் பசியாறினீங்களா? ஏன் இந்நேரம்?"

"ஐயரு வீட்லே அவங்க மகன் பட்டணத்திலே இருந்து வந்திருக்காரு, அதனாலே கொஞ்சம் தவக்கப்பட்டுப் போச்சு மச்சான்; இல்லாத போனால் இந்நேரம் வரையில் பட்டினி போடுவேணா அப்பாவை......"

"ஊம், ஐயருமகன் படிச்சுக் கிழிச்சுட்டு வந்திட்டுதாக்கும்!"

"ஏன் தம்பி அப்படிச் சொல்றே?"

"பின்னே எப்பிடிச் சொல்றதாம்? தென்பாதி பண்ணையாரு சொத்த மகனைப் படிக்க வச்சதுலே பாதி குளோசு..."

"யார் சொன்னது?"

"தவணைக் கடை கணக்கு சொல்லுது!"

"நிஜமாகவா, தம்பி?"

"நிசம் தான் மாமா. வடபாதி ஐயரு மகனும் அதே காலேஜிலேதான் படிக்குது! அதனாலே தான் தெரியும். அது இனிமேல் உருப்படாது மாமா!" என்றான் நாகு.

கந்தப்பனுக்கு வயிற்றைக் கலக்கியது. முகம் கறுத்து கண்கள் சிவந்து விட்டதைக் கண்ட நாகு, "ஏன் மாமா கஷ்டப்படறீங்க.. ...?"

"தம்பி, ஐயரு வீட்டிலே மூணுதலை முறையா பண்ணையிலே பயிர்ச் செலவு பண்ணி, தின்னு வளந்தேன். உடம்புலே ஓடுறது அவங்க ரத்தம். காதிலே கேக்க சங்கடமாக இருக்குது. மனசு தாங்கலியே......"

"இப்ப என்ன ஆச்சு? சுத்த ரௌடியாத் தலையெடுத்திட்டானாம். பட்டணக் கரையிலே கண்டபடி சுத்தி, சீக்கு கூட வாங்கிக் கிட்டிருக்காமல்ல? இனிமேல் அது நல்ல வழியிலே திரும்புமா?" என்று பூடகமாக துரையின் ஒழுங்கீனமான நடத்தையை கந்தப்பனும், நாகுவும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்ட வள்ளிக்கு பளிச் சென்று ஒரு உண்மை விளங்கியது!

அப்பொழுதுதான் துரை தன்னைப் பார்த்த பார்வையின் பொருள் தென்பட்டது!

திடுக்கிட்டாள் வள்ளி.

கள்ளங் கபட மற்று, கிராமச் சூழ் நிலையில் ஆண், பெண்கள் சகஜமாக, சகோதரிகள் போலப் பழகி, துர்ப்பழக்கங்

களின் வாடையே வீசாத கழனி வெளிகளில் பாடுபட்டு ஜீவிக்கும் உழவர் குலப் பெண் வள்ளி.

பருவமெய்திவிட்ட தான் இனி அவர்கள் வீட்டில் வேலே செய்யப் போவது கூட ஆபத்தோ என்று கலங்கினுள்.

நாகு சற்றுக் கெல்லாம் புறப்பட்டுப் போனவுடன், தனது ஆகாரத்தை முடித்துக் கொண்டு, வீட்டு வேலேகளேச் செய்து முடித்துவிட்டு, மூன்று மணி சுமாருக்கு அன்னம்மாள் வீட்டுவேலேக்காகப் புறப்பட்டாள் வள்ளி.

உள்ளே புகுந்ததும் பழ வாசனே மூக்கைத் துளேத்தது. கொல்லேப் புறத்தில் பத்துப் பாத்திரங்கள் அவள் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தன! போய், அவற்றை யெல்லாம் துலக்கி வைத்து விட்டு, மாட்டுத் தொழுவத்தைச் சுத்தம் செய்து விட்டு வீடு பெருக்கி தண்ணீர் இழுத்துக் கொடுத்து இத்யாதி வேலேகள் முடிந்ததும், வீட்டுக்குப் புறப்பட உத்தரவுக்

> சுதந்திர இந்தியாவானது கதரையும் அதன் தத்துவத்தையும் முன்பைவிட அதிகப் புத்திசாலித்தனமாகக் கையாளுதல் அவசியமாகும்.

காகக் காத்து நின்ருள் வள்ளி.

"என்னடியம்மா, வேலே யாச்சா? உளுந்து எடுத்து உலர்த்த மறந்து போய் விட்டேன். நாளேக்குத்தான் இனி மேல், போ." என்ருள் அன்னம்மாள்.

அவள் வீடு சேர்ந்த சிறிது நேரத்திற் கெல்லாம் தூக்குக் கூடையும் கையுமாக கந்தப்பன் குடிசைக்குள் புகுந்தான் துரை.

அவனேக் கண்ட கந்தப்பன் ஆவல் பொங்கும் குரலில், "என்னேப் பெத்த ராசா வந்தியா." என்று கூவிய சத்தம் கேட்ட வள்ளி திடுக்கிட்டுத் திரும்பினுள்.

நகை முகத்துடன் துரை அங்கே நின்று கொண்டிருந்தான்!

மனது உள்ளே அடித்துக் கொண்டாலும் அதைக் காண்பித்துக் கொள்ளாமல் முக மலர்ச்சியுடன், "வாங்க சாமி!" என்று கையெடுத்து கும்பிட்டாள் வள்ளி.

"வா ராசா, இப்பிடி உக்காரு, சுகமாயிருக்கியா? இன்னும் இந்தக் கிழவனே நினேப்பு வச்சிருக்கியா?" என்று புலம்பி, தனது இடது கையால் துரையின் மேனியை வருடிக் கொடுத்தான் கந்தப்பன்.

"அம்மா எல்லாம் சொன்ஞள் கந்தப்பா. பாவம் உனக்கு எங்கிருந்து வந்தது இந்த வியாதி? உனக்காகவே தான் பட்டணத்திலிருந்து இதெல்லாம் வாங்கி வந்தேன்......" என்று தூக்குக் கூடையிலிருந்து மாம்பழங்கள், ஆரஞ்சு, மாதுளே, திராட்சை முதலியவைகளும், உயர்ந்த ரக

பிஸ்கெட் டின் ஒன்றும் எடுத்து வைத்து, "வள்ளி, இதெல்லாம் கந்தப்பனுக்கும் கொடுத்து நீயும் சாப்பிடு. கந்தப்பன் கையாலே உழுது பயிரிட்ட நெல் தான் நாங்கள் அனுபவிக்கும் பாக்கியம். அதனலே, கந்தப்பனுக்கு வேண்டிய சௌகரியம் செய்து தருவது என் கடமை. இனிமேல் நான் அடிக்கடி வந்து பார்த்துக் கொள்ளுகிறேன். என்ன உதவி வேணுமோ கேள். சங்கோசப் படாதே, என்ன?" என்று கேட்டான் துரை.

வள்ளியின் முகம் கடுகாகச் சிறுத்து விட்டது!

கந்தப்பன் சட்டென்று "தங்க ராசா, நீயெல்லாம் அப்படி மதிப்புக் குறவா, இங்கெல்லாம் அடிக்கடி வரக் கூடாதும்மா. ஐயருக்குத் தெரிஞ்சா நல்லாயிருக்காது. உன் பிரியமே எனக்கு போதும். அம்மாவும் எங்களைப் பட்டினி போடலை. காப்பாத்துறுங்க." என்றுன் இழுவலாக.

"ஆமாம். நிசந்தான். காப்பாத்தருங்க பார்—அதுக்கு நீ படுத்திருக்கிற பாயே சாட்சி சொல்லுகிறதே! வீட்டிலே டஜன் கணக்காக கிடக்குதே, பாய் ஒண்ணு கொடுக்கக் கூடாது உனக்கு?"

"ஐயையோ, அதெல்லாம் வேணும் துரை! நாங்கல்லாம், சும்மா, கோணிப் பையிலே, தென்னேலையிலே படுத்துப் பழக்கப்பட்டவங்க. பட்டுப் பாயும் திண்டு தலகாணியும் எங்களுக்கு எதுக்கு? நீ எதுவும் தூக்கிக் கிட்டு வந்துடாதே—சின்னப் பிள்ளையிலே செய்வியே அதுமாதிரி!" என்று புத்தி சொல்லித் தடுத்தான் கந்தப்பன்.

துரையின் பேச்சையும், பார்வையையும் கவனித்தாள் வள்ளி. இதுவரையில் அவள் அனுபவத்திராத பயமும், கலவரமும் உண்டாயின அவளுக்கு.

"சரி, நான் போய்வறேன் கந்தப்பா," என்று எழுந்தான் துரை. "போய்வா கண்ணு" என்று சொன்ன கந்தப்பனுக்கு, "இனிமேல் அடிக்கடி வர்றதுங்கற வாடிக்கை வச்சுக்காதே, இங்கெல்லாம், பெரிய மனிதர்கள் வரக்கூடாது." என்று சொல்ல வேண்டும் என்று தோன்றியது. ஆனல் சொல்ல நாவெழும்பாமல் தவித்துக் கொண்டு பேசாதிருந்து விட்டான்.

கந்தப்பன் வீட்டைவிட்டு பத்தடி நடந்ததும் பின்புறம் யாரோ கைதட்டிக் கூப்பிடும் சத்தம் கேட்டதும் திரும்பிப் பார்த்தான் துரை.

தனது நண்பன் சாட்சாத் சோமுவே தான்!

சோமு அருகில் வந்ததும், "நீ எப்போ வந்தாய் சோமு, வரப்போவதில்லை என்றுயே நான் புறப்படும் சமயம்?"

"ஆமாம், அப்பாவிடமிருந்து உடனே புறப்படு என்று ஒயர்

> உங்கள் எண்ணங்களை ஒரு போதும் ஒளித்து வைக்காதீர்கள். அவற்றை வெளியே சொல்வது கேவலமானது என்றுல் அவற்றை எண்ணுவது இன்னும் கேவலமாகும்!

வந்து புறப்படவேண்டியதாகி விட்டது...''

“அப்படியா! பெண் பார்க்கும் “சான்ஸ்'' அகப்பட்டதாக்கும்!''

“உனக்கு எப்போ பார்த்தாலும் 'பெண்பார்க்கிற' நினைவு தாண்டா! உன்னை ஏனின்னும் பிரம்மசாரியாக வைத்திருக்கிறார்கள் உங்கள் வீட்டில்?''

“அது கிடக்கட்டும். என்ன காரியமாக வந்திருக்கிறாய்?''

“வாயேன், இப்படி நடந்து கொண்டே போகலாம்-கொய்யாத் தோப்புலே உட்கார்ந்து கொண்டு...''

“ஏன் இங்கே நின்று பேசினால் தலைபோய் விடுமோ? பைத்தியக்காரனாக இருக்கிறாயே. நம் தகப்பனார்கள் விரோதிகளாக இருந்தால் நாமும் அப்படியே இருக்க வேண்டும் என்று ஏதாவது உண்டா?''

“அதெல்லாமில்லை, ரோடுலே நின்று கால் கடுக்கப் பேசுவதைவிட தோப்புலே போய் உட்கார்ந்தால் ஹாய்யாக பேசலாம்.

தனக்குள்ளே இருக்கும் எண்ணற்ற எதிரிகளுக்கு எதிராக ஒரு சிறு சுண்டு விரலைக்கூட அசைக்கச் சக்தியற்றவன், தன் கற்பனையால் உண்டாகும் வெளி எதிரிகளோடு போராடுவானேயாகில் அவன் உண்மையான போர் வீரனே யல்ல; இன்னும் மோசமானது என்னவென்றால் அவன் தனக்குள்ளேயிருக்கும் எதிரிகளை நண்பர்களாகக் கருதுவதேயாகும்!

ஜிலு ஜிலு வென்று பேஷான காற்றும் வரும்...ஆமாம் இந்தப் பக்கம் எங்கே போய் வருகிறாய்?'' என்று கேட்டான் சோமு.

“கந்தப்பனுக்குப் பாவம் பாரிசவாயு வந்து படுக்கையிலே கிடக்கிறான், என்றா அம்மா. பார்த்துவிட்டு வரலாம் என்று போனேன்.''

“ஆமாம், நாகுகூட மத்தியானம் சொன்னான். பாவம், கிழவன் நல்ல பாட்டாளி. அவன் மகள்தான் உங்கள் வீட்டில் வேலை செய்கிறாளாம்......''

“ஆமாடா,சோற்றுக்குஎன்ன செய்வார்கள் பாவம்! அந்த நாளில் கந்தப்பன் கையால் ஏர் பிடிச்சு உழுதப்போ சேர்ந்த பணம் தானேடா நமக்கு? அதை நினைக்க வேண்டாமா?'' என்று கொஞ்சம் ஆத்திரத்துடன் கேட்டான் துரை.

“நினைக்காமல் தான் அந்தப் பெண்ணை வேலைக்கு வச்சுட்டு மாசம் மூணு, நாலு என்று சம்பளமும் கொடுத்து சோறு தண்ணி என்று கொடுத்து ஆதரிக்கிறார் உன் தகப்பனார். கிராம வாழ்க்கையிலே, யார் வீட்டில் வேலைக்காரியிருக்கிறாள், விரல் மடக்கு பார்ப்போம்.''

“அடடா! என்ன தாராளமான மனசுடாப்பா? ராப்பகலாக, நிலத்திலே பாடுபட்டு மலைமலையாக தானியத்தைப் பயிரிட்டுக் கொடுத்தவனுக்கு, சோறுபோட்டு, மூணுரூபா சம்பளமும் கொடுக்கிறார்கள் என்கிறாய்! கர்ணமகாராஜா தான் போ!''

"ஏய், உனக்கென்ன மூளை சரியாயில்லைபோலிருக்கிறதே!"

"ஆமாம்! மூளை சரியாகத்தான் இல்லை. பாவம், சிக்காளிக் கிழவன் படுக்கப் பாய் கிடையாது, அறுத்து நைந்துவிட்ட கோணியைப் போட்டுக் கொண்டு படுத்துக்கிடக்கிறான். அந்தக் குட்டியின் புடவை கண்ராவி, கந்தல்னுக் கந்தல்—தையலே இழையாகத் தெரியறுப் போல புடவை?... புதிதாக ஒன்றும் விலைபோட்டு வாங்கித் தரச் சொல்லவில்லை இவர்களை. வீட்டிலே அடுக்கிக் கிடக்கிற பாயில் ஒன்று, ஒரு பெட்ஷீட் தலைகாணி, அந்தக் குட்டிக்கு ஒரு பழைய புடவை தரக் கூடாது?"

"கேட்டால் தானே தருவார்கள்?"

"கேட்டாலும் தரமாட்டார்கள் என்று தெரிந்து தான் கேட்காமல் இருக்கிறார்கள். அந்தப் பெண்! என்ன அடக்கம், என்ன பர்ஸனலிட்டி தெரியுமா?" என்று புளகித்த குரலைக்கேட்டு சோமு "டேய், இது மெட்ராஸல்ல! அசல் குடியானவர்கள் மிக்க ஊர்! மோகப் பிசாசுக்கு அடிமையாகி விடாதே!" என்று எச்சரித்தான் சோமு.

(தொடரும்)

டெலிபோன்: 61 தந்தி விலாசம்: "ஆண்டவர்"

பழனி ஆண்டவர் மில்ஸ் லிமிடெட்

உடுமலைப்பேட்டை

நேர்த்தியான பருத்தி ஸ்டேபிள் பைபர் நூல் உற்பத்தியாளர்கள்

20 நிர் முதல் 100 நிர் வரை

டெக்ஸ் மார்க்	634
இயங்கும் கதிர்கள்	47,600

—மானேஜிங் ஏஜண்ட்ஸ்—

பாக்ய லெக்ஷ்மி அண் கோ.,

உடுமலைப்பேட்டை.

உலகப் பிரசித்தி பெற்ற

டாடா - மெர்ஸிடிஸ் பென்ஸ்

டீஸல் டிரக் - பஸ் சேஸிஸ்

உலகத்தின் முதலாவது டீஸல்

இன்ஜின்

ஜெர்மனி தேசத்தின் டெய்ம்லர்
பென்ஸ் தயாரிப்பு



மாடல் LP 5200/48 —5டன்

"புல் பார்வார்ட்" கண்ட்ரோல் சேஸிஸ் 190" W. B.
பஸ் சொந்தக்காரர்களுக்கும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கும்
உகந்தது.

எல்லா மேக்குகளுக்கும் மாற்றி அமைக்க
தனி டீஸல் இன்ஜின்களும் கிடைக்கும்.

மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு
அதிகாரம்பெற்ற டீலர்ஸ்;

பாண்டியன்

ஆட்டோமோபைல்ஸ் லிமிடெட்,

5, ஸ்காட் ரோடு : : மதுரை.

அவர் காட்டும் வழி

பி.ஸ்ரீ

கடுங்குளிர் உள்ள ஒரு நாட்டிலே ஒரு சமயபோதகர் சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினார். மோட்ச லோகத்தை சற்று வருணித்துவிட்டு, நரகலோகத்தின் அணையாதத் தீயைக் குறித்தும் பிரஸ்தாபித்தார். பேராவலோடு தம் சொற்பொழிவை கேட்டுக் கொண்டிருந்த மக்களை நோக்கிக் கடைசியாக, 'நீங்கள் எங்கே போக விரும்புகிறீர்கள்?—மோட்சலோகத்திற்கா, நரகலோகத்திற்கா?' என்று ஒரு கேள்வி கேட்டார். 'நரகத்திற்கு' என்று ஒரு முகமாகப் பதில் கிடைத்ததும் போதகர் திகிலடைந்தார். நிலைமை புரிந்துவிட்டதும் புன்னகை பூத்த வதனத்துடன், 'இன்று ஒரு புதுமை கண்டேன்' என்று தமக்குள் தாமே சொல்லிக் கொண்டார்.

கடுங்குளிரால் வருந்திக் கொண்ருந்த மக்களுக்கு அணையாத தீ இருக்குமிடத்தின் மீது விருப்பம் ஏற்பட்டதில் அதிசயமில்லை. இந்த உண்மையை உணர்ந்து கொண்டதும், அந்த மக்களின் தேவைக்கும் பண்பாட்டிற்கும் தக்கபடி அறிவைப் புகட்டுவது சிறந்த வழி என்று முடிவு செய்தார் சமயபோதகர். இப்படிப் புதுமை கண்டு உபகரிப்பது அறிஞர் இயல்பு.

சமயத்துறையிலோ, அரசியல் துறையிலோ, கல்வித் துறையிலோ, வேறு துறைகளிலோ, மக்களின் நிலைமையையும் தேவைகளையும் புரிந்துகொள்ளாமல் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டே இருப்பது அறிவுடைமை ஆகாது. பழைய கவிகள் பாரதியாரைப் போல் சுதந்திர தேவியைப் பாடவில்லை. எத்தனையோ தேவதேவியர்களின் வழிபாடுகளுக்கிடையே சுதந்திர தேவியை மறந்து விட்டனரோ என்று கூடப் பரிகசிப்பவர்கள் உண்டு. உண்மை என்னவென்றால், பண்டை நாளில் நாட்டிலே சுதந்திரத்திற்குப் பஞ்சமில்லை. அன்னிய ஆதிக்கம் இல்லாத காலத்தில் சுதந்திரத்தை வற்புறுத்துவதற்கு அவசியமில்லையே.

'சுவாசம் உயிரன்று; சுதந்திரமே உயிர்' என்று வீர சுதந்திர வெறியைப் பாராட்டிக் கூறுவது உண்டு. இந்த வெறியைப் பாண்டியர்களும் சேரர்களும் சோழர்களும் குறுநில மன்னர்களும் அமிதமாகக் கொண்டிருந்ததால், தமிழ்நாடே ஒன்றுபட்டு வாழ்வதற்கும் வழி இல்லாமற் போய்விட்டது.

'நாம் ஆர்க்கும் குடி அல்லோம்;
நமனை அஞ்சோம்!'

என்ற அப்பர் சுவாமிகளின் கொள்கையை ஒவ்வொருவனும் அனுஷ்டிப்பதாகச் சொல்லிக் கொண்டு சுதந்திர வாழ்க்கை நடத்த ஆரம்பித்து விட்டால் அரசாங்கம் நடைபெறுவதுதான் எப்படி? இத்தகைய

மனிதனிடம் சமய உணர்வுதான் இடம் பெற முடியுமா?

எனவே, 'நாம் ஆர்க்கும் குடி அல்லோம்' என்று சொன்ன திரு நாவுக்கரசரே, அதே பாட்டிலே, 'நாம் ஆண்டவனுக்கு அடிமை' என்று கூறியுள்ளார். இந்தத் தத்துவத்தைப் புரிந்து கொள்ளாதவர்கள், 'இந்த அடிமைப் புத்திதானே அரசியல் சுதந்திரத்தை இழக்கச் செய்தது!' என்று சொல்லுகிறுர்கள். அப்பர் வாழ்ந்த காலத்திலே அந்நிய ஆதிக்கம் தமிழகத்தில் இல்லை என்பதை இவர்கள் அறிந்து கொள்ளவில்லை.

சோழ ஸாம்ராஜ்யம் நிலைகுலைந்த பின் விஜயநகர ஸாம்ராஜ்யத்திலும் அன்னிய ஆதிக்க உணர்ச்சி தமிழர்களிடையே காணப்படவில்லை. அத்தகைய அபேத உணர்ச்சி அன்று ஸாம்ராஜ்யக் குடிகளிடையே நிலவியது. தமிழர்களின் சமயக் கொள்கைகள் தலை நகரிலும் ஆதிக்கம் செலுத்தின. விஜய நகர ஆட்சி வீழ்ந்த பின்பு சுதந்திரம் பறிபோயிற்று என்பதில் ஐயமில்லை.

அதை உள்ளத்தில் கொண்டு தான் பாரதியார், ஓராயிரமாண்டு ஓய்ந்து கிடந்தபின் வாராது போல வந்த மாமணி, என்று சுதந்திரத்தைக் குறிப்பிடுகிறுர்.

1857-ம் ஆண்டுக்கு பின்பு மாமணிகளான சுதந்திரக் காதலும், தேசபக்தியும், இந்தியா வெங்கும் பரவி வந்தன. அன்னியர்கள், 'சிப்பாய்க் கலக'மென்றும், நமது தேசபக்தர்கள் 'சுதந்திரப்போராட்ட'மென்றும் குறிப்பிடுகிற 1857-ம் ஆண்டு—நிகழ்ச்சியின் பயனுக நாட்டுப் பற்றும், விடுதலைக் காதலும் இந்திய ஒருமையும் இந்தியாவின் இதயத்திலே இடம் பெற்றன என்பதை விருப்பு வெறுப்புக்கள் இன்றி வரலாற்றுப் போக்கை ஆராய்ந்து பார்ப்பவர்கள் ஒப்புக் கொள்வார்கள்.

அரசியல்—சுதந்திர விருப்பத்தோடு அகில இந்திய பக்தியையும் தூண்டி விட்டது காங்கிரஸ் மகா சபைதான். திலகரைப் போன்ற தீவிர தேசிய வாதிகளின் தியாகங்களால் காங்கிரஸ் உணர்ச்சி மக்கள் இதயங்களில் வேரூன்றி விட்டது. வ. உ. சி. முதலானவர்கள் தமிழகத்திலே தீவிர தேசபக்தியை வேரூன்றி வளரச் செய்தார்கள். இந்த அடிப்படையில், காந்தியடிகளின் சத்தியாக்கிரக இயக்கம் ஒரு சுதந்திர பூங்கோயிலை மக்களின் அகக் கண் முன் தோற்றுவித்தது.

ஆனுல், சத்தியாக்கிரகம் ஓர் அரசியல்-போராட்ட முறை மட்டுமல்ல என்பதைப் பலரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. அரசியல் துறையில் ஒரு புதுமைப் போராட்ட முறைதான். ஒரு துளி இரத்தம் சிந்தாமல் புதுமை செய்ய முடியும், அரசியல் துறையிலும் புரட்சி விளைவிக்க முடியும் என்பது காந்தியடிகளின் வெற்றி பெற்ற சித்தாந்தம். இந்தப் புதுமையின் வேர் நமது பழமையின் ஆழத்திலே வேரூன்றியிருக்கிறது. சத்தியம், அஹிம்ஸை என்ற மகத்தான உண்மைகள் வேத முனிவர்களால் பழைய உலகத்திற்கு உபதேசிக்கப் பெற்ற மகத்தான தத்துவம். சுமார் 50, 60 நூற்ருண்டுகளாக இந்தத் தத்துவத்தில் இந்திய இதயம் ஊறி வந்திருக்கிறது. பழமைக்குப் பழமையான இந்த தத்துவத்திலிருந்து புதுமைக்குப் புதுமையான சத்தியாக்கிரக தத்துவத்தைத் தோற்றுவித்த மகாத்மா காந்திக்கு இந்திய சரித்திரத்தில் ஒரு விசேஷ ஸ்தானம் உண்டு.

வழிவழி வந்த இந்திய மகாத்மாக்களில் ஒருவரே மகாத்மா காந்தியும். பழைய மகாத்மாக்கள் பெரும்பாலும் சமயத்துறைகளிலேயே உழைத்து வந்தார்கள். அவர்களில் சிலர் சமுதாய வாழ்க்கையை மேன்மையுறச் செய்ததும் உண்டு. அரசியல் துறையை அவர்கள் கவனிக்கவில்லை. 'ஸீசருக்கு (சக்கரவர்த்திக்கு) உரியதை ஸீசருக்குக் கொடுத்து விடுங்கள்' என்ற கிறிஸ்து பெருமானின் மனநிலையே பொதுவாகப் பழைய இந்திய மகான்களின் மனநிலையும் ஆகும்.

காந்தியடிகளோ 'அரசியல் வேறு, சமய உணர்ச்சி வேறு' என்று "சின்னு பின்னம்' செய்து பார்க்க வில்லை. 'சமய உணர்ச்சி உயிர்; அரசியல் உடம்பு' என்று கருதினூர். சமய உணர்ச்சியை வேராகக் கொண்டுதான் ஒழுக்கம் படர வேண்டும். இத்தகைய ஒழுக்கம் அரசியலுக்கும் இன்றியமையாதது என்பது அடிகளின் தேர்ந்த கருத்து.

காந்தி அடிகளின் மதம் இந்து மதம் தான்; ஆனல் இந்த இந்து மதத்திற்கு எம்மதமும் சம்மதம். 'அல்லாவுக்கும் ராமனுக்கும் குழந்தை!' என்று தம்மைச் சொல்லிக் கொண்டார் கபீர்தாசர். காந்தியடிகளுக்கு, சத்தியம் என்ற பண்பே ராமன் திரு உருவம்; எனவே, ராமனுக்கும், கிறிஸ்துவுக்கும், நபிகள் நாயகத்தின் ஆண்டவனுக்கும் வேற்றுமை காண முடியவில்லை.

மானுடப் பண்பே காந்தியடிகளின் இந்து மதம் என்ருல் மிகையாகாது. மகாகவி கம்பனுக்கு மானுடத்தின் வெற்றி ராமன். மகாத்மாவின் வாழ்க்கைக் கொள்கையும் ஏறக்குறைய இதுதான்.

மானுடம் அன்பு மயமாக இருக்கும் அடிப்படைப் பண்புதான். இந்த அன்பு உண்மையில் இதயத்தில் வசிப்பது திருமாலின் மார்பில் திரு என்ற லட்சுமி இருப்பதாகவே புராணம் சொல்லுகிறதல்லவா? சத்தியத்தின் இதயத்திலுள்ள அன்பே விடுதலை பெறவும் வெற்றி பெறவும் உதவுகிறது என்பது காந்தியடிகளின் நம்பிக்கை.

வாய்ச்சொல் வேதாந்தமாக இத்தகைய கொள்கையைக் கொண்டவர்கள் அடிகளுக்கு முன்பும் இருந்திருக்கலாம். ஆனல் இதை வாழ்க்கை உண்மையாக அனுபவித்துக் கண்டவர் காந்தியடிகள். தனிமனிதனுடைய வாழ்க்கை உண்மையாக மட்டுமல்ல; நாட்டு மக்களின் சமுதாய வாழ்க்கை உண்மையாகவும், அரசியல் வாழ்க்கை உண்மையாகவும் இக்கொள்கையை யாவரும் அனுஷ்டிக்க வேண்டியது என்ருர் காந்தியடிகள்.

இதைக் காட்டிலும் ஒரு புதுமை உண்டா? ஒரு புரட்சிதான் விளைவதுண்டா? விஞ்ஞானிகளைப் பொதுவாகப் புதுமை காண்பவர் என்கிருேம். ஆனல் ஆகர்ஷணசக்தியைக் கண்டுபிடித்த நியூட்டன் விஞ்ஞானியைக் காட்டிலும் சத்தியாக்கிரக சக்தியைக் கண்டுபிடித்த காந்தியடிகளுக்குரிய ஸ்தானம் பெரிது.

நாம் பார்க்கிருேம். விஞ்ஞானிகள் உற்றுப்பார்க்கிருர்கள். ஊடுருவிப்பார்க்கிருர்கள் மெய்ஞ்ஞானிகளும் மகாகவிகளும். உற்றுப் பார்ப்பவர்களும், ஊடுருவிப் பார்ப்பவர்களும் புதுமை காண்கிருர்கள். புதுமை காண்பதே அறிவுடைமைக்கு அழகு. வாழ்க்கையை ஊடுருவிப் பார்த்து மகாத்மா காந்தி கண்டு காட்டும் சத்தியாக்கிரக தத்துவம் புதுமைக்கும் புதுமைதானே.

புதுமை பழமைக்குப் பகை என்பது சரியன்று. பழமையில் வேரூன்றித்தான் புதுமை உயிர்பெற முடியும் சத்தியம் என்ற பண்டைப் பழந்தத்துவம் தான் காந்தியடிகளின் உள்ளத்திலே சத்தியாக்கிரகமாகக் காட்சியளித்தது. பழமை கழிவதிலும் புதுமை புகுவதிலும் காந்தியடிகளுக்குள்ள சிரத்தை ஒரு தனிச்சிறப்பு வாய்ந்தது. பழமை தந்த பரிசுகளிலும் என்றும் புதுமையானவை உண்டு என்பதை ஒப்புக்கொண்ட திரத்திலும் காந்தியடிகள் நிகரற்று விளங்கினூர்.

புதுமை காண்பவர்களுக்கெல்லாம் அடிகளின் வாழ்க்கையும் கொள்கைகளும் ஒரு பெரிய வழிகாட்டியாக விளங்கவேண்டும். ஆனல் அந்த நிலைமைகளுக்கும் தேவைகளுக்கும் தகுந்தபடி அடிகளின் கொள்கைகளையும் வேறு கருத்துகளையும் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எந்தச்சந்தர்ப்பத்திலும் புதுமை கண்டு பயன்பெறுவோர் இப்படித்தான் நடந்து கொள்வார்கள். ★

போன் : 203 தந்தி : "TRANSPORT"

சண்முகம் டிரான்ஸ்போர்ட்
பஸ் & லாரி சர்வீஸ்

அருப்புக்கோட்டை



எங்களுடைய லாரிகள் கீழ்க்கண்ட ஊர்களுக்கு தினசரி போய் வந்து கொண்டிருக்கின்றன.

1. அருப்புக்கோட்டை To ராஜபாளையம்
2. அருப்புக்கோட்டை To தூத்துக்குடி
3. விருதுநகர் To பெருநாழி
4. விருதுநகர் To கடலாடி (Via) முதுகுளத்தூர்
5. மதுரை To சாயல்குடி
6. மதுரை To அருப்புக்கோட்டை

பொதுஜனங்களும் வியாபாரிகளும் எங்களை ஆதரிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

போன் : 512 - பிராஞ்சு: மதுரை - தந்தி : "TRANSPORT"

உடைந்த பம்பரம்

ஜெ. ஏத்திராஜன்

பாலுவும் சுந்தரமும் பம்பரம் விளையாடினார்கள்.
அவ்விளையாட்டு அவனுக்கு நல்ல பாடம் கற்பித்தது.

“டேய், பாலு! அவனிடம் நீ பம்பரம் விளையாடவே முடியாது. உன்பம்பரம்தான் உடையும். அவன் ரொம்ப ஜோராய்ப் பம்பரம் விளையாடுகிறான். அவனிடம் நாம் எல்லோரும் மண்ணைக் கவ்வ வேண்டியதுதான்!”

“நிறுத்தடா, போதும்! அவன் என்ன பெரிய சூரனா? நாளைக்கு அவனைத் தோற்கடிக்காவிட்டால் என் பேரு பாலு இல்லை. அவன் பம்பரம் சுக்கு நூறாய் உடையப் போகுது பார்! ஆனால்...”

“என்னடா, ‘ஆனால்’ இவ்வளவு வீரம் பேசிவிட்டு?”

“என் அம்மா பம்பரம் வாங்கப் பணம் கொடுக்க வேணுமே! என் பழைய பம்பரம் எங்கேயோ தொலைந்து போச்சு!”

“உன் அம்மாவைக் கேட்டுப்பாருடா! அவள் காசு தரவில்லையானால், நான் தருகிறேன். எப்படியாவது அந்தப் பயலின் கொட்டத்தை அடக்கி விடணும்! பட்டணத்திலிருந்து வந்து, நம்மையெல்லாம் ஏய்க்கிறான். அவன் பம்பரம் உடையணும்! அத்தோடு அவன் கர்வமும் ஒழியணும்!”

“வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு. நாளைக்குப் பார், அவன் என்னிடம் திணறப் போவதை!”

மணிக்கும் பாலுக்கும் நடந்த பேச்சுதான் அது!

அப்போது கோடை விடுமுறை. ஒரு வாரத்திற்கு முன்புதான், பட்டணத்திலிருந்து ஒரு புதுப்பையன் அவ்வூருக்கு வந்தான். அவன் தான் சுந்தரம். அங்கு வந்த மறுநாளே, அவன் அந்த ஊர்ப் பையன்களுடன் சேர்ந்து விளையாட ஆரம்பித்துவிட்டான். பம்பரம் விளையாடுவதில் அவன் திறமைசாலியாக இருந்தான். மணி, கந்தன், முருகன், கண்ணன் இவர்களையெல்லாம் அவன் தோற்கடித்து விட்டான். ஒரு தடவை அல்ல; நான்கைந்து முறை அவர்கள் அவனிடம் தோற்று விட்டனர்.

அன்று மணி, அவனை எப்படியாவது தோற்கடித்துவிட வேண்டும் என்று எண்ணினான். இருவரும் ரோஷமாகப் பம்பரம் ஆடினர். கடைசியில் ம ணி யி ன் பம்பரத்தையே இரண்டாக உடைத்து விட்டது, சுந்தரத்தின் பம்பரம்! தோல்வியால் மணியின் முகம் பெருமையும் அகம்பாவமும் குடிகொண்டிருந்தன.

மணிக்கு அவமானம் தாங்கவில்லை. பேசாமல் வீட்டிற்குத் திரும்பினான். வழியில் அவன் நண்பன் பாலுவைச் சந்தித்தான். ஊருக்குப் போயிருந்த பாலு, அன்றுதான் திரும்பி வந்தான். சுந்தரத்தைப் பற்றி

சுருங்கி விட்டது. சுந்தரத்தின் மேல் வெறுப்பும் ஏற்பட்டது. எரிகிற கொள்ளியில் எண்ணெய் வார்ப்பது போல் சுந்தரம் அவனைப் பார்த்து, "டேய், என்னிடம் உன் 'பாட்சா' பலிக்காது. தெரியுமா?" என்றான் அசட்டுச் சிரிப்புடன். அவன் குரலில் தற் அவனிடம் தெரிவித்தான் மணி.

கதையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல் இருவரும் பேசிக் கொண்டனர். பாலு பம்பரம் விளையாடுவதில் மற்றவர்களை விடக் கெட்டிக்காரன். சுந்தரத்தைப் பற்றிக் கேள்விப் பட்டதும், எப்படியாவது அவ

னைத் தோற்கடித்து, அவன் கர்வத்தை அடக்கிவிட வேண்டும் என்று எண்ணினான்.

மறுநாள் மணியே ஒரு நல்ல பம்பரத்தைப் பாலுவுக்கு வாங்கிக் கொடுத்தான்.

அன்று மாலை, சுந்தரம்—பாலு இருவருக்கும் பம்பர ஆட்டம் ஆரம்பமாயிற்று. ஆட்டம் ஆரம்பிப்பதற்கு முன் பாலுவைப் பார்த்து, ஓர் அசட்டுச் சிரிப்பு சிரித்தான் சுந்தரம். 'எத்தனையோ பேர் என்னிடம் தோற்று விட்டார்கள்! நீ எந்த மூலை ?'' என்று கேட்பதுபோல் இருந்தது அவன் சிரிப்பு.

அவன் அகம்பாவச் சிரிப்பை, பாலு சட்டை செய்யவில்லை. பம்பரத்தைக் கயிற்றால் சுற்றித் தயாராக வைத்திருந்தான்.

'ஜூட்...' என்று கத்தியபடியே, பம்பரத்தை வீசினான். மறுகணம் இருவருடைய பம்பரங்களும் தரையில் வேகமாகச் சுழன்றன. சிறிது நேரம் தான் !

'அப்பீட்' என்று சுழன்ற பம்பரத்தைக் கயிற்றால் எடுத்துக் கையில் பிடித்துக் கொண்டான் சுந்தரம். ஆனால் பாலுவுக்கோ, பம்பரத்தைப் பிடிக்கத் தாமதமாகிவிட்டது. அதனால் அவன் தோற்றான். தரையில் ஒரு வட்டம் போட்டு அதன் நடுவில் பாலுவின் பம்பரத்தை வைத்தான் சுந்தரம். அப்போது அவன் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது.

ஆனால் பாலுவின் முகத்தில் மட்டும் மாறுதல் இல்லை. வேடிக்கை பார்க்க வந்த மணியும், மற்றவர்களும் அவனையே வெறித்துப் பார்த்தனர். 'இனி பாலு ஜெயிக்கவே முடியாது. அவன் பம்பரமும் பிழைக்காது. இரண்டாக உடைய வேண்டியது தான் !'' என்று எல்லோரும் எண்ணினர். ஆனால் மறுநிமிஷம் எல்லோரும் மூக்கின் மேல் விரலை வைக்கும்படியாகிவிட்டது !

குறி தவறியதால், சுந்தரத்தின் பம்பரம், வட்டத்தைத் தாண்டிச் சிறிது தூரத்தில் போய்ச் சுழன்றது. அவன் அதைக் கயிற்றால் பிடிப்பதற்குள், பாலு தன் பம்பரத்தை எடுத்துக் கயிற்றால் சுழலவிட்டுக் கையில் பிடித்துக் கொண்டான். சுந்தரம் தோற்றான். அவன் பம்பரம் வட்டத்திற்குள் வைக்கப்பட்டது.

சிறிது நேரத்திற்கு முன்பு, சுந்தரத்தின் முகத்தில் தோன்றிய மகிழ்ச்சி மறைந்தது.

பாலு அந்தச் சந்தர்ப்பத்தைத் தான் எதிர்பார்த்தான். உடனே பம்பரத்தைக் கயிற்றால் சுற்றினான். வட்டத்திற்குள் இருந்த சுந்தரத்தின் பம்பரத்தைக் குறி பார்த்து ஓங்கியடித்தான், தன் பலம் பூராவையும் ஒன்று திரட்டி . நல்ல வேளை ! குறி தவறவில்லை. 'படக்' கென்று சத்தம் கேட்டது. எல்லோரும் வெறித்துப் பார்த்தனர். சுந்தரத்தின் பம்பரம் இரு பிரிவாக உடைந்

திருந்தது!

"சபாஷ், பாலு! சபாஷ்!" - மணிதான் எல்லோரையும் விட உரக்கக் கத்தினன் துள்ளிக் குதித்துக் கொண்டே. அவன் எதிர்பார்த்தது நடந்து விட்டது அல்லவா? பாலுவின் முதுகில் எல்லாரும் தட்டிக் கொடுத்தனர். சுந்தரத்தின் முகம் சுருங்கி விட்டது. அவமானம் தாங்காமல் தலை குனிந்து கொண்டான்!

"பட்டணத்துப் புலியின் முகத்தைப் பாருடா!" என்ருன் ஒருவன் வேடிக்கையாக.

சுந்தரத்திற்கு அவமானம் மட்டும் அல்ல; ஆத்திரமும் பொங்கியது.

பாலு அவனைப் பொறுமையுடன் பார்த்தான்.

"சுந்தரம்! கவலைப்படாதே! இனிமேலாவது நல்லபடி நட. நீ தான் 'புலி' என்று பெருமையடித்துக் கொள்ளாதே! உன் தற்பெருமையையும், கர்வத்தையும் அடக்கிக் கொள்..." என்று பாலு, புத்திமதி கூறினன். அவன் கூறி முடிப்பதற்கும், அவன் கன்னத்தில் 'பளார்' என்று ஓர் அறை விழுவதற்கும் சரியாக இருந்தது. ஆம். ஆத்திரத்தால் சுந்தரம் பொறுமையிழுந்து விட்டான். மறுகணம் அவன் அங்கு நிற்காமல் 'விர்' என்று நடந்தான்.

"டேய், நில்லுடா!" என்று கத்தினன் மணி. பாலுவை அறைந்த சுந்தரத்தைப் பழிக்குப் பழி வாங்கிவிடுவதென்று துடித்தான்.

"டேய், அவனைச் சும்மா விடக் கூடாது. வாங்கடா!" என்ருன் முருகன். எல்லோரும் சுந்தரத்தை உதைக்க ஓடினர்கள். உடனே பாலு அவர்களைத் தடுத்து விட்டான். இல்லாவிட்டால் சுந்தரத்தின் உடல் புண்ணுகியிருக்கும்!

மறுநாள் பாலு வீட்டில் உட்கார்ந்திருந்தான். அப்போது மணி வந்தான்.

"பாலு! இன்றைக்கு அவன் ஊருக்குப் போகிருனம்!"

"யார்? சுந்தரமா? தொலையட்டும். ஆனல் அவன் இங்கு வந்ததால் நம்மிடம் நல்ல பாடம் கற்றுக் கொண்டான்..."

"ஆனல் அவன் மண்டைக் கர்வம் ஒழிந்ததோ, என்னவோ?"

அப்போது ஒரு பையன் அங்கு வந்தான். சுந்தரம் தங்கியிருந்த வீட்டில் வேலை செய்யும் பையன்தான் அவன். அவன் கையில் ஒரு கடிதம் இருந்தது. அதைப் பாலுவிடம் கொடுத்து, "சுந்தரம் கொடுக்கச் சொன்னுன்" என்று கூறிவிட்டுப் போனுன்.

பாலு அந்தக் கடிதத்தைப் பிரித்துப் படித்தான். உடனே அவன் முகத்தில் மகிழ்ச்சி தோன்றியது.

"சுந்தரம் திருந்தி விட்டான் மணி! இதைப் படித்துப் பார்!" என்று அக் கடிதத்தை



மணியிடம் கொடுத்தான், மணி அதைப் படித்துப் பார்த் தான். அதில் பின்வருமாறு எழுதியிருந்தான் சுந்தரம்:

அன்புள்ள பாலு,

என்னை மன்னித்து விடு. நேற்று நான் யோசிக்காமல் ஆத்திரத்தால் உன்னை அடித்துவிட்டேன். அதற்காக மிகவும் வருந்துகிறேன். உன் அறிவுரைகள் என் மனத்தை மாற்றிவிட்டன. என் பம்ப ரத்தை உடைத்து, என் கர் வத்தையும் உடைத்து எறிந்து விட்டாய்.

கோடை விடுமுறையைக் கழிப்பதற்காக நான் இங்கு வந்தேன். வரும்போது, என் னுடன் தற்பெருமை, கர்வம் இரண்டையும் சுமந்து வந் தேன். இப்போது ஊர் திரும் பும் போது, அந்தச் சுமை யை இங்கே இறக்கித் தூர எறிந்து விட்டுப் போகிறேன். இதற்குக் காரணம் நீதான்! உனக்கு என் நன்றி.

அன்புள்ள,
சுந்தரம்.

*

கோழைகளின் அஹிம்சையை விட வீரர்களின் அஹிம்சையே நமக்குத் தேவை. சத்தியத்திற் காக உயிரைக் கவராது தம் உயி ரையே கொடுப்பவர்கள் தான் தேவை.

"புரு" மார்க் தீப்பெட்டிகள்.

வெண்மையான குச்சிகள் மழை காலத்திற்கும் காற்றுக்கும் உத்திரவாதமுள்ளன.



விற்பனை டிப்போக்கள்:

கோயம்புத்தூர், கடலூர், மதுரை, நாகப்பட்டினம், பாலக்காடு, பன்ருட்டி, பய்யனூர், திருச்சி, திருவாரூர், விழுப்புரம்.

தந்தி: 'LOTUS'

தி லோட்டஸ் மாட்ச் ஒர்க்ஸ்,

த. பெ. நெ. 52 : : சிவகாசி.

கட்டுக் கதையைச் சிறுவனுக்குச் சொல்லிக் கொடுத்தான் வாசுதேவன்...அவனால் தன்வாழ்க்கைக் கதையை நம்பமுடிய வில்லை......

வாசுதேவன் உள்ளே நுழையும் போது வீட்டில் பெரிய ரகளையாயிருந்தது. ரங்கன் அழுது கொண்டிருந்தான். ரேழியிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்து வாசுதேவன் இந்தக் குழப்பத்தின் முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். இவன் அவ்வூர் பள்ளிக்கூடத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட உபாத்தியாயர். சிறுவன் ரங்கனுக்கு பிரத்தியேகமாயும் படிப்புச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

வாசுதேவனுக்கு ஒரு விசேஷ குணம், தற்கால வாலிபர்களாவது யுவதிகளாவது சிறிதும் அங்கீகரிக்காத குணம். நாணமே உருவெடுத்து வந்தவன் வாசுதேவன். பெண்களுக்கு முன் அதிக சிரமப்படுவான். ஒரு பெண்ணோடு பேச நேர்ந்தால் அவன் முகம் வியர்த்து விடும். தான் மிகவும் அரூபமாக விருப்பதாக அவனுக்கு எண்ணம் தோன்றிவிடும். தன்னைப்பற்றி அப்பெண் எப்படிப்பட்ட அபிப்பிராயம் கொள்ளப் போகிறாளோ வென்னும் பயமே அவன் மனதில் பிரதானமாயிருக்கும். தான் கிழிந்த ''ஷர்ட்'' போட்டுக் கொண்டிருப்பதைப் பற்றியும் முகக்ஷவரம் செய்து கொள்ள மறந்ததைப் பற்றியும் அப்பெண் என்ன நினைப்பாளோ என்று ஏங்குவான். தைரியமில்லாத வர்க்கத்தினர் வழக்கம்போல், தன்னைப் பற்றிக் கருதுவதே உலகத்தின்—முக்கியமாக பெண்களின்—வேலை என்று எண்ணினான் வாசுதேவன்.

இது தான் அவன் உள்ளே செல்லாததற்கு காரணம், ரங்கன் அக்காள் ஜயலக்ஷ்மியுடன் சண்டை பிடித்துக் கொண்டிருந்தான். ஜயலக்ஷ்மியின் எதிரில் வாசுதேவனுக்குக் விசேஷ நாணம். இதற்குக் காரணம் அவள் தன்னைப்பற்றி நல்லபிப்பிராயம் கொண்டிருக்க வேண்டு மென்பதே. அவள் அங்கீகரிக்கும்படியான விஷயங்களை மாத்திரமே செய்ய வேண்டு மென்பதே அவனுடைய நோக்கம்.

அழகு விளக்கேபோல் ஜ்வலிக்கும் ஜயலக்ஷ்மியா தன்னைப்பற்றி நினைப்பாள்? அவளுடைய சாமர்த்தியப் பேச்சு, தோற்றம் முதலியவைகளுக்கு, கறுத்த முகமும், சப்பை மூக்கும் தொண்டைக்கு மேல் வெளிக்கிளம்பாத பேச்சும் கொண்ட தான் ஈடாக முடியுமென்பதை கனவிலும் கருதக் கூடாது. உண்மையில் வாசுதேவன் மாநிறமும், நீண்ட மூக்கும் உடையவன் தான். அவனுடைய தெளிவான பேச்சு பள்ளியில் 'மக்கு'களையும் படிக்கும்படி செய்யும். ஆனால் வாசு

தேவன் பெரும்பாலும் கற்பனையுலகிலேயே, மனோபாவம் என்னும் உடைந்த வானத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தான். அங்கே தான் காணும் காட்சிகள் இயற்கை உலகத்திற்குப் பொருத்தமானவைகளல்லவென்பதை அவன் ஒப்புக் கொள்ளவில்லை.

இப்பொழுது உள்ளே சென்று ரங்கனை அழைக்க அவனுக்குத் தைரியமில்லை. ஜயலக்ஷ்மி சிறுவனைக் கண்டித்துக் கொண்டிருந்தாள்.

"போடா பைத்தியம். கதை நிஜமாயிருக்காது. வெறும் கதையென்றால் பிசாசு மாதிரி சண்டைக்கு வருகிறாயே" என்று சொல்லிக் கொண்டே வாசல் பக்கம் வந்த ஜயலக்ஷ்மி வாசுதேவனைப் பார்த்துவிட்டு, "வாத்தியார் வந்து காத்துக் கொண்டிருக்கிறார், புத்தகம் எடுத்துக்கொண்டுவா" என்றாள்.

வாசுதேவன் ஜயலக்ஷ்மியை பார்த்ததும் சட்டென எழுந்தான். இவனுடைய மரியாதையைக் கண்டு ஜயலக்ஷ்மி சிரித்து விட்டாள்.

ரங்கன் முணுமுணுத்துக் கொண்டே கண்களைத் துடைத்த வண்ணம் புத்தகங்களுடன் வந்தான்.

"என்ன, ரங்கா, ஏன் எப்பொழுதும் சண்டைப் பிடித்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான் வாசுதேவன்.

இப்பொழுது அவனுடைய தோற்றத்தில் ஏற்பட்ட மாறுதலைப் பார்த்து ஜயலக்ஷ்மி வியப்படைந்தாள். பள்ளிக்கூடத்தில் பையன்கள் நடுங்கும் தோற்றம் வந்து விட்டது வாசுதேவனுக்கு. கோபம், பயமுறுத்தல், அடி முதலியன வாசுதேவனிடம் கிடையாது. இருந்தாலும் அவனுடைய குரல் மாத்திரம் அன்பும் அதிகாரமும் சேர்ந்து தொனிக்கும். வெளியில் சாதுவாக இருக்கும் வாசுதேவனைப் பார்த்துப் பள்ளிக் கூடத்தில் மாத்திரம் ஏன் பயப்படுகிறோம் என்பது பையன்களுடைய விடை தெரியாத பிரச்னைகளில் ஒன்று.

"நீங்கள் சொன்ன கதையைச் சொன்னேன். அது பொய்யாம்." என்று சொல்லிவிட்டு மீண்டும் அழ ஆரம்பித்தான் ரங்கன்.

"கதை பொய்யென்றால் நீ அழுவானேன்? பைத்தியமே, புத்தகத்தை எடு. நாளைக்கு பையன்களுக்குத் தெரிந்தால் சிரிக்க மாட்டார்களா?" என்று தேற்றினான் வாசுதேவன்.

ரங்கன் விடுவதாகத் தோன்றவில்லை. "நல்ல கதையெல்லாம் வேண்டுமென்றே பொய்யின்னு சொல்றா. பொய்க்கதை அவ்வளவு நல்லாயிருக்குமா? நீங்க சொன்னது நிஜம்தான்னு நினைச்சுகிட்டிருக்கேன்" என்று வாதிக்க ஆரம்பித்தான்.

ரங்கன் கதையை முழுவதும் நம்பிவிட்டானென்று வாசுதேவன் அறிந்தான். இதில் அவனுக்கொன்றும் வியப்பில்லை. நான்காம் வகுப்பில் படிக்கும் பையன்கள் சிறு குழந்தைகள் தானே! தங்களுடைய உபாத்தியாயர் பொய் சொல்ல மாட்டாரென்று அவர்களுக்குத் தெரியும். இந்த மனோதத்துவத்தை முற்றிலும் அறிந்த வாசுதேவன் ரங்கனுடைய அழிந்த நம்பிக்கையை மீட்க முயன்றான்.

"என்ன கதை அது?"

"ராஜா கதைதான். அன்றைக்கு நீங்கள் கிளாஸிலே சொன்னீர்களே!"

"எத்தனையோ கதை சொல்லியிருக்கிறேன். கதை எதைப்பற்றி? என்ன கதை? சொல். மெய்யா பொய்யா வென்று நானே சொல்லுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே தற்செயலாக ஜயலக்ஷ்மியைப் பார்த்தான் வாசுதேவன்.

இவர்களிருவரையும் புன்சிரிப்போடு கவனித்துத் கொண்டிருந்த ஜயலெக்ஷ்மி அலட்சியமாக,



யைப் பற்றியும், சிறுவனின் ஆர்வத்தைப் பற்றியும் லேசாகப் பேசியது அவனுக்குச் சிறிது கோபத்தை உண்டாக்கியது. முன்னால் நிற்பது ஜயலக்ஷ்மியா என்பதைத் தான் அறிந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை.

"வேலையென்ன, ஏதாவது உளறிக் கொண்டேயிருப்பான். யாரோ ராஜகுமாரன் ஒரு கோட்டையிலிருந்து ஒரு ராஜகுமாரியை விடுவித்தானும். இந்தக் கதையை இது வரையில் ஆயிரம் தரம் சொல்லியிருப்பான். போதும் என்று சொன்னால் கேட்டாத்தானே! கதை பொய்யென்று சொன்னலாவது நிறுத்துவான் என்று சொல்லி விட்டேன். உலகமே போய்விட்டது போல் சண்டைக்கு வந்து விட்டான்" என்றாள்.

சிறு குழைந்தைகளுக்குக் கதை மூலமாய் நம்பிக்கை ஏற்படுத்திப் பாடம் கற்பிக்க வேண்டு மென்பது வாசுதேவன் கொள்கை. இதை யார் மறுத்தாலும் பொறுக்க மாட்டான். ஆகவே ஜயலக்ஷ்மி கதை

"உங்களுடைய மனப்பான்மை அதிக கெடுதலை தரக் கூடியதாகும். குழந்தைகளுக்கு ஒரு கதையின் மேல் ஆசையாயிருந்தால் அது நமக்குப் பிடிக்கவில்லை யென்று கெடுப்பது கூடாது. குழந்தைகளின் நம்பிக்கையின் மேல் தான் குணமென்ற கோயிலைக் கட்ட வேண்டும். அவன் கதையைப் பற்றி சண்டைக்கு வருவது நமக்கு விளையாட்டுத் தனமாகத் தோன்றுகிறது. ஆனல் நாமும் குழந்தையின் மனேபாவத்தை நன்குயறிந்திருந்தால் அவனைப் போலவே நினைப்போம்" என்று விளக்கினன்.

"இதெல்லாம் பயிற்சிக் கல்லூரியில் உபாத்தியார்களுக்குச் சொல்

லிக் கொடுக்கும் பாடம் தானே'' என்று சிரித்துக் கொண்டே சொன்னாள் ஜயலக்ஷிமி.

வாசுதேவனுக்குத் திகைப்பும் ஆத்திரமும் கலந்து தோன்றின. தன்னுடைய கொள்கை முழுவதையும் ஒரே மூச்சில் காலாலுதைப்பது போல் இப் பெண் அப்புறம் தள்ளிவிட்டாளே என்று வியந்தான். அவளுடைய தைரியத்தையும் உதாசினத்தையும் பார்த்ததும் அவனுக்கு முன்னிருந்த நாணமும் தன்னம்பிக்கையில் குறைவு மேற்பட்டன.

இவனுடைய திகைப்பு தீர்வதற்குள் ரங்கன் தன் அக்காளைப் பார்த்து கெக்கலித்துவிட்டு, "நீ வாத்தியார்வேலைக்கு வந்தால்நான் படிப்பையே நிறுத்தி விடுவேன்'' என்றான்.

இப்பொழுது திகைத்தது வாசுதேவன் மாத்திரமல்ல ஜயலக்ஷிமியும் கூட. சிறுவனின் வார்த்தைகளால் தன்கொள்கையும் நம்பிக்கையையும் மீண்டும் பெற்றான் வாசுதேவன்.

"தெரியாத விஷயங்களை ஏட்டுச் சுரைக்காயென்று தள்ளுவது பெண்கள் இயற்கை யாதலால் நீங்கள் இப்படிப்பேசுகிறீர்கள். ஆனால் நான் சொல்லுவது கிளிப் பிள்ளை பேச்சல்ல. என்னுடைய சிறிது கால அனுபவத்தால் வேரூன்றிய நம்பிக்கை'' என்று வாதித்தான்.

ஜயலக்ஷிமியின் முகம் சிவந்தது. தன்னிடம் விசேஷ மரியாதை காட்டிய வாசுதேவனா இப்படிப்பேசுகிறவன் என்று வியந்தாள். ஆயினும் அவளுடைய இருதயத்தின் ஒரு மூலையில் ஒரு வெளிச்சம் மினுக்கென்று பிரகாசித்தது. அவ் வெளிச்சம் அப்படியே அணைந்து விடுமா, கொழுந்து விட்டெரியுமா என்று சோதிக்கத் தீர்மானித்தாள்.

"உங்களுடைய அனுபவத்தில் நீங்கள் சொல்லிய கதை மாதிரி உலகத்தில் நடப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? கொள்கை யென்ற ஒரு வெள்ளை யானைக்காக உண்மையை விட்டு விடுவதா? உங்களுடைய கொள்கைதான் நடக்கக் கூடிய கதைகளைச் சொன்னால் நிலைக்காதே? பொய்யை அடிப் படையாகக் கொண்ட கதை மூலம் கொள்கையை நிலைநாட்ட முயல்வதைப் பற்றி கேவலம் பெண்ணின் இயற்கை கூட மேலான அபிப்பிராயம் கொள்ள முடியாதே'' என்று காட்டுத்தியின் வேகத்தை யொத்த பரிகாசத்துடன் கூறினாள்.

"பொய்யும் மெய்யும் எப்படி பகுத்து அறிகிறீர்கள். கதையின் நோக்கம் உணர்ச்சி விஸ்தாரமும் கிரகிக்கும் சக்தியும் வளர்வது தானே.''

"உண்மையில் நடக்கக் கூடிய கதைகளைக் கூறினால் தானே அதற்கு இடம் கிடைக்கும். நடக்கக் கூடாத விஷயங்களை ஸ்வாரஸ்யத்திற்கு மாத்திரம் கொண்டிருப்பது என்ன கதை?''

"இதில் நடக்கக் கூடாதது என்ன?''

"தற்போது நடக்காத காரியம் என்பதையே நான் கூறுகிறேன். ராஜகுமாரர்கள் தைரியமாய் கோட்டைக்குள் நுழைந்து ராஜகுமாரிகளைத் தூக்கிக் கொண்டு போவது பழைய பாட்டி கதை. கல்வி முறை முன்னேற்றமடைவதற்குப் புதுக்கதைகள் வேண்டாமா? இக்காலத்தில் ஒரு பெண்ணுடன் பேசுவதற்குக்கூட வாலிபர்களுக்கு தைரியம் வருவதில்லையே. கதையில் சொல்லப்பட்டது போல் நடப்பதற்கு என்ன இடம் இருக்கிறது?''

கடைசி வார்த்தை சொல்லும் பொழுது வாசுதேவன் தன்னையே உற்றுப்பார்த்துக் கொண்டிருப்பது கண்டு தலையைக்குனிந்தாள். வாசுதேவன் சிறிது நேரம் அவளையே

பார்த்துக்கொண்டிருந்தான். தான் எதிர்பார்க்காத சந்தோஷ உண்மை ஒன்று வெளியாகப் போகிறதென்பதை உணர்ந்தான். ஆனால் தான் அவள் வார்த்தைகளுக்கு இல்லாத அர்த்தத்தைக் கற்பித்தல் கூடாதென்று நினைத்துப்பேச்சை மாற்றிவிட்டான்.

"நேற்று கொடுத்த கணக்குகளைப் போட்டாயா?" என்று ரங்கனைப் பார்த்துக்கேட்டான். தான்வேலையாயிருப்பதை உணர்ந்தும் ஜயலக்ஷிமி அவ்விடத்தை விட்டகலவில்லை என்பதைக்கண்டு மீண்டும் ஒரு சந்தேகம் கொண்டான்.

ஜயலக்ஷிமிக்கோ இருதயமூலையில் தோன்றிய ஒளி மங்குவது போல் தோன்றிற்று. இவ்வளவு சொல்லியும் அறியாத வாலிபனும் உண்டாவென்று வியந்தாள். ரங்கனுக்கு கணக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த வாசுதேவன் முகத்தைப் பார்த்தாள். உண்மையும் நற்குணமும் நம்பிக்கையும், இயற்கை நாணமும் தாண்டவமாடுவதை அறிந்தாள். வாசுதேவன் அறியாமைக்குக் காரணமும் நற்குணமே என்று உணர்ந்தாள். அல்லது அப்படி நம்பும்படி தன்னையே தூண்டிக்கொண்டாள்.

"ரங்கா, நீ போய் சாப்பிட்டு விட்டுவா. அப்புறம் படிக்கலாம்" என்றாள்.

ரங்கன் உபாத்தியாரைப்பார்த்தபடி நின்றான். வாசுதேவன் ஜயலக்ஷிமியின் எதிர்பாராத கட்டளையைக் கேட்டுத் திகைத்துவிட்டான். ஒரு முறை அவளைப் பார்த்தான். அவளுடைய மனதில் ஏற்பட்ட புரட்சியின் எதிரொலி இவன் மூளையில் ஒலித்தது.

"போ" என்று ஒரே வார்த்தையில் ரங்கனை விடுவித்தான்.

மறுநிமிஷம் ஜயலக்ஷிமி வாசுதேவனருகில் வந்து நின்றாள். கண்களில் நீர்ததும்ப அவனையே பார்த்தாள். வாசுதேவனுக்குக் கலவரம். ஒரு வேளை தான் அறியாமல் அவளை அவமதித்து விட்டானோவென்று அழுதான்.

ஜயலக்ஷிமியின் இருதயச்சுடர் அவளுடல் முழுதும் ஒளியைப் பரப்பியது; நெஞ்சு ஒளிப்பரப்பின் வேகத்தை மீறிவிடும் வேகத்தில் அடித்துக்கொண்டது.

அவளுடைய நடுங்கிய கரத்தை அவன் தோள்மேல் வைத்தாள். வாசுதேவனுக்கு தன் கண்களையே நம்பமுடியவில்லை. "ஜயா! உண்மையாகவா......" என்று கேட்டு அவள் கன்னத்தில் வடிந்த கண்ணீரைத்துடைத்தான் வாசுதேவன்.

பொன்னையா சுவாமி துணை.

TRADE MARK
Regd. No. 161859

மதுரை நாடார் கடை

M. N. P.

லிங்க மார்க்

சுருட்டுகள்

M. N. P. லிங்க மார்க் பட்டணம் பொடி, துண்டு, நைஸ், சிவபுரிபானை தயாரிப்புகளை உபயோகித்து இன்புறுங்கள்.

M.N.P.N. & M.N.P.T.

மதுரை.

த. பெ. நெ. 297

S. சந்தோச நாடார் லிமிடெட்

இறக்குமதியாளர்களும் மொத்த வியாபாரஸ்தர்களும்

83-85, குமாரவீதி :: கொழும்பு-11.

—:●:—

அலுமினிய பாத்திரங்கள், சமையல் பாத்திரங்கள், எனுமல் பாத்திரங்கள், பீங்கான் வகைகள், போத்தல்கள், கடிகாரவகைகள், விளையாட்டுச் சாமான்கள், வாசனைத் திரவியங்கள், பவுன்டன் பேனு, சிலேட் பென்சில் வகைகள், சாப்பு சாமான்கள், மற்றும் உணவு சாமான்கள் மொத்தயாகவும் சில்லறையாகவும் விலை சகாய மாக எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பிராஞ்சு:

போன்: 333

19, கொட்மலே ரோடு

நாவலப்பிட்டிய.

—:●:—

ஏஜன்ட்ஸ்:

போன்: 3262 த. பெ. நெ. 2345

S. சந்தோச நாடார் & சன்

1/4. ஈவனிங் பஜார் :: :: P. T. மதுரூஸ்.

&

37, ஹைரோடு

திருநெல்வேலி ஜங்ஷன்.

ஆராய்ச்சி அரோகரா

ராஜன்

எத்தனையோ பேர்களைப் போல ரவியும் ஆராய்ச்சியில் இறங்கினான். அதன் விளைவு.........?

[வீட்டில் தன் அறையில் ரவி எதையோ ஆராய்ந்து கொண்டிருக்கிறான். அவன் நண்பன் கோபு வருகிறான்]

கோபு: ஹலோ, ஆராய்ச்சி நிபுணரே! என்ன நடந்து கொண்டிருக்கிறது?

ரவி: இன்றைக்கு ஒரு புது ஆராய்ச்சியில் இறங்கி யிருக்கிறேன் கோபு.

கோபு: ஒரேயடியாய் இறங்கி விடாதே! புகழ் வந்து உன்னை கௌவிக் கொள்ளப் போகிறது! அது என்ன புது ஆராய்ச்சி?

ரவி: புத்தகத்தில் உள்ள பாடம் எல்லாம் நாம் படிக்காமலே மனத்துக்குள் ஏறுவதற்கு ஒரு சாதனம் கண்டு பிடிக்கப் போகிறேன்.

கோபு: 'அப்படிச் சொல்லடா புண்ணைக்கு மாடா' என்றானாம். ரொம்ப அதிசயமான ஆராய்ச்சி தான், போ!

ரவி: இப்படித்தான் ஜேம்ஸ் வாட்டையும், நியூட்டனையும் கேலி செய்தார்கள்.

கோபு: அவர்களுக்காவது ஒரு உடைந்த பாத்திரமும் ஆப்பிள் பழமும் கிடைத்தது. உனக்கு ஒரு காதறுந்த ஊசி கூட கிடையாதே!

ரவி: அதேதான்! காதறுந்த ஊசிதான்!

கோபு: கொஞ்சம் புரியும்படி சொல், அப்பனே! நியூமாடல் நியூட்டன் பிரபுவே!

ரவி: புத்தகத்தைத் திறந்து வைத்துக் கொள்ள வேண்டியது. காதறுந்த ஊசியை வலது கை ஆள்காட்டி விரல் நகத்துக்குள் சொருகிக் கொள்ள வேண்டியது......

கோபு: நுனிப் பக்கத்தைத் தானே?

ரவி: இருடா, முட்டாள், இடையில் பேசாதே! காதறுந்த பாகத்தை நகத்துக்குள் சொருகி, ஊசி முனையைப் படிக்க வேண்டிய பக்கத்தில் வரி வரியாக நகர்த்த வேண்டியது......

[இந்த நேரத்தில் பேசுவதைக் கவனித்துக் கொண்டே ரவியின் தம்பி பாலு வருகிறான்]

பாலு: நகர்த்திக் கொண்டே போனால் இரண்டாம் பக்கம் வரும்போது ரவியை கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரியில் நாலாம் நம்பர் அறையில் கொண்டு தள்ளி விட்டு வரலாம்.

ரவி: டேய், வந்துவிட்டாயா, என் ஆராய்ச்சியைப் பாழ்படுத்த?

பாலு : நான் ஒன்றும் பாழ்படுத்த மாட்டேன். நீ உன் மூளையைப் பாழ்படுத்தாமல் இருந்தால் போதும்.

ரவி : (கோபத்துடன்) பாலு, நீ இப்போது இங்கிருந்து போகிருயா, அம்மாவைக் கூப்பிடட்டுமா ?

பாலு : கூப்பிடேன். பி. எஸ். ஸி படித்துவிட்டு வீட்டைச் சுற்றிச் சுற்றி வருவதை அம்மாவுந்தான் எத்தனை நாள் பொறுத்துக் கொண்டிருப்பாள் ?

ரவி : (கோபம் தளர்ந்து) பார்த்தாயா, கோபு. இவர்களை வைத்துக் கொண்டு என்ன ஆராய்ச்சி நான் செய்ய முடியும்? இப்படிப்பட்ட ஆராய்ச்சி விரோதிகள் இருக்குமட்டும் நம் நாட்டில் ஆராய்ச்சி ஏது? முன்னேற்றமேது ?

கோபு : நீ உன் ஆராய்ச்சியைச் சொல்லு, ரவி. பாலுவும் கேட்டுவிட்டுப் போகட்டுமே !

ரவி : சே, சே! அதுதானே கூடாது. என் ஆராய்ச்சி அவ்வளவு இளப்பமானது··· என்று நினைத்தாயா ? இவன் போய் அவனுடைய திண்ணைத் தூங்கி, தெருப் புழுதி, அண்டாச் சுரண்டி அடுப்பூதி நண்பர்களுக்குச் சொல்லி ஊரையே இங்கே அழைத்து வந்து விடுவானே!

பாலு : ஆமாம், இவர் பெரிய மார்க்கோனி! இவரைப் பார்க்க ஜனங்கள் கூட்டங் கூட்டமாக வருவார்கள், என்று எண்ணமோ ?

ரவி : ஆமாண்டா, நான் மார்க்கோனிதான், எடிசன் தான்; இப்போ தெரியாது, பிறகு தெரியும்! கோபு, வா, நாம் வெளியே போகலாம். இங்கே இந்தச் சித்திரவதைகள் சும்மாயிருக்க விடாது.

[பாலு சிரிக்கிருன். ரவியும் கோபுவும் வெளியே செல்கிருர்கள். கடற்கரையில் உட்கார்ந்து பேச்சை தொடர்கிருர்கள்]

கோபு : மிச்சத்தையும் சொல்லு ரவி.

ரவி : என்னத்தைச் சொல்ல ? சிந்தனையைத்தான் கலைத்து விட்டானே, பாவி !

கோபு : தவம் கலைந்த ரிஷிகளைப் போல உனக்கு சாபம் கொடுக்க மட்டும் சக்தியிருந்தால்.........?

ரவி : சாபம் கொடுக்கும் சக்தியா ? அவனை அடிக்கக் கூட என்னிடம் சக்தி கிடையாது. அவன் படிக்காமல் வீதியளந்து விட்டு எப்படியோ சம்பாதித்து வருகிருன். அம்மாவுக்கு அவன் மேல் ஒரே உயிர். அவன் மேல் நான் கைவைத்தால் என் உயிர் மேல் அவர்கள் கைவைத்து விடுவார்கள் !

கோபு : கவலைப்படாதே, ரவி. உன் ஆராய்ச்சி மட்டும் வெற்றியடையட்டும். அப்புறம் எல்லோரும் உன்னைப் போற்றுவார்கள். சரி, ரவி ! உன் ஆராய்ச்சி வெற்றியடைந்தால் காதறுந்த ஊசி காண்டிராக்ட் எனக்குத் தருவாயா ?

ரவி : போடா, போ. நீயும் கேலி செய்கிருயா ?

கோபு : உண்மையாகத்தான் கேட்கிறேன், ரவி. உனக்குப் பேரும் புகழும் வந்தபின் உனக்கு காதறுந்த ஊசி செய்ய நேரமிருக்காதே !

ரவி : கோபு, காதறுந்த ஊசியில் தானே என் ஆராய்ச்சியே சுழல்கிறது. ஊசியின் அறுந்த காதின் விளிம்பும், நகமும் சதையும் ஒன்று சேரும் போது ஒரு சக்தி பிறக்குது...அந்தச் சக்தி...

[பழரச பானம் வியாபாரத்தில் வெற்றிகரமாக முன்னேறிச் செல்லும் அவர்கள் நண்பன் நமசிவாயம் வந்து சேருகிருன்.]

நமசிவாயம்: எதில் சக்தி பிறக்கும்?

ரவி : "தந்தையர் நாடெனும் போதினிலே—ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" மூச்சில்தான் சக்தி பிறக்கும்!

நமசி : பேச்சை மாற்ருதேயப்பா! கோபு, நீ சொல்லேன்?

கோபு : அது ஒரு ஆராய்ச்சி.

நமசி : ஆராய்ச்சியா? பேஷ்...... சொல்லப்பா, ரவி.

ரவி : உனக்கு எதுக்கு நமசிவாயம்? நீ தான் ஆராய்ச்சி இல்லாமலேயே ஆயிரம் ஆயிரமாகச் சம்பாதிக்கிருயே.

நவசி : அப்படியானுல் விட்டுவிடு. எனக்கு ஒன்று நீ கண்டு பிடித்துத் தரவேண்டும். பழரசம் அடைக்கும் புதுவகைப் பாட்டில் ஒன்று தயார் செய்ய வேண்டும்.

கோபு : எப்படிப் புதுவகை?

நவசி : கோழி முட்டை மாதிரி இருக்க வேண்டும். வாய், கீய் ஒன்றும் இருக்கக் கூடாது. ஆனுல் பழரசம் உள்ளே அடைபட்டிருக்க வேண்டும்.

ரவி : பழரசத்தைச் சாப்பிடுவது எப்படி?

நமசி : முட்டைப் பாட்டிலே அப்படியே வாயில் போட்டுக்கொண்டு மென்று தின்று விடவேண்டியது தான்.

கோபு : பாட்டில் என்னவாகும்?

நமசி : இது என்ன கேள்வி? சாப்பிடுபவன் என்னுவான் என்று கேட்காமலிருந்தாயே! பாட்டிலும் ஓர் உணவுப் பொருளிலேயே செய்திருக்க வேண்டும். ஆனுல் எத்தனை காலம் இருந்தாலும் கெட்டுப் போகாமலிருக்க ரசாயனப் பொருள்கள் சேர்க்க வேண்டும்.

ரவி : சரியான யோசனை!

கோபு : என்ன யோசனை? இதற்குப் பழரச பானத்தையே உணவாகத் தின்று பழரச முட்டையிடும் கோழிதான் கண்டு பிடிக்க வேண்டும்.

ரவி : அப்படிச் சொல்லாதே, கோபு. முடியாதது ஒன்றுமில்லை.

நவசி : நான் போய் வருகிறேன், ரவி. யோசித்து வை. செய்து முடித்தால் இரண்டாயிர ரூபாய் தருகிறேன். அதுவரை நாளையிலிருந்து மாதம் இருநூறு ரூபாய் சம்பளம். ஆராய்ச்சிக்கு உனக்கு வேண்டிய சாமான்களை என் மானேஜரிடம் கேட்டு வாங்கிக் கொள்.

(நமசிவாயம் போய் விடுகிருன். ரவி யோசிக்கிருன்)

ரவி : (மனத்துக்குள்) முட்டை போலிருக்க வேண்டும். உள்ளே பழரசமும் குடியிருக்க வேண்டும். வாய்-கீய் ஒன்றும் இருக்கக் கூடாது...(வெளிப் படையாக) சரி, கோபு. வா போவோம். வீட்டில் போய் ஆராய்ச்சியைத் துவக்குவோம்.

(இருவரும் போகிருர்கள்.)

(மறு நாள் தெருவில் நவசிவாயமும் கோபுவும் சந்திக்கிருர்கள்)

நவசி : ஹலோ, கோபு! காரில் ஏறிக் கொள். உன் காரியாலயத்தில் கொண்டு விட்டு விடுகிறேன்.

கோபு: (ஏறிக் கொண்ட பின்) என்ன நமசிவாயம், நேற்று ரவிக்கு ஒரே அதிர்ஷ்டம். ஆராய்ச்சியின் மேல் உனக்கு இத்தனை பற்று இருக்கிறதே!

நமசி : ஆராய்ச்சியாவது, மண்ணுங் கட்டியாவது? அவன் தாய் வந்து ரவியின் போக்கைக் கூறினுள். அவனுக்குப் பைத்தியம் பிடித்தாலும் பிடித்து விடும் என்று அழுதாள். அதற்கு இப்படி ஒரு நாடகம் நடத்தினேன்.

கோபு : அப்படியானுல் சம்பளம் கொடுக்க மாட்டாயா?

நமசி : சம்பளம் கொடுப்பேன். அது என் ஆபீஸில் வேலை செய்வதற்காக!

கோபு : அவனுடைய ஆராய்ச்சி?

நமசி : அது அரோகரா!

கட்டிட வேலைகளுக்கெல்லாம்
திட்டமாக குறிக்க வேண்டியது..



சூலம் மார்க்
சங்கர் பிராண்ட்
போர்ட்லண்ட்
ஸிமெண்ட்

திடத்திலும், தரத்திலும், தேர்ந்தது

சர்க்கார் சோதனைச்சாலையின் நற்சாட்சி பத்திரம் பெற்றது

இந்தியா ஸிமெண்ட்ஸ் லிட்
தொழிற்சாலை: சங்கர் நகர், திருநெல்வேலி ஜில்லா
ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: 11/12, செகெண்ட் லைன் பீச், மதராஸ்-1

For Complete Range of Cotton Spinning Plant

TEXTOOL

CARDING ENGINES

DRAWING FRAMES

FLY FRAMES

RING SPINNING FRAMES

REELING MACHINES

BUNDLING PRESS

TEXTOOL DIESEL ENGINES

For Agricultural purposes.

★

ENQUIRIES SOLICITED

TEXTOOL COMPANY LIMITED

Post Box No. 221, COIMBATORE (South India)

Telephone: 409 & 1409 Telegrams: "TEXTOOLCO"

பெண் மனம்

ஆர். சூடாமணி

—கதை எழுதிப் பணம் வந்ததும் 'சமத்துவம்' பேசியவள் கணவனுக்கு விபத்து என்றவுடன்............

ஏதோ பொழுது போகவில்லையென்று தான் ஒரு கதை எழுதினாள். எழுதியது தான் எழுதினாளே என்று அதை ஒரு பத்திரிகைக்கு அனுப்பி வைத்தாள். திரும்பி வந்துவிடும் என்று எண்ணிக் கொண்டிருந்த போது, அது வந்தும் விட்டது—கைக்கு அல்ல, பத்திரிகையிலேயே.

கீதா துள்ளிக்கொண்டு பத்திரிகையுடன் கணவனிடம் ஓடினாள். 'இதோ பார்த்தீர்களா ?'

தினசரியில் அயல்நாட்டுச் செய்தியில் மூழ்கியிருந்த ஜகன்னாதன் தலையை நிமிர்த்தாமலேயே 'என்ன ?' என்றான்.

கீதாவுக்கு சந்தோஷ மிகுதியில் கோபிக்கக் கூடத் தோன்றவில்லை. பத்திரிகையைப் பிரித்து பேப்பருக்கு முன் அவன் முகத்துக்கு நேரே நீட்டினாள். 'கதை !'

'ஓஹோ, எனக்குத்தான் கதை படிப்பதென்றால் பிடிக்காதே .'

'யார் எழுதியதென்று கொஞ்சம் பாருங்கள்'' அவன் பார்த்தான்.

'யார் இது, கீதா ஜகன்னாதன் ?'

அவளுக்குப் பொறுக்க முடியவில்லை. 'எங்கேயாவது கேள்விப்பட்ட பெயராகவாவது இருக்கிறதா ? சொந்த பெண்டாட்டியை...'

'உன் கதையா ? போட்டிருக்கிறார்களா ? அடி சக்கை ! எங்கே, எங்கே பார்க்கலாம் !'

பிறகு அவன் காட்டிய சிரத்தையில் கீதாவின் அபரிமிதப் பெருமையும் கூட ஒரு குறையும் கண்டுபிடிக்க முடியவில்லை. அயல் நாட்டுச் செய்திகள் தரையில் உருள 'அண்ணன் உள்ளம்' அவன் கவனத்தை இழுத்தது.

அவன் படித்து முடிக்கும் வரை எப்படியோ வாயை மூடிக்கொண்டிருந்த கீதா அவன் பத்திரிகையைத் தாழ்த்தியவுடனேயே, 'கதை எப்படி ?' என்றாள் ஆவலாக.

கதையென்று நல்ல வேளையாகச் சொல்லி விட்டாய், 'இல்லையானால் கண்டுபிடித்திருக்கவே மாட்டேன்.'

'ஆமாம், உங்களுக்கு நான் என்றால் அப்படித்தான். கொல்லைப் பச்சை மருந்துக்காகுமா ?'

'எனக்கு ஒவ்வொரு சமயம் கடிதம் எழுதுவாயே, அதில் இருக்கிற **பாவம்** இங்கே காணோமே ? பேசாமல் அந்தக் கடிதங்களில் இரண்டைப் பிரசுரித்துவிடு. நல்ல பெயர் வந்துவிடும்.'

'உங்களுக்குப் பிடிக்காவிட்டால் போகிறது,' கீதா வெடுக்கென்று பத்திரிகையைப் பிடுங்கிக் கொண்டாள்.

'சும்மா சொன்னேன். கோபித்துக் கொள்ளாதே. நீ கதை எழுதுகிறாயென்றால் எனக்குப் பெருமை இல்லையா கீதா ? இனிமேல் 'ஆசிரியை கணவன்' என்று எனக்கு வேறு புனைபெயர் கிடைத்துவிடும்.'

கணவனின் உல்லாசமான பரிகாசத்தில் அவள் ஆர்வம் அதிக

ரித்தது. பத்திரிகையை எடுத்துக் கொண்டு தெரிந்தவர்கள் வீட்டுக் கெல்லாம் போய்த் தன் கதையைப் படிக்கச் செய்து புகழ் மாலைகளை வலிய வாங்கிக் கொண்டு வந்தாள். சொந்த சிருஷ்டியில் தோன்றும் இயற்கையான பெருமிதம் தான் அப்போது அவளுக்கு இருந்தது. வேலைக்காரி மருக்கொழுந்துக்குத் தமிழ் இலக்கணத்தை போதித்துத் தன் கதையைப் படித்துக் காட்ட மாட்டோமோ என்ற ஆசையுடன் அந்தப் பெருமிதம் அப்போது முடிவு கொண்டிருந்தது.

அதன் பிறகுதான் பத்திரிகாலயத்திலிருந்து இருபது ரூபாய்க்கு ஒரு மணியார்டர் வந்தது. அவளுக்கு அதைக் கையால் தொட்டவுடனேயே அவளுக்குள் ஒரு மாறுதலும் வந்தது.

'கீதா, என் ஷர்ட்டைக் கொஞ்சம் பீரோவிலிருந்து எடுத்து வாயேன்' என்று இரைந்து கொண்டே ஜகன்னாதன் அவசரமாய்த் தலையை வாரிக்கொண்டிருந்தான்.

கீதா ஷர்ட்டுடன் வந்தாள். 'நம்ம மருக்கொழுந்துக்கு ஜீவனம் ரொம்ப கஷ்டமாயிருக்கிறதாம். இரண்டு ரூபாய் சம்பளம் போட்டுத் தரச் சொல்கிறாள்.'

'அதற்கென்ன, கொடுத்து விடுவோம்?'

கீதா மந்தஹாஸத்துடன், 'ஏது, அசாத்தியத் தாராளமாயிருக்கிறது! ஆபீஸில் சம்பள உயர்வு ஏதாவது...என்றாள்.'

அவனும் சிரித்துக்கொண்டே, 'அது ஒன்றும் இல்லை, ஆனால் இரண்டு ரூபாய் ஒரு பிரமாதமா? எனக்கு ஏதாவது ஒன்று இரண்டு தட்டினால் உனக்கு ஆசிரியர் அனுப்பியிருக்கும் 'பாக்கெட்' மணியிலிருந்து தான் இனிமேல் வாங்கிக் கொள்ளப் போகிறேன்' என்றான்.

அவள் பதில் ஒன்றும் சொல்ல வில்லை.

'எனக்கு நீ இன்னும் 'டிரீட்' கொடுக்கவில்லை யென்று ஞாபக மிருக்கட்டும் கீதா. நாலு ஐஸ்கிரீமா வது இல்லாமல் விடமாட்டேன்... ஆமாம். இதென்ன நீல ஷர்ட்டைக் கொண்டு வந்திருக்கிறாய்? நான் ஆபீஸுக்குக் கலர் உடுத்து வதில்லை யென்று உனக்குத் தெரி யாது?'

'கொஞ்சம் மெதுவாகவே பேசுங் கள்.'

'அடேயப்பா! என்ன ரோசம்!'

'பின்னே? பெண்களுக்கு சுய மாகச் சம்பாதிக்கும் ஆற்றல் இருந் தால் ஆண்களின் அதட்டல் உருட் டலை யெல்லாம் பொறுத்துக் கொண்டிருக்கமாட்டார்கள்.'

ஜகன்னாதன் ஒரு நிமிஷம் திகைத் தும் விட்டான். பிறகு மெள்ள, 'ஓ, அதுவா விஷயம்? பலே, கீதா, கதை எழுதும் தைரியத்தில் என்னை விட்டுப் போனாலும் போய் விடுவாய் என்று சொல்லு!' என் றான்.

'நான் அப்படி எங்கே சொன் னேன்? ஆனால் ஒவ்வொரு பெண் ணும் சுயமாய் சம்பாதித்தால் ஆணுக்கு சமானம் ஆகிவிடமாட் டாளா? அது ஒரு சக்தி என்பதை ஒப்புக்கொள்ளத்தானே வேண் டும்?'

'அப்படியானால், சம்பாதிக்கும் பெண்தான் ஆணுக்குச் சமம், உம். அது போகட்டும். உன் இருபது ரூபாயில் எப்போது மாளிகை கட் டப் போகிறாய்?'

'ஒரு இருபது தானே? பல இரு பது சேர்ந்தால்...'

'சபாஷ். பெருக்கல் வாய்ப்பாடு என்றால் அவ்வளவு பிடிக்குமா?'

கீதா தலையைத் திருப்பிக்கொண் டாள்.

'அப்படியானால் அங்கிருந்து பணம் புரளாது. ஐஸ்கிரீமுக்கு நாமம் தானுக்கும்!'

'நீங்கள் எனக்கு எவ்வளவு நாள் ஐஸ்கிரீம் வாங்கித் தந்திருக்கிறீர் கள்?'

'சமத்துவம் இங்கேயே ஆரம்ப மாகி விட்டதா? இனிமேல் நம் வீடு லட்சிய வீடுதான் கீதா. என்ன சொல்கிறாய்!'

அவள் ஒன்றும் சொல்லாமல் உள்ளே போய் விட்டாள்.

கீதாவுக்குத் தங்கள் மத்தியதர வர்க்கத்தில் ஏற்பட்டுவரும் ஆண்-பெண் சமத்துவத்தை எண்ணி மிக வும் பெருமையாயிருந்தது. இந்த மகத்தான கொள்கையை எல்லோ ருக்கும் விளக்கிப் பெண்களின் பிறப்புரிமையாகிய சுதந்திரத்தைப் பரப்பவேண்டும் என்று அவா அடித் துக் கொண்டது. காரியாலயம் சென்று வேலை செய்தோ வீட்டி லிருந்தே தன்னைப் போலோ பெண் கள் சம்பாதித்துத் தம்கையால் தாம் வாழ முடிந்தால் பிறகு ஆண்களையே எல்லா சந்தர்ப்பத்திலும் அண்டி வாழவேண்டியிருக்குமா?...

'கீதா!'

'யார்? லக்ஷ்மியா? வா வா.

'சிநேகிதியை மலர் முகத்துடன் வரவேற்றாள் கீதா. லக்ஷ்மியின் முகத்தைப் பார்த்து அவளுக்கு அதிர்ச்சியாயிருந்தது. 'ஏன் இப்படி சோகமாயிருக்கிறாய்? என்ன சமாச் சாரம், லக்ஷ்மி?'

'என்னவென்று சொல்லுவது? எங்கள் வீட்டில் அவர் புளூரஸியில் படுத்து நாலு மாதமாகிறது. வேலைக் குப் போவது நின்று விட்டதால் குடும்பத்தை நடத்தும் கஷ்டம் ஒரு

படிக்கும் மாணவர்களுக்குப் பேச்சுரிமையும் சமுதாய இயக் கங்களில் ஈடுபடும் உரிமையும் இருக்கவேண்டும்.

பக்கம், அவரைப் பற்றிய கவலை ஒரு பக்கம்.'

'நிலைமை ஒன்றும்......?'

'டாக்டர் பயமில்லையென்று சொல்லி விட்டார். ஆனாலும் அவர் படுகிற மனவேதனையைத் தீர்ப்பது எப்படி யென்பதுதான் எனக்குத் தீராத கவலையாயிருக்கிறது. பொருளாதார நிலைமையை நினைத்துக் கொண்டு விட்டாலோ ஒன்றும் ஓடவில்லை. எங்கள் இருவர் பக்கத்திலும் உறவினர்கள் எவ்வளவோ செய்கிறார்கள்; ஆனாலும்......'

'நீ எங்காவது வேலைக்கு...'

'திடீரென்று என்ன வேலைக்குப் போவது, அதற்குத்தகுந்த 'குவாலிபிகேஷன்ஸ்' வேண்டாமா?'

கீதா தன் வாழ்வின் நடுநாயகமாகிவிட்ட ஒரு இன்பமான சுதந்திர மார்க்கத்தை எண்ணி ஆர்வமாய், 'கதை எழுதேன் பத்திரிகைகளுக்கு' என்றாள்.

'சரிதான். அடுத்தபடி கன்னக் கோலை எடுத்துக்கொள் என்பாய்.'

'அதென்ன அப்படிச் சொல்கிறாய்? என் கதை வெளிவந்ததிலிருந்து எனக்கொரு புது சக்தி வந்தமாதிரியல்லவா தோன்றுகிறது. ஆண்களுக்கு நாம் சமயம் நேர்ந்தபோது ஒத்தாசை செய்யவும் சமத்துவத்தை வற்புறுத்தவும்...'

'எனக்கு லெக்சர் செய்யாதேயம்மா. உன் புருஷன் வீட்டில் இல்லையா?'

'இன்னும் ஆபீஸிலிருந்து வரவில்லை.'

'அதுதானா சமத்துவத்தைப் பற்றித் தைரியமாய் அளக்கிறாய்?'

'எனக்கென்ன பயம் அவரிடம்? இப்போதெல்லாம் அவர் என்னிடம் இரைந்து பேசினாலும் நான் அனுமதிப்பதில்லை.'

'சமத்துவமா?'

'பின்னே என்ன? அந்த அபாரக் கொள்கையை யாருக்காவது உபதேதேசம் செய்ய வேண்டு மென்று எனக்குஆசை. யாருக்கு நான் செய்

சந்தா விகிதம்

தனிப்பிரதி 25 ந. பை.
6 மாதச் சந்தா ரூ. 1. 50
வருடச் சந்தா ரூ. 3

விளம்பர விகிதம்

மேலட்டை: பின்பக்கம்

மூன்று கலர்	ரூ.	250
,, உட்பக்கம்	ரூ.	150

உட்பக்கம்:

முழுப்பக்கம்	ரூ.	100
½ பக்கம்	ரூ.	60
¼ பக்கம்	ரூ.	30
1 கலம் 1 அங்குலம்	ரூ.	10

32 இனிய மணம் கமழும்
302 ஜவ்வாது
3002 பத்திகள்

—: தயாரிப்பவர்கள் :—

S. V. செல்லக்கனி & கோ

மீனாக்ஷி கோயில் தெரு, மதுரை.

திருப்பதி-திருமலை கைடு

(யாத்ரீகர்களுக்கு) 0—4—0

தபால் செலவு தனி.

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் உண்டு.

V. R. M. DOSS & BROS.,
Robertsonpet, K. G. F.,

வது? எங்கள் மருக்கொழுந்துக்குத் தான் செய்ய வேண்டும். உனக்கே புரியவில்லை. அவளுக்கு எங்கே புரியப் போகிறது சமத்துவமும் சுதந்திரமும்?'

'உனக்குப் புரிந்தால் சரி. நான் போய் வரட்டுமா? உன்னோடு கொஞ்சநாழி பேசிக்கொண்டிருந்து என் கவலையை மறக்கத்தான் வந்தேன்.'

'ஒன்றும் கவலைப்படாதே. தெய்வம் இருக்கிறது. எதற்கும் கதை எழுதிப்பார்.'

'நான் கதை எழுதினால் தெய்வம் விட்டவழி என்றுதான் எழுத வேண்டும். போய்வரட்டுமா?

லக்ஷ்மி போனபின் கிதா வெகு நேரம்யோசனையில்ஆழ்ந்திருந்தாள். தன் சிநேகிதி எவ்வளவு தூரம் பிறரை நம்பி வாழ வேண்டியவளாயிருக்கிறாள் பாவம். அதுவேதான்... சுயாதீனம் உடனே அவள் எண்ணத்தை கணவன்பால் திருப்பியது. மணி ஏழு ஆகிறதே, அவர் ஏன் இன்னும் வீடு வரவில்லை? ஒரு வேலை ஏதாவது விபத்து......?'

கிதாவுக்குத் தூக்கிவாரிப்போட்டது. அப்படியும் இருக்குமா? அவர் எந்தக் காரணத்தைக் கொண்டும் தாமதம் செய்யமாட்டாரே? சொல்லி வைத்தாற்போல் அதே சமயம் ஜகன்னாதன் நொண்டிக் கொண்டே உள்ளே வந்தான்.

கிதாவின் முகம் வெளிறியது. 'என்ன' என்றுகூடக் கேட்கத் தோன்றாமல் கலவரமாய் அவனிடம் ஓடி வந்தாள்.

ஜகன்னாதன் வந்து படுக்கை மேல் உட்கார்ந்து கொண்டு காலைக் கெட்டியாய் இருகைகளாலும் பிடித்துக் கொண்டான். முகம் வலியினால் கறுத்தது.

'என்ன...என்ன நடந்தது?'

பஸ்ஸிலிருந்து இறங்கும்போது விழுந்து விட்டேன்...அப்...பா! என்ன வலி!.........நொண்டிக் கொண்டே வீட்டுக்கு வர நாழியாய் விட்டது...ஐயோ.' முனங்கிக் கொண்டே அவன் படுக்கையில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டான்.

கிதாவுக்குக் கையும் காலும் பதறின. கொஞ்சம் சமாளித்துக் கொண்டு, வீட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த மருக்கொழுந்தை நிறுத்தி வைத்தியரை அழைத்து வரும்படி அவசரமாய் அனுப்பிவிட்டுப் புருஷனிடம் விரைந்தாள்.

'எப்படி இருக்கிறது?...நான் ஏதாவது செய்யட்டுமா?'

'நீ என்ன செய்வாய் கிதா? வலி தான் தாங்கவில்லை, எதற்கும் நீ தைரியமாயிரு. ஒன்றும் ஆகாது.'

அவன் பட்டினியாயிருக்கிறானே என்ற எண்ணம்கூட அவளுக்குத் தோன்றவில்லை. எதுவும் செய்வதறியாமல் படுக்கையினருகில் பேயறைந்தாற் போன்ற முகத்துடன் உட்கார்ந்துவிட்டாள்.

எல்லாம் நல்லபடியாய் ஆகுமா? அந்த அடி எவ்வளவு ஆழமானது? ஒருவேளை நிரந்தர நொண்டியாகி விட்டால்...? கிதா தலையை வேகமாய் ஆட்டிக்கொண்டே கைகளை ஒன்றன் மேலொன்று அழுத்திக் கொண்டாள். ஐயோ, இப்போது என்ன செய்வது? அவன் பல மாதங்கள் படுத்த படுக்கையானாலும் பிறகு நல்லபடியாய் எழுந்து விட்டால் போதும். அவள் எல்லா பணிவிடைகளையும் செய்வாள்.

திடீரென்று லக்ஷ்மியின் நிலை ஞாபகத்துக்கு வந்தது. அவன் படுத்த படுக்கையாகி விட்டால் வீடு நடப்பது எப்படி? அவள் தான் சம்பாதிக்க வேண்டும். கதை எழுதியா? கதைகள் பிரசுரமாவது என்ன நிச்சயம்? தான் எழுத வேண்டியது அவ்வளவு முக்கியமாகி விட்டால்—அதனாலேயே வீடு நடக்க வேண்டு மென்றால்...கிதாவைப் பயம் பற்றிக் கொண்டது. எழுத்தை நம்பி உபயோகமில்லை. எங்கேயாவது காரியாலயத்தில், யாரையாவது சிபாரிசுக்குப் பிடித்து

ஒரு டைப்பிஸ்டாகி—ஆனல் டைப் அடிக்கத்தான் அவளுக்குத் தெரியாதே. குமாஸ்தாவாகலாம். குமாஸ்தாக்களுக்கு எவ்வளவு சம்பளம் இருக்கும? குறைந்த பட்சம் எழுபது எண்பதாவது இருக்காது? அதை வைத்துக் கொண்டு சிக்கனமாய்க் குடித்தனம் நடத்த வேண்டும். இந்த வீட்டை விட்டு எங்காவது சிறியதாய் இரண்டு அறைகள் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு மூலையில் சமையல் வேலை—ஐயோ, அறை முழுவதும் புகையுமே ஆனலும் அங்கேயே தான் இருக்க வேண்டும். நோயாளி வேறு... அடுப்பு வைத்துத் தரையெல்லாம் சுடும். அதிலா இரவில் படுத்துக் கொள்வது? ஆனல் அப்படியே இருந்து விடுமா என்ன? குமாஸ்தாக்களுக்கும் சம்பள உயர்வு இருக்காதா என்ன?...தனியாய் போய் வேலை செய்து உலகத்தில் நல்லபேர் எடுக்க வேண்டுமே!... சரி சரி, சம்பளம் உயர்ந்ததும் ஒண்டுக் குடித்தனமாய் இல்லாமல் தனி இடமாக ஒன்று பார்த்து...ஆனல் அதற்கு அந்தப் பணம் போதுமோ என்னமோ? உழைப்பென்ருல் எல்லாம் தான் அனுபவிக்க வேண்டும். ஆண்—பெண் சமத்துவத்தில் சமயம் நேர்ந்தால் தனக்காக மட்டுமோ அல்லது குடும்பத்துக்கும் சேர்த்தோ பெண் தன் கையாலேயே பிழைக்கும் வழி...கீதாவுக்கு உடம்பு நடுங்கியது. ஐயோ, அப்படி யெல்லாம் வராவிட்டால் தேவலையே...

'உம்...அப்பா...'

'ரொம்ப வலிக்கிறதா?'

'ஆமாம்,'

கீதாவுக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. பயத்தோடு அவள் பார்வை கதவருகில் சென்ற போது வைத்தியர் உள்ளே வந்தார்.

எழுந்து ஒரு பக்கமாய் நின்ற கீதாவுக்குக் கால்மணி நேரம் உடம்பில் உயிரே இல்லை. அவருக்கு ஒன்றுமில்லாமல் இருக்க வேண்டுமே. அவர் நலத்துக்காகவும் என்னுடைய...

'மேல் அடிதான். வலி அதிகமிருந்தாலும் கவலையில்லை. எலும்பு எதுவும் பாதிக்கப்படவில்லை. நாலு நாட்கள் படுக்கையில் இருந்தால் சரியாகிவிடும். மருந்து கொடுக்கிறேன்.'

டாக்டரா பேசியது? தெய்வமே தான் மனித ரூபத்தில்...கீதாவுக்கு நிம்மதிப் பிரவாகத்தில் கண்கள் கூட நனைந்து விட்டன.

வைத்தியர் போன பிறகு கீதா படுக்கையருகில் வந்து மெதுவாக, 'நல்ல வேளை, பெரிய அடி என்று சொல்லி விடுவாரோ என்று பயந்து கொண்டிருந்தேன்' என்று, அவன் முகத்தில் வந்து விழுந்த தலைமயிரைத் தள்ளிவிட்டாள்.

ஜகன்னுதன் சிரித்தான். 'அப்படி இருந்தால் தான் என்ன? எனக்கொரு கவலையுமில்லை, சம்பாதிக்கிற மனைவி இருக்கிற வரை.'

கீதா இப்போது அவனைச் கோபிக்கவில்லை. 'கொஞ்சம் இருங்கள், சாப்பாடு கொண்டு வருகிறேன்' என்று எழுந்து போனுள்.

'அம்மா, வூட்டுக்குப் போய் வாரேன்' என்று குரல்கொடுத்தாள் மருக்கொழுந்து.

'உம், நேரமாய் விட்டதென்று உன் புருஷன் கோபித்துக் கொள்வானு?'

'நான் இப்போ அவனேடை இல்லிங்களே!'

'என்ன!'

'ஆமாம்மா. அது வேற எவளையோ பிடிச்சுகிட்டு அலேஞ்சுது. இதை நம்பிக்கிட்டா நான் பொறந்தேன்? அட போய்யான்னு விட்டுட்டு வந்துட்டேன். இன்னும் நாலு வீட்டிலே வேலை தேடிகிட்டு என் சம்பாத்தியத்திலே கவலையில்லாம இருக்கிறேன்...போய் வரட்டுங்களா அம்மா?'

கீதா பதில் சொல்லும் நிலையில்லை.

Phnoe: 713 Tel. ANANDJOTHI

சிற்றுண்டிகளுக்கு சிறந்த இடம்.

ஜோதீ

ஆனந்த பவான்

காபி ஓட்டல் & போர்டிங் ஹவுஸ்

கீழமாசி வீதி, மதுரை.

N.B.—ஜோதி ஆனந்தா காபி ஒர்க்ஸ் காபி பவுடரையே உபயோகியுங்கள்.

P. V. RAO BROS.,

Repairs of all Electrical goods & Diesel Specialists

49, Nagappier Street, Triplicane, MADRAS-5. (Opposite to STAR TALKIES)

'SERVE & PLEASE' Our Motto. "CLIENTS" Statisfation Our Asset

Elite Optical Co..

Speedily Executes your Orders Under Expert Organisation

BEST IN LENSES & FRAMES
A TRIAL WILL CONVINCE YOU

(Opposite to Hotel Everest)
246, Poonamalle High Road,
MADRAS-3.

வளர்க கைத்தறி! வாழ்க அவர் சமுதாயம் !!

பசவேஸ்வரர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சொஸைட்டி லிட்.

No. K. 1587

சுக்கிரவாரப்பேட்டை :: கோயமுத்தூர்.

தலைவர்: G. E. சின்னதுரை, B.Sc., M.C.

துணைத்தலைவர்: M. மருதாசலம் செட்டியார்

எங்களிடம் 100 நெ. நூலினால் கண்கவரும் கலர்களில் தயாரிக்கப்பட்ட எமது "பசவேஸ்வரர்—சேலைகளையே" வாங்குங்கள்.

எல்லா கோ-ஆப்டெக்ஸ் எம்போரியங்களிலும் எமது எஜண்டுகளிடமும் கிடைக்கும்.

M. N. பொன்னுசாமி செட்டியார்
Secretary.

பட விமர்சனம்

கலைப்பகுதி

ராணி லலிதாங்கி

சித்திரபுரி அரசி ராணி லலிதாங்கி ஒரு வீராங்கனை. ஆணுக்குப் பெண் தாழ்ந்தவள் அல்ல என்று பெண்களைக் கொண்டே தன் நாட்டு அரசியலை நடத்துபவள். அளகாபுரி இளவரசன் அழகேசன் ஒரு கலைஞன், சிறந்த போர் வீரன். மந்திரி மதிவாணருடைய மகள் மாயாவைக் காதலிக்கிறான். எப்படியாவது அளகேசனைக் கொன்று அளகாபுரி பட்டத்தை அடைய ஆசை கொள்கிறான் மலைநாட்டு மன்னன் காந்திபன். அளகாபுரியில் நடக்கும் ஒரு விற் போட்டியில் அழகேசன் காந்திபனை ஜயிக்கிறான். அதைப் பார்த்துக் கொண்டிருந்த லலிதாங்கி அழகேசன் மேல் காதல் கொள்கிறாள். ஆனால் மாயாவின் நடத்தையும் இன்னும் சில சம்பவங்களும் அழகேசனைப் பெண்ணினத்தையே வெறுக்கும்படி செய்கிறது. தற்கொலை செய்து கொள்ளத் துணிந்த அளகேசனை காங்கேய முனிவர் காப்பாற்றி பக்தி மார்க்கத்தில் அவன் மனதைப் பக்குவப்படுத்தினார். அளகேசன் தந்தை இறந்ததும் அளகேசனை அழகாபுரி அரியாசனத்திலும் அமர்த்தி வைக்கிறார் காங்கேயர். அளகேசனை எப்படியும் அடைய தீர்மானித்த லலிதாங்கியும் காங்கேயர் உதவியை நாடுகிறாள். அதெற்கென அரசவையில் ஒரு கலைவிழாவை ஏற்பாடு செய்து விழாவில் லலிதாங்கியின் நாட்டியம் அரங்கேற்றப்படுகிறது. பெண்களையேப் பார்ப்பதில்லை யென்று சபதங் கொண்ட அளகேசன் லலிதாங்கியின் கலைத் திறமைக்குத் தன் உள்ளத்தைப் பறிகொடுக்கிறான். காதலில் தோல்வியுற்ற மாயா காந்திபன் வலையில் விழுகிறாள். காந்திபன் லலிதாங்கியை அடைய முயற்சிக்கிறான். அந்த முயற்சியில் பலியாகிறார்கள் மாயாவும் காந்திபனும். ராணி லலிதாங்கி அளகேசனை அடைகிறாள். இன்பமும் பேரின்பமும் கூடுகிறது. இது தான் திரைக் கதை. பழைய காலத்து நாடக மேடைக் கதை தான். ஆனால் அதைப் புதிய கருத்துக்களோடு ஒரு புதுமை ஓவியமாகத் தயாரித்திருக்கிறார்கள் T. N. R. புரொடக்ஷன்ஸார்.

இன்று தமிழ் நாட்டின் தலைசிறந்த நடிகரான சிவாஜி கணேசன் தான் அளகேசனாக நடிக்கிறார். எத்தகைய பாத்திரமானாலும் சரி சிவாஜி கணேசனுக்கு அதைப் போற்றத்தக்க முறையில் நடிக்க முடியுமென்பதற்கு இந்தப் படம்

மற்ெரு எடுத்துக் காட்டு. வீரம் நிறைந்த இளவரசன் பாகத்திலும் சரி, துறவிக்கோலத்திலும் சரி, சிவாஜியின் நடிப்பு ஒன்றும் தரம் என்று சொல்லக் கூடியதாக இருக்கிறது. துறவிக் கோலத்தில் அவர் நடிப்பின் உச்சியை எட்டிப் பிடிக்கிறார் என்றால் அது மிகை யாகாது.

ராணி லலிதாங்கியாக நடிக்கும் பானுமதி வழக்கம் போல் நன்றாக நடித்திருக்கிறார். ஆனால் பானுமதியின் நாட்டியங்கள் நன்றாக எடுபட வில்லை. காரணம் வயதாக இருக்குமாவென்று நினைக்க வேண்டியதிருக்கிறது. இந்த நிலையில் அம்மையாருக்குக் கத்திச்சண்டை வேறு கொடுத்துத் தொந்திரவு பண்ணியிருக்க வேண்டியதில்லை.

மாயாவாக நடிக்கும் ராஜசுலோசனாவின் நடிப்பில் குறிப்பிடத்தக்க அம்சம் எதுவுமில்லாவிட்டாலும் குறைவுமில்லாமலிருக்கிறது. இவருடைய நாட்டியங்களும் பாராட்டத் தக்க முறையில் இல்லை.

காந்தீபன் பாகமேற்றுக் கதையில் வில்லனாக வருகிறார் வீரப்பா. நடிப்பில் குறைவில்லா விட்டாலும், புதுத்திருப்பங்கள் ஒன்றையும் காணோம். பழைய வீரப்பாதான் என்று ரசிகர்களுக்கு வெறுப்பு தட்டிவிடக்கூடாது.

நாடோடி கோஷ்டியினராக வந்து தங்கவேலு, முத்துலட்சுமி கோஷ்டி படம் முழுவதும் அலுப்புத் தட்டாத ஹாஸ்யம் வழங்குகிறார்கள். காலஞ் சென்ற கலைவாணர் பாணியில் ஹாஸ்யத்தோடு ஹாஸ்யமாக பல கருத்துக்களை உதிர்க்கிறார் தங்கவேலு. கலைவாணரைப் போல் அவைகள் தங்கவேலுடைய சொந்தச் சரக்காக இல்லாவிட்டாலும் அவைகளை நல்லமுறையில் வழங்கும் பெருமை தங்வேலுவைச் சாரும்.

பெருங்காயடப்பா காலியாகிவிட்டாலும் அந்த வாசனை போகாது என்ற முறையில் திறம்பட நடித்திருக்கிறார் காங்கேயராக வரும் நம்ம சாமா.

படத்தின் மற்றொரு சிறந்த அம்சம் இதில் சிறப்பாக அமைந்திருக்கும் சங்கீதம். முற்றிலும் கர்னாடக பாணியில் பதினான்கு பாடல்களை அமைத்து ரசிகர்களுக்கு இசை விருந்து அளித்திருக்கும் பெருமை G. ராமநாதனைச் சேரும். 'மாயா உலகத்திலே......'' என்று T. M. சௌந்திரராஜன் பாடும் பாட்டு எத்தனை முறை வேண்டுமானாலும் கேட்க வேண்டும் போலிருக்கிறது. இந்தப் பாடலுக்கு சிவாஜியின் உதடசைப்பு பாடுவது

சௌந்திரராஜன் என்பதையேநாம் மறந்துவிட கூடிய நிலையில் அமைந் திருக்கிறது.

அடுக்கு மொழியோ, முக்கல் முனங்கலோ இல்லாமல் சரளமான நடையில் அழகாக வசனம் அமைத்திருக்கிருர் தஞ்சை ராமையா தாஸ். கதையில் படிப்பினை எதுவும் இல்லாத குறைக்கு வசனத்தில் உயர்ந்த கருத்துக்களை புகுத்தி ஈடு செய்திருக்கிருர் வசனகர்த்தா.

ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு திருப்தியாக இருக்கிறது!

படத்தின் விருவிருப்பான போக்கு ரகுநாத்தின் டைரெக்ஷன் திறமைக்கு ஒரு எடுத்துக் காட்டு.

ஈ. வி. சரோஜாவின் நாட்டியம் அனுவசியமான வளர்ப்பு. நாட்டியமும் ரசிக்கக் கூடியதாக இல்லை.

மொத்தத்தில் சிவாஜியின் சிறந்த நடிப்பிற்கும் G. ராமனுதனின் தலை சிறந்த சங்கீதத்திற்கும் படத்தை ஒரு முறையல்ல, இரு முறை கூடப் பார்க்கலாம்.

—ஜாய்ஸ் பொன்னையா.

தந்தி: 'குமரன்' டெலிபோன்: { மில் 98 / ஆபீஸ் 533 }

குமரன் மில்ஸ் லிமிடெட்,

பூளைமேடு P. O; கோயமுத்தூர்.

நிறுவப்பட்டுள்ள கதிர்கள் ... 19,044
மேற்கொள்ளப்பட்டுள்ள விஸ்தரிப்பு ... 5,900

நாங்கள் உயர்தரமான 20s 36s 40s 60s 80s நிர். பருத்தி நூலும், 20S நிர். ஸ்டேபிள் பைபர் நூலும் தயார் செய்கிறோம்.

எங்கள் நூலை

சென்னை, ஆந்திர மாகாணங்களில் மிகுதியாக உபயோகப்படுத்துகிருர்கள்.

Sri. G. V. RAMASWAMY NAIDU &
Sri. G. V. MUTHUSWAMY NAIDU
Committee of Directors.

போன்: 2257.

தி பாலராமவர்மா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்.,

செங்கோட்டை.

தற்சமயம் உள்ள கதிர்கள்: **14,384**

மேற்கொண்டு நிர்மாணிக்கும்
கதிர்கள்: 3,472

கைத்தறித் தொழிலின் மகோன்னத வளர்ச்சி
உயர்ந்த ரக நூலேயும், மிக நேர்த்தியான
துணியையும் பொறுத்திருக்கிறது.
எங்கள் ஆலே மிக நேர்த்தியான
உயர்ரக நூல்களே
வினியோகிக்கிறது.

மானேஜிங் ஏஜண்டுகள்:

மெஸர்ஸ் கரையாளர் & ரங்கசாமி நாயுடு ஸன்ஸ் கம்பெனி

பரிசு பெற்றது

முதல் இதழ் விமர்சனம்

எம். சீனி.

புதுமை கண்டேன். முதல் இதழிலேயே சிறந்த விமர்சனத்திற்கு பரிசளிக்கப்படுமென்று அறிவித்திருக்கும் புதுமையையும் கண்டேன். தோன்றி உடன் மறையும் எத்தனையோ பத்திரிகைகள் போலல்லாது திறமையாக நடத்த வேண்டும்; சிறக்க வளர்க்க வேண்டும் என்ற ஆர்வம்-உறுதியுடன் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்ற நம்பிக்கையை அந்த அறிவிப்பு வெளிப்படுத்துகிறது; ஆண்டு சந்தா செலுத்த விரும்புகிறவர்களின் ஐயத்தை நீக்குவதாயிருக்கிறது.

சுதந்திர நூற்றுண்டு விழா நாளான இந்த சுபதினத்தில் புதுமை வெளிவருவதும் ஒரு நல்ல அறிகுறியாம். புதுமையும் தனது நூற்றுண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுமென்பது மட்டுமல்ல, சுதந்திரமடைந்த நாட்டு மக்களோடு இணைந்து அவர்களது அரசியல் சமூகப் பிரச்சனைகளில் பங்கெடுத்துக் கொள்ள புதுமைக்கிருக்கும் ஆர்வத்தையும் வெளிப்படுத்துவதாயுள்ளது. பணத்திற்காகவோ புகழுக்காகவோ ஆரம்பிக்கப்படும் பத்திரிகையாயில்லாது லட்சியத்திற்காக ஆரம்பிக்கப்பட்டது என்பதையும் நினைவு படுத்துகிறது.

"கமிஷன் கவனிக்குமா?" என்ற தலையங்கம் அன்றுட வாழ்க்கைப் பிரச்சனையில் புதுமை மக்களுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கம், அவர்களது நலன்களுக்காகப் போராடும் தளபதி என்றெல்லாம் நினைக்கத் தோன்றுகிறது. ஆசிரியர் ஒரு காங்கிரஸ் பிரமுகராயிருப்பதால் அரசாங்கத்தின் எந்தச் செயலுக்கும் சப்பைக் கட்டு கட்டுவாரோ என்ற சந்தேகத்தையும் நீக்கிவிட்டது. வளர்க புதுமை!

புதுமை சாதாரண மலரல்ல; தேன் நிறைந்த மலர் என்பதை முதல் இதழே வாசக வண்டுகளுக்கு வெளிப்படுத்தி விட்டது. இடம் பெற்றிருக்கும் எழுத்தோவியங்கள் யாவும் அவ்வளவு சிறப்பு மிக்கவை. பெரும் பத்திராதிபரும் இலக்கிய ஆராய்ச்சியாளருமான திரு. **கி. வா. ஜ.** அவர்கள் வாழ்த்து அனுப்பியதுடன் நில்லாது இலக்கிய விருந்தும் தந்திருப்பதால் கலைகளின் தேவியான கலைமகளின் ஆசி புதுமைக்கு கிடைத்து விட்டது.

மங்கிக் கிடக்கும் மூர்த்திகளைத் தேடி அலையும் திரு. **தொண்டமான்** அவர்கள் தமிழ்க்கடலில் மூழ்கி மறைந்து கிடந்த இரு நல்முத்துக்களை வெளிக் கொண்டு வந்து தந்திருப்பது புதுமை பெற்ற பேறுதான். கச்சவடம், பீற்றிக் கொள்ளல் ஆகிய இரு தமிழ் சொற்களை அவர் தம் கட்டுரையில் பயன்படுத்தி பழக்கத்திற்கு கொண்டு வந்திருப்பதானது சுவர்க்க இன்பம் பயப்பதாயிருக்கிறது.

முத்து விராயிப் பாட்டு மற்றெரு சிறப்பு. பழந் தமிழ் இலக்கியங்களைப் பேணிக் காத்து புத்துயிரூட்ட முயலும் அறிஞர் குழாமோடு இணைந்து பணிபுரிய புதுமையும் விரும்புகிறது. வளரட்டும் அதன் விருப்பம்! முத்து வீராயி தொடர்ந்து வெளிவர வேண்டும். தவறு ஒன்று செய்து விட்டீர்கள். **S. D. S. யோகி** என்று அச்சாகியிருப்பது ஒரு தமிழ் அறிஞரை அகௌரவப் படுத்துவதாயுள்ளது. அழகு தமிழில் அதைப் பதிப்பித்திருக்க வேண்டும்.

புதுமையில் போதிய அளவு தமிழ் மணம் கமழவில்லை. அதனுல் பெரும் வருத்தம்.

"சாவினும் தமிழ் படித்தே சாக
வேண்டும்—என்றன்
சாம்பலிலும் தமிழ் மணமே கமழ
வேண்டும்"

என்று எண்ணித் துடிக்கும் இளம் தலை முறையின் காலமல்லவா இது? அவர்களின் புகழ் மொழிகள் புதுமையை அலங்கரிக்க வேண்டாமா?

நல்ல தமிழ் சொற்களிருக்க தபால், கமிஷன், இராஜ்யம், ஸ்தல ஸ்தாபனம் போன்ற வேற்று மொழிச் சொற்களை தலையங்கத்திலேயே பயன்படுத்தியிருப்பது பெரும் வியப்பைத் தருகிறது. புதுமை இதை விரும்பமாட்டாள்; விரைவில் நீக்கி விடுவாள் என நம்புகிறேன்.

ஆசிரியரின் நாடகம் பட்டபாடு அருமை! அருமை! இயல், இசை கூத்து மூன்றுமாகக் கலந்து புதுமை தமிழ் அன்னைக்கு விருந்து படைத்திருக்கிறாள். நாடகம் தாங்கி நிற்கும் பொருளோ இலக்கிய மதிப்பு மிக்கது.

'உமா' தமிழ் பத்திரிகையுலகில் ஒரு ஒளி விளக்கு! தமிழ் பாடும் தும்பி! தேய்ந்து கிடந்த அதற்கு உயிரூட்டி, வளமூட்டிய வண்ணக் கரங்கள் புதுமையையும் அலங்கரித்திருப்பது பூரிப்பைத் தருகிறது. இனிமையும் ஆழமுமிக்க அருமையான சிறுகதையாக பொறுக்கித் தந்திருக்கிறார் **பூவை!**

வல்லிக் கண்ணன் மனோதத்துவத்திற்குள் நுழைந்து விட்டார். **'வே. கி'** விகடக் கட்டுரை வழங்கியிருக்கிறார். சிறுவர்களுக்கு குழந்தை எழுத்தாளர் சங்கச் செயலாளரே சிற்பச் சிறுகதை தந்திருக்கிறார்.

இப்படி நவரசமும் கலந்த நற்கனியாக புதுமை பழுத்து உதிர்ந்திருக்கிறது. நாலணா தந்ததே மறந்து விடுகிறது.

கவிதைகளில் மட்டும் ஏதோ குறை தட்டுப்படுகிறது; குறை கவிதையில் மட்டுமல்ல. உங்கள் அச்சு அலங்காரமும் அதற்குப் போதாது. மூத்தாள் குழந்தைகளைப் போல அவைகளுக்கு ஆடை அணிவித்திருக்கிறீர்கள். படத்துடன் நன்றாக வெளியிட்டிருக்கலாம். 86-வது பக்கக் கவிதையை விளம்பரத்திற்கு எதிரே மூளி அலங்காரியாக கொண்டு நிறுத்தியிருப்பது படுமோசம்!

பொதுவாக விளம்பரங்கள் சிறிது அதிகந்தான். விளம்பரங்கள் குறைக்கப்பட்டிருந்தால் இலக்கியத் தரம் உயர்வாகத் தெரிந்திருக்கும். வளரும் குழந்தைதானே, உணவூட்டம் வேண்டாமா என்று சமாதானம் சொல்லக் காத்திருக்கிறீர்கள். அறிவேன். குழந்தை வளர வளர வேண்டாத பால் பொடிகளும், பால் புட்டிகளும் விலகிவிடுவது போல விளம்பரங்களும் மறைந்துவிடும் என்று நம்புகிறேன்.

காண்டேகரின் கதைகளில் பல பக்கங்களை உருப்போடுமளவிற்கு பக்திமக்க ரசிகர்கள் தமிழ் நாட்டில் உள்ளார்கள். அவரது பொன் மொழிகள் பல புதுமையில் இடம் பெற்றிருப்பது சிறப்பிற்குரியது.

படங்கள் மிக அருமை. முகப்புப் படம் பொருள் நிறைந்ததாயும் கவர்ச்சி மிக்கதாயுமிருக்கிறது. மற்றப்படங்களும் அப்படியே! கதைகளின் கருத்துக்கேற்றபடி விளக்கம் தருகின்றன. 69-ம் பக்கத்தில் அன்புப் பெருக்கால் காதலியைத் தியாகம் செய்யும் நல்லவனின் "உரு

சுயநலம், பேராசை, கோழைத்தனம் முதலானவைதான் நம் சுதந்திரத்தை இழக்கச் செய்யும் ஜன்ம சத்துருக்கள்.

வம் மங்கிய நிலையில் அர்த்தத்தோடு வரையப்பட்டிருப்பதை எவ்வளவும் பாராட்டலாம்.

தலைப்புகளும் எடுப்பாக அச்சிடப்பட்டிருக்கின்றன. 7 வது, 33 வது பக்கத் தலைப்புகள் மட்டும் சோடை விழுந்துவிட்டன. இந்தக் குறை கவனிக்கப்பட வேண்டும்.

பல அளவுள்ள எழுத்துக்களை கலந்து கலந்து அச்சிட்டு எழுத்துத் துவையல் செய்ய அவசியமில்லை. சிறு எழுத்துக்களே படிக்க வேகம் தருவதாயிருக்கிறது.

புதுமையின் அளவு வாரப் பத்திரிகைக்கு ஏற்றதாயிருப்பதால் புதுமை வார இதழாக மாறுமோ என்ற சபலமும் தட்டுகிறது. அப்படி நேர்ந்தால் யார்தான் மகிழார்? மாத இதழ்தான் நோக்க மென்றால் கலைக்கதிர், காவேரி, கலைமகள் போன்ற அமைப்பே பொருத்தமானது.

சமீப மாதங்களில் திடீர் திடீரென சில பத்திரிகைகள் வெளிவந்தன. அவைகளைப் பார்த்தவுடனேயே சோர்வு தட்டியது; சவலைக் குழந்தைகள் மாதிரியிருந்தன. இவை பிழைக்குமா என்ற சந்தேகம்! புதுமையைக் கண்டதுமே இது 12 ராத்தல் குழந்தை. பயில்வானாக வளரும் என்ற நம்பிக்கை உண்டாயிற்று.

அழகிய முகப்பு, நல்ல அச்சு கட்டுக் கோப்பு, பெருமை தரும் எழுத்தோவியங்கள் இவை மட்டும் அதற்குக் காரணமா யிருக்க முடியாது. பொது வாழ்வில் எல்லையில்லா இன்னல்கள், எதிர்ப்புகள் இவைகளில் அடிபட்டு உரமடைந்த ஆசிரியர், ஆசிரியப் பணிபுரிந்து அநேக புத்தகங்கள் வெளியிட்டு,

பெண்களுக்கு அழகு என்பதை ஆடையாலும் ஆபரணங்களாலும் காணமுடியாது. பணியாற்றுவதில்தான் உண்மையான அழகு பரிணமிக்கிறது.

சினிமாத் துறையிலும் திக்விஜயம் செய்து அனுபவச் சுரங்கமாகத் திகழும் நிர்வாக ஆசிரியர், சொந்த அச்சகம், யாவற்றிற்கும் மேலாக அவர்களிடமிருக்கும் ஆர்வம். ஊக்கம், உறுதி, எல்லாமாக புதுமையின் எதிர்காலத்தில் ஒரு பெரும் நம்பிக்கையைத் தருகின்றன. கடைசியாக வொன்று......

உலகைச் சுற்றி, செய்திக் கதிர், விகடத்துணுக்கு, ஒரு பக்கக் கதை, படவிமர்சனம், பொன் மொழிகள் முதலிய பல அம்சங்கள் இருப்பது உண்மைதான். இருந்தும்...

தன் பெயருக்கேற்ப புதுமையான ஒரு பகுதி நிச்சயம் இருந்தாக வேண்டும்.

தமிழ் இலக்கியம், அரசியல் நிகழ்ச்சிகள், தலைவர்கள் இவற்றில் ஏதாவதொரு பொருளை வைத்து ஒவ்வொரு இதழிலும் அறிஞர்கள், எழுத்தாளர்கள், வாசகர்கள், பொதுமக்கள் பலரும் பலவித கோணங்களிலிருந்தும் விமர்சனம் செய்யும் ஒரு வாய்ப்பு...... பொது மேடை புதுமையில் அமைக்கப்பட வேண்டும். காலத்திற்கேற்றது; புதுமைக்குப் புதுமை தருவது. அவசியம் செய்வீர்கள் என எதிர் ... மை வாழ்க!

197687

உண்மையில் உறுதியாக,

குறைந்த செலவில்

உங்கள் வீட்டை கட்ட

இதோ நவீன முறை!



நிரந்தரமானது
இணைக்க சுலபம்
பார்வைக்கு
திருப்தி
கொடுக்கும்

சிக்கனமானது
ஜலம் உட்புகாது!
தீயை தடுக்கக்
கூடியது

"EVEREST"
ASBESTOS CEMENT
TRAFFORD SHEETS



A.C. ட்ராபோர்டு &
ப்ளெயின் ஷீட்டுக

A.C. மழை ஜல பைப்புகள்

M. KUPPUSAWMY NAICKER

எம். குப்புசாமி நாயக்கர்

ஸ்டாக்கிஸ்டுகள்: ஆஸ்பெஸ்டாஸ் ஸிமெண்ட் லிமிடெட்

15, செம்புதாஸ் தெரு, சென்னை-1

30

ஆண்டுகளாக நாடெங்கும்

உழவர்கள் நம்பி வாங்குவது

PSG



பம்பிங் செட்

★ குறைந்த செலவு
★ சிறந்த உழைப்பு
★ நீடித்த சேவை
★ ஓசையில்லாத ஓட்டம்

விவரங்களுக்கு எழுதுங்கள் :



பி. எஸ். ஜி.

இண்டஸ்டிரியல்ஸ் இன்ஸ்டிடியூட்

பீளமேடு போஸ்டு, கோயமுத்தூர், தென் இந்தியா.

Edited and Published by K. T. Kosalram and Printed by G. Rengiah, Manager, Mohan Ram Press, at 283-A, T. H. Road, Madras-5.